உ

சிவமயம்.

பாண்டிநாட்டிலுள்ள

கோயிலூர் மடாலயத்தின்

சிஷ்யராகிய

சொர்னநாதபுரம்

# பழனியப்ப ஐயா அவர்கள்

இயற்றிய

# பாடற்றிரட்டு.

இஃது

ஷை மடாலய சிஷ்யராகிய

ஒய்யக்கொண்டான் சிறுவயல்,

முரு - அள -

சுப்பிரமணியஞ் செட்டியாரவர்களால்

தஞ்சாவூர், சதாவதானம,

சுப்பிரமணிய ஐயரவர்கள்

முன்னிலையில்

பரிசோதிக்கப்பட்டு,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1898-ஸு

14587

உ

சிவமயம்.

சொர்ணநாதபுரம்.

பழனியப்ப ஐயாவவர்கள்

இயற்றிய

# பலபாடற்றிரட்டு.

உப்பூர்,

## வெயிலுகந்த விநாயகர் பதிகம்.

அபபமருஞ்சடாமவுலி நடேசன்றந்த
வருமருந்தேபோற்றிமுக்கண் ணமலாபோற்றி
செபபரியபேரின்பக் கடலேபோற்றி
சிறந்தமாதவர்க்குரிய திருவேபோற்றி
வெப்பமுறுங்கடைமகளிர் மையலநீககி
மேலோர்பாலெனைச்சேர்கக வேண்டுமெபோற்றி
யொப்பொருவரில்லாத வொருவபோற்றி
யுபபூரவாழ்வெயிலுகந்த கணேசாபோற்றி. (க)

ஈனமின்னார்மையல்கொண்டு நைந்தேன்றன்னை
யினியேனுமிரட்சிக்க வேண்டும்போறறி
வானவர்கடுதிக்குமலர்ப் பதத்தாய்போற்றி
மன்றுள்நடமாடிதந்த மணியேபோற்றி
தேனனையாய்போற்றிசெழுங் கனியேபோற்றி
தெள்ளமுதேபோற்றிதீங் கரும்பேபோறறி
யூனமுளதாம்பவத்தைத் தீர்ப்பாய்போற்றி
யுப்பூர்வாழ்வெயிலுகந்த கணேசாபோற்றி. (உ)

இன்னலுற்றேயிதுகாறு நைந்தேன்றன்னை
யிரட்சிக்கவினியேனுமிரங்குபோற்றி
பன்னரியநடராசன்பாலாபோற்றி
பாவையராசையைநீத்தோர் வைப்பேபோற்றி

கன்னமொடுதுதிக்கைமதக்களிறேபோற்றி
கற்கண்டேபோற்றியென்றன்கண்ணேபோற்றி
யுன்னரியபேரின்பக்கடலேபோற்றி
யுப்பூர்வாழ்வெயிலுகந்த கணேசாபோற்றி. (௫

வேதமுடிவாகியமெய்ப்பொருளேபோற்றி
விண்ணவர்களேத்துமலர்ப் பதத்தாய்போற்றி
சாதலொடுபிறத்தலில்லாச்சபேசன்றந்த
தந்திமாமுகம்படைத்ததலைவாபோற்றி
காதலபலவுற்றடியே னையாவண்ணங்
கருணைசெய்யவேண்டுமருட்கடலேபோற்றி
யோதுதமிழப்புலவாதமகுரியாய்போற்றி
யுப்பூர்வாழ்வெயிலுகந்த கணேசாபோற்றி. (௬

அம்பலவன்றனக்குரிய மகவேபோற்றி
யாறுமாமுகம்படைத்தோன்றுணைவாபோற்றி
செம்பதுமமலரோனுமாலும்போற்றுந்
திருவடியாயபோற்றிசிந்தாமணியேபோற்றி
கம்பலையெல்லாந்தீர்த்தே யினிமேலேனுங்
கடாட்சிப்பாயபோற்றியருட்கடலேபோற்றி
யும்பர்கோனேத்துமலர்ப்பதத்தாய்போற்றி
யுப்பூர்வாழ்வெயிலுகந்த கணேசாபோற்றி. (௭

ஆழியின்மேலகளையமர்ந்த வமலாபோற்றி
யம்பலவாணன்றந்தவமுதேபோற்றி
காழிவருஞ்சம்பந்தன்றுணைவாபோற்றி
கன்னலேபோற்றியின்பக்கனியேபோற்றி
வாழியெனத்தமிழ்பாடுமடியார்தங்கள்
மனக்கவலைதீர்க்கவருமருந்தேபோற்றி
ஊழிபலகடந்துநின்றவொருவபோற்றி
யுப்பூர்வாழ்வெயிலுகந்த கணேசாபோற்றி (௮

...ாயதிலாப்பேரின்பக்கடலேபோற்றி
கற்றமாதவருள்ளக்களிப்பேபோற்றி
...ைசிலையாவனைதில்லைமறையோனீன்ற
மதக்களிறேபோற்றியின்ப வைப்பேபோற்றி

விரைமலர்த்தார்க்குழல்மகளிராசைநீக்கி
விரத்தியெனும்விழுச்செல்வந்தருவாய்போற்றி
யுரைமனங்கள்கடந்துநின்றவொளியேபோற்றி
யுப்பூர்வாழ்வெயிலுகந்த கணேசாபோற்றி. (௭)

பொன்மன்றனருளியநற்புதல்வாபோற்றி
பூரணனேபோற்றிபுராதனனேபோற்றி
கன்னலேபோற்றிநறுங்கனியேபோற்றி
கற்பகமேபோற்றியருட்கடலேபோற்றி
யன்னையினுநற்றுணையேபோற்றியெங்க
ளாரமுதேபோற்றிமுக்கணரசேபோற்றி
யுன்னையன்றிவேறுகதி யில்லேன்போற்றி
யுப்பூர்வாழ்வெயிலுகந்த கணேசாபோற்றி. (௮)

நற்றமிழாற்றொடைபுனைந்தநால்வருய்ய
ஞானவமுதீந்தருளு நடேசன்றந்த
கொற்றவனேபோற்றிகுணக்குன்றேபோற்றி
குரவனேபோற்றிகுறைதீர்ப்பாய்போற்றி
குற்றமதேயான்செயினுங்குணமாக்கொண்டு
கோதகலத்திருக்கருணைகூர்வாயபோற்றி
யுற்றதுணைநீயன்றிவேறுமுண்டோ
வுப்பூர்வாழ்வெயிலுகந்த கணேசாபோற்றி. (௯)

பத்தர்தமக்கெளியதில்லைப்பதிநடேசன்
பாலனேபோற்றிபராபரனேபோற்றி
சித்தர்தொழுதேத்துமலர்ப்பதத்தாய்போற்றி
திசைமுகனுமியரேத்துந்தேவேபோற்றி
சத்தொடுசித்தானந்தவடிவாய்நின்ற
தனிமுதலேபோற்றியெங்கடவமேபோற்றி
யுத்தமர்களுளத்துதித்தவுணர்வேபோற்றி
யுப்பூர்வாழ்வெயிலுகந்த கணேசாபோற்றி. (௰)

பதிகம் முற்றிற்று.

# பழனிமலைச்
# செட்டியார் மாலை.

## காப்பு.

சட்டிதன்னிற்பூசிப்போர் தமக்குத்தேகசவுக்கியமு
மட்டினிதியும்பேரின்பும் வழங்கும்பழனிமலையிலுறை
செட்டியார்மேனன்மாலை செப்பத்தில்லைமன்றனருள்
குட்டியானைமுகம்படைத்த கோமானிருதாள்காப்பாமே. (௧)

தலைமகள்கொழுநனான சபாபதிவணிகன்றந்த
மலையுறைபழனியப்ப வணிகர்பாணிதியங்கொள்வான்
சிலையரிமருகராமச் செட்டியார்மாலைசெப்பக்
கலைமகடுய்யசெம்பொற் கமலங்கள்காப்புத்தானே. (௨)

குருவினுக்குக்குருவாகுங் கழனிமுத்துராமனைப்போற் கோலங்கொண்டே, யிருநூறுகவிபோற்றென் றருளினாரஃதின்னதென்றுகாணேன, மருவுபின்னோர்நாள்வந்தென் மைந்தன்போல்ஞானிசெட்டிமகன்யானென்று, திருவளிப்பான்மரபுளாத்தார்நடேசனருள்பழனியபபச் செட்டியாரே. (௩)

வாழிதில்லைமன்றுளென்றும் வாழும்வள்ளல்வாழியே
வாழிவாழிபழனியப்ப வணிகர்வாழிவாழியே
சோழிவாழிமயிலும்வாழி கூர்மைவேலும்வாழியே
சாழிமேவுசவுணியக் கவிஞன்வாழிவாழியே. (௪)

எனையாளுமருணைவெற் பெனுங்குரவன்வாழியே
பனனுமன்றன்வாழிபழனி யப்பவணிகன்வாழியே
தன்னைநேரில்கழனிமா தவத்தினோர்கள்வாழியே
மன்னுபாமடந்தைநாவில் வாழியென்றும்வாழியே. (௫)

### நூல்.

அத்திமுகனுக்கிளைய செட்டியாரே தில்லை
அமலஞானிச்செட்டியாரீ செட்டியாரே
சத்தியவாக்குடைய செட்டியாரே சகல
சற்குணமுமேநிறைந்த செட்டியாரே
பத்தியாய்நம்பினேற்குச் செட்டியாரே பொற்
பாக்கியந்தாதாளுமையா செட்டியாரே
சித்திமிகவுடைய செட்டியாரே யன்பர்
சிந்தைப்பழனியப்பச் செட்டியாரே. (௧)

அற்பமாயளிக்கவென்றாற் செட்டியாரே கையு
மங்கமுநாணுமையா செட்டியாரே
பொறபதிதனத்தையிங்கே செட்டியாரே யன்றே
பொருத்தநினைத்திலீரே செட்டியாரே
கற்பகமுநாணுங்கொடைச் செட்டியாரே தில்லைக்
கற்பகக்கரிதுணையாஞ் செட்டியாரே
சற்புருடற்கீந்திடச் செட்டியாரே நிதி
தாரூநடனீபழனிச் செட்டியாரே. (௨)

படைவீடோராறுடைய செட்டியாரே வேற்
படையைக்கை யிற்பிடித்த செட்டியாரே
சடையோன்புதல்வரான செட்டியாரே ஞான
சற்புருடாமெச்சுகின்ற செட்டியாரே
கடையேனையாளுமையா செட்டியாரே யெற்குக்
கனகமிகத்தாருமையா செட்டியாரே
கொடையாளியாகின்ற செட்டியாரே வரங்
கொடுக்கும்பழனியப்பச் செட்டியாரே. ௩)

தாசியர்க்கோமிகவீந்தேன் செட்டியாரே மறையோர்
தமக்குமிகவீந்தேனையா செட்டியாரே
வேசியருக்கீயவென்றாற் செட்டியாரே யுமை
மேவித்தனங்கேட்கலாமோ செட்டியாரே
பேசிடததான்வாயுமுண்டோ செட்டியாரே நீர்தான்
பேசினுங்கொடுப்பீரோகாண் செட்டியாரே
மாசின்மன்றனீமுருகச் செட்டியாரே நிதி
வழங்கும்பழனியப்பச் செட்டியாரே. (௪)

அன்றுவந்துகாத்திருந்தேன் செட்டியாரே யொன்று
மறையாமௌனமுற்றீர் செட்டியாரே
யின்றுவந்துகாத்திருக்கச் செட்டியாரே நீர்தா
னிரங்காததென்கொடுமை செட்டியாரே
பொன்றுநிதியருளுஞ் செட்டியாரே யான்
புரிகின்றவாணிபத்தாற் செட்டியாரே
யன்றியோர்விதத்தும்வேண்டேன் செட்டியாரே தில்லை
யம்பலவணீபழனிச் செட்டியாரே. (௫)

பாதகமலந்தாருஞ் செட்டியாரே பொற்
பாக்கியமிகவுந்தாருஞ் செட்டியாரே
நீதிமிகவுந்தாருஞ் செட்டியாரே மகா
நிராசைமிகவுந்தாருஞ் செட்டியாரே

தாதையுந்தாயுநீரே செட்டியாரே யெற்குச்
சகலசம்பத்துநீரே செட்டியாரே
சீதரன்வணங்குபதச் செட்டியாரே தில்லைச்
செல்வனருளும்பழனிச் செட்டியாரே. (௬)

யும்முறவு போலல்லகாண் செட்டியாரே மூட
ருறவினைச் சொல்லக்கேளுஞ் செட்டியாரே
செம்மனிராகுமென்பார் செட்டியாரே கையிற்
திரவியமிருந்ததென்றாற் செட்டியாரே
கம்மல்சற்றுற்றதென்றாற் செட்டியாரே தூரக்
கதறிக்கொண்டோடுவார்காண் செட்டியாரே
நம்முறவராகின்ற செட்டியாரே நிதி
நலகுநடனீபழனிச் செட்டியாரே. (௭)

எல்லாருக் கும்பெரிய செட்டியாரே பொல்லா
எமனையும்பயமுறுத்துஞ் செட்டியாரே
கல்லாதமூடருக்குச் செட்டியாரே யொரு
கனவினுமறியொணாத செட்டியாரே
பொல்லார்க்குப்பொல்லாத செட்டியாரே யன்பு
புரிவார்தமக்கினிய செட்டியாரே
தில்லாபுரியனருள் செட்டியாரே யெற்குத்
திருமிகத்தாருமையா செட்டியாரே. (௮)

பிச்சைவாங்கிநான்பெற்ற செட்டியாரே யுங்கள்
பெருமையெல்லாந்தெரியுங்காணுஞ் செட்டியாரே
யிச்சித்துத்தமிழினுக்காச் செட்டியாரே யுந்தை
யிரவிற்றாது சென்றாரல்லோ செட்டியாரே
ரச்சுபாம்புபுலிக்காகச் செட்டியாரே மன்றுள்
நனருயாடினாரல்லோ செட்டியாரே
யச்சமோகிசஞ்சொலத்தான் செட்டியாரே நிதி
யருளும்பழனியப்பச் செட்டியாரே. (௯)

குடங்குடமாகச்செந்தேன் செட்டியாரே மிக்க
கொத்துக்கொத்தாய் வாழைப்பழஞ் செட்டியாரே
திடமாஞ் சர்க்கரைமுதற் செட்டியாரே வாசத்
திரவியஞ்சந் தனம்பனிநீர் செட்டியாரே
யிடமாதிமூன்றுமொத்துச் செட்டியாரே யுமக்
கெந்நாளபிடேகஞ்செய்வேன் செட்டியாரே
நடராசனமைந்தரான செட்டியாரே நிதி
நல்கும்பழனியப்பச் செட்டியாரே. (௰)

தாதைமுதாதைமுதற் செட்டியாரே நாங்கள்
தனிக்கடைவைத்திருந்தோஞ் செட்டியாரே
யீதுமக்குத்தெரியாதோ செட்டியாரே மிஞ்ச
ஏமமளித்தேயருளுஞ் செட்டியாரே
காதலர்க்குக்கைபழகச் செட்டியாரே யிப்போது
கடைவிரைந்துவைக்கவேணுஞ் செட்டியாரே
மாதனமதற்கருளுஞ் செட்டியாரே தில்லை
மன்றனருளும்பழனிச் செட்டியாரே. (௰௧)

யீதலினஞ்செய்வனெனச் செட்டியாரே கையி
லிருந்தபொன் னிற்சிறிது செட்டியாரே
மாதுலர்கைவசஞ்செய்தார் செட்டியாரே யதை
வாங்கமனமில்லைகாணுஞ் செட்டியாரே
யாதலினாற்பொன்வேணுஞ் செட்டியாரே யதற்
காகவும்மிடத்தில்வந்தேன் செட்டியாரே
யாதரவுவேறில்லைகாண் செட்டியாரே நிதி
யருளுநடனீபழனிச் செட்டியாரே. (௰௨)

மாதுலர்பாலுற்றபொன்னைச் செட்டியாரே கேட்டு
வாங்கமனமில்லாமற் செடிட்யாரே
யீதல்முதலானதுக்குஞ் செட்டியாரே குடும்பத்
தியல்பாஞ்செலவினுக்குஞ் செட்டியாரே
பேதையர்பாற்கைமாற்றுச் செட்டியாரே யுறுதி
பேசினும்வாங்கினேனே செட்டியாரே
யோதுமந்தத்தவணைக்குச் செட்டியாரே நிதி
யுதவுநடனீபழனிச் செட்டியாரே. (௰௩)

கைமாற்றுத்தந்தவரைச் செட்டியாரே யெதிரே
காணுமுன்னடுங்குமையோ செட்டியாரே
சும்மாவவருறினுஞ் செட்டியாரே கேட்டாற்
சொல்லுவதென் னத்தையென்றே செட்டியாரே
யம்மாவுளநைகிறதே செட்டியாரே யிதை
யகற்றும்விரைவினிலே செட்டியாரே
யும்மாணைகதிவேறில்லை செட்டியாரே நிதி
யுதவுநடனீபழனிச் செட்டியாரே. (௰௪)

கைமாற்றினும் வாங்காமற் செட்டியாரே யெற்குக்
கனகம்விரைந்துதாருஞ் செட்டியாரே
சும்மாதரவேண்டாங்காணுஞ் செட்டியாரே தமிழ்
சொல்லுகிறேன்தாருமையா செட்டியாரே

# செட்டியார் மாலை.

யிம்மாநிலம்புகழச் செட்டியாரே முத்தி
ணிப்பிவாணிபத்தார்ருருஞ் செட்டியாரே
யும்மாணையுந்தையாணை செட்டியாரே நிதி
யுதவுநடனீபழனிச் செட்டியாரே. (௰௫

ஈதளவு நாங்களெல்லாஞ் செட்டியாரே மிடி
யெப்படியென்றேயறியேஞ் செட்டியாரே
தாதைதாமுள்ளநாளுஞ் செட்டியாரே யவர்க்குத்
தாதைமு தாதைநாளுஞ் செட்டியாரே
கோதிலாப்பிரபுவான செட்டியாரே யும்மைக்
குறுகினேற் கிடுக்கணுண்டோ செட்டியாரே
மீதியாத்தனமருளுஞ் செட்டியாரே தில்லை
வேந்தனருளும்பழனிச் செட்டியாரே. (௰௬)

வரவின்றிச்செலவழித்தல் செட்டியாரே தன
வணிகர்முறை யன்றென்பதைச் செட்டியாரே
திரணமாய்நினைத்தேனையா செட்டியாரே யெற்குத்
திரணமல்லவோநிதியஞ் செட்டியாரே
சரணத்தைநம்பினதாற் செட்டியாரே நீர்தாந்
தருவீரென்றெண்ணமுண்டு செட்டியாரே
கரவிலாவாணிபத்தாற் செட்டியாரே நிதி
காட்டுநடனீபழனிச் செட்டியாரே. (௰௭)

காதலிமங்கிலியம்விற்றே செட்டியாரே யுந்தைக்குக்
கடலூர்க்கலையனூர்தாஞ் செட்டியாரே
கோதின்றிக்குங்கிலியமீயச் செட்டியரே யவர்க்குக்
குபேரச்செல்வமீந்தாரல்லோ செட்டியாரே
யாதலாலெனக்குத்தாருஞ் செட்டியாரே யும்மை
யையமின்றிநம்பினேன்காண் செட்டியாரே
மாதவர்சிகாமணியே செட்டியாரே தில்லை
வள்ளலருளும்பழனிச் செட்டியாரே (௰௮)

வாக்குசகாயம்பண்ணுஞ் செட்டியாரே யும்மை
வருத்தப்படுத்தவில்லை செட்டியாரே
பூக்கொடுவணங்குகிறேன் செட்டியாரே யுமது
பொற்பதத்தைப்பிடிக்கின்றேன் செட்டியாரே
பாக்கியமிகவுமுள்ள செட்டியாரே யெற்குப்
பாக்கியமிகவுந்தாருஞ் செட்டியாரே
மாக்களெல்லாம்புகழுஞ் செட்டியாரே தில்லை
வள்ளலருள்பழனிச் செட்டியாரே. (௰௯)

மடத்திலுறுநம்பணத்தைச் செட்டியாரே சிறிது
வட்டிக்குநான் வாங்கினன்காண் செட்டியாரே
திடத்த வறம்புரிவான் செட்டியாரே யதைச்
சிக்காமற்கொடுக்கவேணுஞ் செட்டியாரே
விடத்தையருந்தலாமோ செட்டியாரே வயிறு
மிகத்தான்பசித்தபோதுஞ் செட்டியாரே
குடத்தனைப்பெண்ணுக்குஞ் செட்டியாரே தனங்
கொடுநடனீயும்பழனிச் செட்டியாரே. (உ0)

எண்ணின்மேலேட்டின்மேற் செட்டியாரே பே
ரெழுதுமுந்தநாமத்துடன் செட்டியாரே
நண்ணுமென்றன்குருநாமஞ் செட்டியாரே யன்பால்
நானுமெழுதிவைத்தேன் செட்டியாரே
புண்ணியமிலாககொடியோர் செட்டியாரோ நிந்தை
புகன்றதைக்கிறுக்கினரோ செட்டியாரோ
கண்ணிலவனைப்பழிக்கச் செட்டியாரோ சோதி
கனகந்தாரும்பழனிச் செட்டியாரே. (உக)

செட்டுச்செய் யாததாற் செட்டியாரே யிருந்த
திரவியமறத்தாற்போச்சு செட்டியாரே
முட்டுப்பட்டுநும்பால்வந்தேன் செட்டியாரே யிந்த
முட்டினைநீக்குங்காணுஞ் செ—டியாரே
செட்டுமாருமற்செய்யச் செட்டியாரே யெற்குத்
திருமிகத்தாருமையா செட்டியாரே
யிட்டுண்டுவாழ்வதற்குச் செட்டியாரே நட
னீயும்பழனியப்பச் செட்டியாரே (உஉ)

என்னுதாரந்தெரியாதோ செட்டியாரே யுமக்
கெல்லாந்தெரியுமேகாண் செட்டியாரே
பொன்னைவிளைந்துதாருஞ் செட்டியாரே புவி
யூரிலறஞ்செய்யவேணுஞ் செட்டியாரே
முன்னகரமொன்றுசெய்தேன் செட்டியாரே யிப்போது
மூன்றுநான்குசெய்யவேணுஞ் செட்டியாரே
மன்னுதாரத் துரையே செட்டியாரே தில்லை
வள்ளலருளும்பழனிச் செட்டியாரே. (உ௩)

வழிச்சகுனம்பார்ப்பதுவுஞ் செட்டியாரே கெவுளி
வாசகத்தைக்கேட்பதுவுஞ் செட்டியாரே
யொழித்தேனொழித்தேனையா செட்டியாரே யும்மை
யுண்மையாயநம்பினபின் செட்டியாரே

விழிச்சிவனார்தந்தருளுஞ் செட்டியாரே முன்னாள்
விண்ணவர்குடியைக்காத்த செட்டியாரே
பழிச்சுதமிழோர்க்கு செட்டியாரே நிதி
பாலியுமபழனியப்பச் செட்டியாரே (௨௪)

மகாராசபிரபுவே செட்டியாரே ஞான
வைராக்கியந்தந்தருளுஞ் செட்டியாரே
மிகராசாபணிந்திடுஞ் செட்டியாரே யெற்கு
மிகவும்பொறுமைதாருஞ் செட்டியாரே
சுகராசாபணிந்திடுஞ் செட்டியாரே சித்த
சுத்தியினைத்தாருமையா செட்டியாரே
சகமெச்சிடாவண்ணஞ் செட்டியாரே நிதி
தாருநடனீபழனிச் செட்டியரே. (௨௫)

குடியைநிலைக்கவைத்த செட்டியாரே மூடர்
கூறுநிந்தையைத்தவிர்த்த செட்டியாரே
மிடியைக்குடிகெடுக்குஞ் செட்டியாரே யெற்கு
மிகவுநிதியளிக்குஞ் செட்டியாரே
யடியினைமறக்கமாட்டேன் செட்டியாரே தேக
மழிவிறுமறக்கமாட்டேன் செட்டியாரே
படிகளெல்லாம்புகழுஞ் செட்டியாரே நிலைப
பரனீபழனியப்பச் செட்டியாரே. (௨௬)

சற்றுணைப்புழுவியின்னஞ் செட்டியாரே நன்றாய்த்
தாருமறம்புரியச் செட்டியாரே
துற்குணந்தனைநீக்கிவிடுஞ் செட்டியாரே நீக்கி
சற்குணவனாக்கலுஞ்செய்யுஞ் செட்டியாரே
நிற்குணவத்துவதாரு செட்டியாரே பந்த
நீக்கநிர்மலஞானச் செட்டியாரே
நற்குணசிகாமணியாஞ் செட்டியாரே தில்லை
நடராசனீபழனிச் செட்டியாரே. (௨௭)

பொன்னனிரந்தேனென்றிகழீர் செட்டியாரே சழனிப
புண்ணியர்க்குத்தொண்டனேன் செட்டியாரே
யன்னைதந்தையறத்தினுக்காச் செட்டியாரே யஃ
தல்லாறசுகமுமுண்டோ செட்டியாரே
முன்னாளைதையறஞ்செய்தேன் செட்டியாரே யதனால்
மூடரெனைநிந்திக்கின்றார் செட்டியாரே
யினைவல்நீக்கிப்பொன்னருளுஞ் செட்டியாரே தில்லை
யிறைவனருளும்பழனிச் செட்டியாரே. (௨௮)

பட்டினத்தார்முதலினோர் செட்டியாரே பணம்
பழுதெனவிடுத்தாரல்லோ செட்டியாரே
சிட்டர்நெறியதுதான் செட்டியாரே யறஞ்
செய்யநிதிவேண்டினேன்காண் செட்டியாரே
கட்டமெலாநீக்குங்காணுஞ் செட்டியாரே யெற்குக்
கருணைமிகச்செய்யுங்காணுஞ் செட்டியாரே
யட்டதிசையும்புகழுஞ் செட்டியாரே தனம்
மருளுநடனிபழனிச் செட்டியாரே. (உக)

ஓடும்பொன் னுஞ்சரியாஞ் செட்டியாரே கழனி
யொப்பில்லாமாதவர்க்குச் செட்டியாரே
கேடுறுமதியினேனுஞ் செட்டியாரே யவர்சொற்
சேளாமற்றட்டழிந்தேன் செட்டியாரே
வாடுவதுநியாயமாமோ செட்டியாரே யெனது
வாட்டமறமாழைதாருஞ் செட்டியாரே
பாடுவதுகேட்கிலையோ செட்டியாரே சிதம்
பரனிபழனியப்பச் செட்டியாரே. (கூ0)

ஞானங்கேட்கும்வாயினுற் செட்டியாரே யும்மை
நானுநிதிகேட்டேனென்றே செட்டியாரே
ஈனமுழைத் தாலென்செய்வேன் செட்டியாரே யந்த
இருங்கழனிமாதவத்தோர செட்டியாரே
தானதுக்காவென்றுசொல்லிச் செட்டியாரே யவரைச்
சரணமிகச்செய்கிறேனுன் செட்டியாரே
வானத்தவர்பணியுஞ் செட்டியாரே நிதி
வழங்குநடனிபழனி செட்டியாரே. (கூக)

தேவசேனுதிபதிச் செட்டியாரே யெழில்
தெய்வயானையைப்புணர்ந்த செட்டியாரே
பாவமெல்லாமகற்றுஞ் செட்டியாரே யெற்குப்
பணமிகத்தாருமையா செட்டியாரே
ஆவலெனக்குண்டுகாண் செட்டியாரே மிக
அறஞ்செய்யவேண்டுமென்றே செட்டியாரே
காவலராகின்ற செட்டியாரே தில்லைக்
கானனருள்பழனிச் செட்டியாரே (கூஉ)

தாயுந்தகப்பனுநீர் செட்டியாரே சொந்தத்
தமையனுநீர்தாங்காணுஞ் செட்டியாரே
சேயுமற்றுள்ளோருஞ் செட்டியாரே சகல
செல்வமுநீர்காணுஞ் செட்டியாரே·

ஆயுமிடந்தனிலே செட்டியாரே யுமை
அன்றியொன்று மில்லைகாணுஞ் செட்டியாரே
நாயேறகுநன்னிதி செட்டியாரே விரைந்து
நல்குநடனீபழனிச் செட்டியாரே. (௧௩)

ஆறெழுத்தந்தாதிகேளுஞ் செட்டியாரே கந்த
ரநதாதிகேளுங்காணுஞ் செட்டியாரே
கூறுகிறேனனுபூதி செட்டியாரே கருணை
கூர்ந்துகேளுமலங்காரஞ் செட்டியாரே
வேறொன்றுசொல்லேன்காணுஞ் செட்டியாரே யுமது
மேற்கவிதையன்றிநானுஞ் செட்டியாரே
நீறணிநததகூததனருள் செட்டியாரே தனம்
நிரம்பத்தாரும்பழனிச் செட்டியாரே. (௧௪)

சீரனதமிழ்கேளுங்காணுஞ் செட்டியாரே நன்றாய்க்
கிட்டவநதுகேளுங்காணுஞ் செட்டியாரே
வீரமிகவுடைய செட்டியாரே சூரை
வெட்டிசசெயங்கொண்ட செட்டியாரே
தாரமிரணடுடைய செட்டியாரே பந்து
சனங்களைக்கில்லாத செட்டியாரே
வாருநித்தாருங்காணுஞ் செட்டியாரே தில்லை
மன்றனருள்பழனிச் செட்டியாரே. (௧௫)

பண்ணோடேதேவாரஞ் செட்டியாரே யுந்தைமேற்
பாடுகிறேன்கேளுங்காணுஞ் செட்டியாரே
அண்ணலெழுதுவாசகஞ் செட்டியாரே நன்றாய
அறைகினறேனகேளுங்காணுஞ் செட்டியாரே
பெண்ணரசியானதாய்மேற் செட்டியாரே கூடற்
பிள்ளைத்தமிழ்சொல்லுகிறேன் செட்டியாரே
புண்ணியராகின்ற செட்டியாரே தெருளும்
பொருளுந்தாரும்பழனிச் செட்டியாரே. (௧௬)

போரூர்ச்சந்நிதிமுறை செட்டியாரே நன்றாய்ப்
புகலுகிறேனகேளுங்காணுஞ் செட்டியாரே
வாருமிங்கேவாருமிங்கே செட்டியாரே இட்ட
வந்தாற்றானசொல்லுவேன்காண் செட்டியாரே
தாருமெனக்குத்தனஞ் செட்டியாரே யும்மைச்
சாமியென்றுகும்பிடுவேன் செட்டியாரே
காரூறுங்கண்டனருள் செட்டியாரே யெனைக்
கடைக்கண்பாரும்பழனிச் செட்டியாரே ௧௭)

சென்னுருப்பிள்ளைத்தமிழ் செட்டியாரே நும்பேரிற்
செபபுகிறேன்கேளுங்காணுஞ் செட்டியாரே
வந்துகேளும்வந்துகேளுஞ் செட்டியாரே கிட்ட
வந்தாற்றான்சொல்லுவேன்காண் செட்டியாரே
கொந்தமருமவெட்சிமாலைச் செட்டியாரே தனங்
கொடுப்பதற்குத்தாமதமேன் செட்டியாரே
தந்தாலும்விடமாட்டேன் செட்டியாரே யென்பால்
தங்குநடனீபழனிச் செட்டியாரே (௩௮)

குன்றக்குடிப்பிள்ளைத்தமிழ் செட்டியாரே நும்பாற்
கூறுகிறேன்கேளுங்காணுஞ் செட்டியாரே
நன்றெனக்குத்தாருங்கணுஞ் செட்டியாரே யும்மை
நம்பிவந்தேனம்பிவந்தேன் செட்டியாரே
ஒன்றும்பேசாதிருந்தாற் செட்டியாரே நாயே
னுய்யும்வழியெந்தவழி செட்டியாரே
மன்றுணடமாடியருள் செட்டியாரே நிதி
வழங்கும்பழனியப்பச் செட்டியாரே (௩௯)

திருப்புகழ்படிக்கிறேன் செட்டியாரே நல்ல
திருவகுப்புச்சொல்லுகிறேன் செட்டியாரே
விருப்பமாய்க்கேளுமையா செட்டியாரே நான்
மெத்தக்கவிசொல்லுகிறேன் செட்டியாரே
கருப்புமுவக்குங்காணுஞ் செட்டியாரே யிந்தக்
கவிகளைச்சேளுங்காணுஞ் செட்டியாரே
தருப்பொருவநல்குகொடைச் செட்டியாரே நிதி
தாருநடனீபழனிச் செஞ்டியாரே. (௪௰)

வண்ணம்படிக்கிறேனுன் செட்டியாரே யெற்கு
மாழைமிகத்தந்தருளும் செட்டியாரே
விண்ணவாதஞ்சிறைமீட்குஞ் செட்டியாரே யுமது
வீரமதை நானறிவேன செட்டியாரே
கண்ணொருதுவாதசத்துச் செட்டியாரே யொன்றின்
கடையாலெனைப்பார்க்கொணுதோ செட்டியாரே
மண்ணவ ரெலாம்புகழுஞ் செட்டியாரே தில்லை
வள்ளலருளும் பழனிச் சேட்டியாரே (௪௧)

ஏழைச்செட்டியைப்பாடினுஞ் செட்டியாரே சிறிதும்
இல்லையெனச் சொல்லுவாரோ செட்டியாரே
மாழைச்செட்டியான வும்மைச் செட்டியாரே பாடி
வாங்காமனான் போகலாமோ செட்டியாரே

கோழைமனமோ வுமக்குச் செட்டியாரே நிதி
கொடுக்கக்கருணைகூருஞ் செட்டியாரே
வாழைக்கனிகள்மொய் ருஞ் செட்டியாரே தில்லை
மனறனருளும் பழனிச் செட்டியாரே (சஉ)

கந்தமலர்ப்பாதச் செட்டியாரே பெருமைக்
சழனித்தவருககிட்டச் செட்டியாரே
தந்திராஞணிதியஞ் செட்டியாரே பெரிய
சபையிலும்மை மெச்சுவேன்காண் செட்டியாரே
சொந்தமாச்சே நீர்தாமுஞ் செட்டியாரே யெனைத்
தூரமென வெண்ணுதீர் செட்டியாரே
நந்தாதவாழ்வுடைய செட்டியாரே தில்லை
நடேசனருள்பழனிச் செட்டியாரே (சங)

கும்பமாதந்தனிலே செட்டியாரே சலாபங்
குளிக்கும்படிக்கருளுஞ் செட்டியாரே
செமபொனதில்மிகத்தாருஞ் செட்டியாரே மிகச்
செட்டுப்பலிக்கச்செய்யுஞ் செட்டியாரே
நம்பினேனும்மைநான் செட்டியாரே யிது
நல்லசமயமையா செட்டியாரே
அம்பலவனீந்தருளுஞ் செட்டியாரே யெம
தாண்டவராகும்பழனிச் செட்டியாரே (சச)

முத்துச்சலாபத்திலே செட்டியாரே யெற்கு
முதற் பங்குவைத்துத்தாருஞ் செட்டியாரே
செத்துநான்போகலாமோ செட்டியாரே யுலகஞ்
சிரிக்கவெனைவிடலாமோ செட்டியாரே
மெத்தநாள்வருந்தினேனே செட்டியாரே யினி
விரைந்தெனைக்காக்கவேணுஞ் செட்டியாரே
சித்தமிகவுடைய செட்டியாரே தில்லைச்
செல்வனருளும்பழனிச் செட்டியாரே (சரு)

மன்னூர்ச்சலாபத்திலே செட்டியாரே யென்றன்
மைந்தருக்கும் பங்குதாருஞ் செட்டியாரே
அன்றேருமும்மடிமை செட்டியாரே சொந்தம்
ஆதலினாற் பங்குகேட்டேன் செட்டியாரே
பண்ணுகுறையொன்றுமில்லை செட்டியாரே யறம்
பண்ணநிதிதாருமையா செட்டியாரே
பொன்னம்பலவனருள் செட்டியாரே மிகப்
புண்ணியராகும்பழனிச் செட்டியாரே (சசு)

வள்ளிநச்சுமழகப்பச் செட்டியாரே வீர
வாகுமெச்சும் வீரப்பச் செட்டியாரே
புள்ளிமயிலூர்ந்துவருஞ் செட்டியாரே யுண்மை
புகலுகின்ற மெய்யப்பச் செட்டியாரே
அள்ளியள்ளியறஞ்செய்ய செட்டியாரே யெனக்
கம்பொன்மிகத்தாருமையா செட்டியாரே
உள்ளக்கவலைமாற்றுஞ் செட்டியாரே புலி
யூரனருளும்பழனிச் செட்டியாரே (௩௯)

எங்குநிறைசிதம்பரச் செட்டியாரே யழுக்
கில்லாத வெள்ளையப்பச் செட்டியாரே
சிங்கவீரவாகுமெச்சுஞ் செட்டியாரே யேற்குச்
செம்பொன்மிகததாருமையா செட்டியாரே
இங்கெனக்குத்தாராவிட்டாற் செட்டியாரே சலாபத
தெளிதிலாதாயந்தாருஞ் செட்டியாரே
பங்கப்படுத்தாதிர்நீர் செட்டியாரே தில்லைப்
பரமனருளும்பழனிச் செட்டியாரே (௪௰)

முத்தமிடவாருங்காணுஞ் செட்டியாரே யென்றன்
முத்தமிழைக் கேளுங்காணுஞ் செட்டியாரே
பித்தரோநீர்தாமுஞ் செட்டியாரே யுமது
பிதாவுக்கந்தப்பேராச்சே செட்டியாரே
பத்தர்தமக்கெளிய செட்டியாரே யென்றன்
பாட்டுக்குநிதியருளுஞ் செட்டியாரே
சித்தமிரங்குமையா செட்டியாரே யெங்கள்
திருப்பழனிப்பண்டாரச் செட்டியாரே (௪௧)

சேட்டனுக்குப்பெண்ணில்லையே செட்டியாரே யுமக்குத
தேவியிரண்டென்னத்துக்கு செட்டியாரே
கேட்டதினாற்கோபமாமோ செட்டியாரே நீர்தாம்
கிருபாநிதியென்றுகேட்டேன் செட்டியாரே
ஓட்டாண்டிமைந்தரோநீர் செட்டியாரே கேட்டால்
உண்மையைச்சொல்லுங்காணுஞ் செட்டியாரே
நாட்டார்நகையாவண்ணஞ் செட்டியாரே யேற்கு
நன்னிதிதாரும் பழனிச் செட்டியாரே (௫௰)

ஆண்டியென்றுமக்கும்பேரோ செட்டியாரே யுமை
யறிந்திருக்கிறேன் முனமே செட்டியாரே
பாண்டியன்பிரம்படிதான செட்டியாரே யுந்தை
பட்டகதை கேட்டுள்ளேன் செட்டியாரே

# செட்டியார் மாலை.

மாண்டமச்சந்தாவுமாமே செட்டியாரே யுமது
வாசலிலே வந்-க்காற் செட்டியாரே
ஈணடுஞ்சிதிமிகவுமுண்டோ செட்டியாரே நிதி
ஈயும்பழனியப்பச் செட்டியாரே (௫௧

தேவினீர்தலைமையென்றுற் செட்டியாரே தனச்
செல்வர்களிலெத்தன்மையீர் செட்டியாரே
மேவவென்றும் வையுமையா செட்டியாரே யும்மை
மெய்யாகமேவினேனுன் செட்டியாரே
பாவியர்க்களித்தென்னகாண் செட்டியாரே யுமது
பத்தர்தமக்களியுமையா செட்டியாரே
நாவலர்புகழுகின்ற செட்டியாரே தில்லை
நடேசனருளும்பழனிச் செட்டியாரே (௫௨

சறபூரமேமுதலாச் செட்டியாரே பல
காயரிசியாதியாகச் செட்டியாரே
நறபுருடமேருவுக்குச் செட்டியாரே கழனி
ஞானகுருதேசிகர்க்குச் செட்டியாரே
சற்புருடர்க்கன்னமிடச் செட்டியாரே குரவர்
தானடைந்த பூரத்தினிற் செட்டியாரே
அற்புதமாயளிததிடச் செட்டியாரே நிதி மிக்
கருளுநடனீபழனிச் செட்டியாரே (௫௩

உம்மினுமதிகநேசஞ் செட்டியாரே யெனக்
குற்றவருணைக்குரவர் செட்டியாரே
அம்மையினுநல்லருளார் செட்டியாரே யும
தப்பர்பான்மிகுந்தநேசர் செட்டியாரே
வெம்மினூர்மயக்கமுதற் செட்டியாரே முற்றும்
வெறுத்ததுறவுச்சாமி செட்டியாரே
எம்மிறைபூசைக்குதவச் செட்டியாரே நிதி
ஈயுநடனீபழனிச் செட்டியாரே (௫௪)

வாக்குமௌனமோதான் செட்டியாரே நன்றாய்
வாய்திறந்துபேசுமையா செட்டியாரே
பாக்கியமிகவிருந்துஞ் செட்டியாரே யுந்தை
பலியேற்க நியாயமென்ன செட்டியாரே
தீக்குணக்கொடியோருக்குச் செட்டியாரே சற்றுஞ்
சித்தமிரக்க மில்லாச் செட்டியாரே
ஆக்குகைமுதலுமீந்தேன் செட்டியாரே நிதி
அருளுநடனீபழனிச் செட்டியாரே (௫௫)

முன்பாட்டுக்காசையுற்றீர் செட்டியாரே அது
முறையென்பார மாதவத்தோர் செட்டியாரே
என்பாட்டுக்காசையுற்றீர் செட்டியாரே யிதில்
ஏற்றமுமக்கென்னகாணுஞ் செட்டியாரே
புன்பாட்டைக்கேட்டீரென்றே செட்டியாரே யிந்தப்
பொய்யுலகமேசாதோ செட்டியாரே
நன்பாட்டாயொப்புக்கொண்ட செட்டியாரே நிதி
நல்குநடனீபழனிச் செட்டியாரே (ருசு)

கலித்துறைசொல்லுகிறேன் செட்டியாரே யெற்குக்
கனகமிகவுந்தாருஞ் செட்டியாரே
சலித்திடாமற்கேளுமையா செட்டியாரே நானுஞ்
சலியாமற்பாடுகிறேன் செட்டியாரே
புலித்தோலுடையனருள் செட்டியாரே முன்
புலிப்பாணிபூசித்த செட்டியாரே
ஒலித்ததிருப்பாதச் செட்டிராரே வாக்கின்
ஒலியெழுப்பேசும்பழனிச் செட்டியாரே (ருஎ)

சந்தவிருத்தஞ்சொல்லுகிறேன் செட்டியாரே நீருஞ்
சந்தோசமாக்கேளுமையா செட்டியாரே
எந்தவிதத்தினாலுஞ் செட்டியாரே யென
தெண்ணநிறைவேற்றுமையா செட்டியாரே
சொந்தமல்லவோ வுமக்குச் செட்டியாரே யெனைத்
தூரமெனவெண்ணுதீர் செட்டியாரே
கந்தர்ப்பற்காய்ந்தோனருள் செட்டியாரே யெனக்குக்
கனகமருளும்பழனிச் செட்டியாரே (ருஅ)

வெண்பாவுரைக்கட்டுமா செட்டியாரே கலி
விருத்தமுரைக்கட்டுமா செட்டியாரே
பண்பாயுரைக்கிறேனுன் செட்டியாரே யேற்கு
பணமிகத்தாருமையா செட்டியாரே
கண்பாருமென்னைநீர்தாஞ் செட்டியாரே யென்றன்
கவலைதனைமாற்றிவிடுஞ் செட்டியாரே
பெண்பாலுடையனருள் செட்டியாரே சிறு
பிள்ளையல்லோநீர்பழனிச் செட்டியாரே (ருகூ)

கொச்சகஞ்சொல்லுகிறேன் செட்டியாரே நல்ல
குறுவிருத்தஞ்சொல்லுகிறேன் செட்டியாரே
அச்சமுண்டோ வுமக்குச் செட்டியாரே நன்று
யன்பாகப்பேசுமையா செட்டியாரே

நச்சிவந்தேனும்மைநான் செட்டியாரே மிக்க
நன்னிதியெனக்குக்தாருஞ் செட்டியாரே
பிச்சன்மகவோநீர் செட்டியாரே சிறு
பிள்ளைப்பழனியப்பச் செட்டியாரே. (௬௰)

ஆசிரியஞ்சொல்லுகிறேன் செட்டியாரே யும
தாசிருதமெற்குவேண்டுஞ் செட்டியாரே
பேசுங்காணும்வாய்திறந்து செட்டியாரே நிரம்பப்
பெரியவர்தாங்கேட்டுள்ளேன் செட்டியாரே
கூசாமற்பேசுங்காணுஞ் செட்டியாரே நீர்தாம்
கும்பமுனிகுருவாமே செட்டியாரே
காசெனக்குத்தாருங்காணுஞ் செட்டியாரே தில்லைக்
கடவுளருள்பழனிச் செட்டியாரே. (௬௧)

நாணமுண்டோபேசுதற்குச் செட்டியாரே நீர்தாம்
ஞானிமெச்சுஞானியாச்சே செட்டியாரே
தோணுமேவுமக்கெல்லாஞ் செட்டியாரே யென்றன்
துன்பமட்டுந்தோணுதென்ன செட்டியாரே
வேணுமோவுமக்குப்பழி செட்டியாரே யில்லா
விட்டாணிதிதாருங்காணுஞ் செட்டியாரே
வாணுதல்பங்கனருள் செட்டியாரே பழனி
மலைமேற்குடியிருக்குஞ் செட்டியாரே. (௬௨)

பாவமோவெனக்களித்தாற் செட்டியாரே யிதிற்
பலனொன்றுமில்லையோகாண் செட்டியாரே
சேவலைக்கையிற்பிடித்த செட்டியாரே மிக்ச்
சீர்த்தியுண்டுதாரும்பணம் செட்டியாரே
நாவலர்க்களித்திரென்றே செட்டியாரே முன்னோர்
நவின்றதமிழும்பொய்யோ செட்டியாரே
ஆவல்தீரத்தாருங்காணுஞ் செட்டியாரே தில்லை
அம்பலவனீபழனிச் செட்டியாரே. (௬௩)

ஆலந்தனைக்குடித்தே செட்ட்டியாரே யுந்தை
அமரரைக்காத்தாரல்லோ செட்டியாரே
பாலராகியநீருஞ் செட்டியாரே கருணை
படைத்தாலல்லோபெருமை செட்டியாரே
சிலமிகவுடைய செட்டியாரே யும்மைச்
சேவிக்கிறேன்பணந்தாருஞ் செட்டியாரே
வேலைக்கையிற்பிடித்த செட்டியாரே தில்லை
வேந்தனருளும்பழனிச் செட்டியாரே (௬௪)

பிரபுவவன்பிள்ளையாச்சே செட்டியாரே யுமது
பெருமையெல்லாங்கேட்டுள்ளேன் செட்டியாரே
கரவுளையான்சொல்லேன்காணுஞ் செட்டியாரே றும்பாற்
கனகத்துக்காசைபட்டேன் செட்டியாரே
பரவைமனைக்குத்தூது செட்டியாரே யுந்தை
பாடலுக்காச்சென்றாரல்லோ செட்டியாரே
அரவணையரிமருகச் செட்டியாரே திரு
அருளும்பழனியப் பச்செட்டியாரே. (௬௩)

மாதாபிதாவுநீர்தாஞ் செட்டியாரே யெற்கு
மற்றவுறவுநீர்தாஞ் செட்டியாரே
ஆதரவுவேறில்லைகாண் செட்டியாரே யும்மை
அண்டிப்பிழைக்கவந்தேன் செட்டியாரே
பாதமலர்தாருமையா செட்டியாரே யெற்குப்
பாக்கியமிகவுந்தாருஞ் செட்டியாரே
சீதரன்வணங்கும்பதச் செட்டியாரே தில்லைச்
செல்வனருள்பழனிச்செட்டியாரே. (௬௬)

கொற்றவர்கள்கைகுவிக்குஞ் செட்டியாரே பெரிய
கும்பமுனிதெண்டனிடுஞ் செட்டியாரே
நற்றவர்கள்போற்றிசெய்யுஞ் செட்டியாரே செல்வ
நாரணன்மருகரான செட்டியாரே
மற்றவர்கட்கெட்டாத செட்டியாரே தன
வணிகர்க்கெல்லாந்தலைமைச் செட்டியாரே
சற்றுமிரங்காததென்ன செட்டியாரே நிதி
தாருநடனிபழனிச் செட்டியாரே. (௬எ)

கொண்டுவிலைசெய்யவாருஞ் செட்டியாரே நன்றாக்
கூடிவிளையாடவாருஞ் செட்டியாரே
கண்டுமுவக்குமொழிச் செட்டியாரே தில்லைக்
காட்டுப்பிரதன்றந்தருளுஞ் செட்டியாரே
வண்டுறைகடப்பமாலைச் செட்டியாரே முழு
வள்ளலெனப்பேர்படைத்த செட்டியாரே
உண்டுமக்குவெகுகீர்த்தி செட்டியாரே தனம்
உதவும்பழனியப்பச் செட்டியாரே. (௬அ)

கும்பமுனிபணியுஞ் செட்டியாரே யெற்குக்
கோடிநிதிதாருமையா செட்டியாரே
வம்பினிமேற்செய்யவேண்டாஞ் செட்டியாரே யிங்கே
வாருமென்றால்வாருங்காணுஞ் செட்டியாரே

நம்பிக்கைசொல்லு கிறேன் செட்டியாரே யெனை
நம்பிநிதிதாருங்காணுஞ் செட்டியாரே
சம்புநடராசனருள் செட்டியாரே யொரு
சண்முகமணியாம்பழனிச் செட்டியாரே. (௬௯)

திருப்புகழ்கேட்குஞ்செவிச் செட்டியாரே ஞானத்
தில்லைவனக்கூத்தனருள் செட்டியாரே
விருப்புமக்கென்பாலில்லையோ செட்டியாரே யொரு
விண்ணப்பங்கேளுமையா செட்டியாரே
கருப்புவக்குங்கவிதருவேன் செட்டியாரே யெற்குக்
கனகமிகத்தாருமையா செட்டியாரே
குருப்பெருமானுநீரே செட்டியாரே யுமைக்
கும்பிடுகிறேனபழனிச் செட்டியாரே. (௭௦)

செந்தூர்க்கடற்கரைச் செட்டியாரே யிந்தச்
சீமையெல்லாந்தெரிந்த செட்டியாரே
வந்துகேளுமொருசேதி செட்டியாரே யிங்கே
வாருமெனருலவரப்படாதோ செட்டியாரே
எந்தூரிலுமிருக்குஞ் செட்டியாரே திவ்விய
ஈராறுகண்படைத்த செட்டியாரே
நந்தூர்சண்முகநாதச் செட்டியாரே நிதி
நல்குநடனீபழனிச் செட்டியாரே. (௭௧)

சத்துச்சித்தானந்தச் செட்டியாரே தில்லைச்
சங்கரனருள்குமரச் செட்டியாரே
எத்தனைதான்சொன்னாலுஞ் செட்டியாரே யென்பால்
இரக்கமுமக்கில்லையோ செட்டியாரே
மித்துருவெனக்குநீர்தாஞ் செட்டியாரே யிங்கு
வேறுதஞ்சமில்லையையா செட்டியாரே
பத்தரெலாம்புகழுஞ் செட்டியாரே மிகப்
பாக்கியந்தாரும் பழனிச செட்டியாரே. (௭௨)

பலவுயிர்க்குந்துணையான செட்டியாரே தில்லைப்
பதிஞானிச்செட்டியாரீ செட்டியாரே
கலகலெனவொலிபாதச் செட்டியாரே தொந்திக்
கணபதிதுணைவரான செட்டியாரே
நலமெனக்கருளுமையா செட்டியாரே நானு
நம்பிவந்தனும் மைத்தான் செட்டியாரே
மலமகற்றுஞ்சுப்பிரமணியச் செட்டியாரே நிதி
வழங்கும்பழனியப்பச் செட்டியாரே (௭௩)

பன்னிருசெங்கையுடைய செட்டியாரே நம்பும்
பத்தர்தமக்கெளிய செட்டியாரே
என்னிருகண்மணியான செட்டியாரே யையா
ஏழைமிகநாயடியேன் செட்டியாரே
அன்னியமோரீர்சொந்தச் செட்டியாரே யும
தடைக்கலமாய் நம்பிவந்தேன் செட்டியாரே
பொன்னெனக்குத்தாருமையா செட்டியாரே பொற்
பொதுவோனருள் பழனியப்பச் செட்டியாரே (எச)

குறத்தியைமணம்புணர்ந்த செட்டியாரே தில்லைக்
கூத்தாடிப்பித்தனருள் செட்டியாரே
அறத்தினுக்குப்பொன்தாருஞ் செட்டியாரே மிக
அருளாழியாமுருகச் செட்டியரே
மறத்திறோர்கெட்டாத செட்டியாரே தலைமை
வள்ளலாம்புகழ்மிகுந்த செட்டியாரே
பிறத்தியானல்லகாண் செட்டியாரே சொந்தப்
பிள்ளைதானென பழனிச் செட்டியாரே (எரு)

கும்பிடுவேன்கும்பிடுவேன் செட்டியாரே யெற்குக்
கோடிநிதிதாருமையா செட்டியாரே
அம்பலவன்றந்தருளுஞ் செட்டியாரே வானத்
தமரர்தொழு மாறுமுகச் செட்டியாரே
நம்பிவந்தேனும்மைநான் செட்டியாரே தமிழ்
நக்கீரன்சிறைதவிர்த்த செட்டியாரே
அன்பிறபட்டுக்கொண்டீரென்பாற் செட்டியாரே நானும்
அடுத்துவிடமாட்டேன் பழனிச் செட்டியாரே (எசு)

நிதியின்பொருட்டதாகச் செட்டியாரே யிங்கு
நெடுநாளிருக்கலாமோ செட்டியாரே
கதியினபொருட்டதாகச் செட்டியாரே நானுங்
கழனிநகர்சேர்க்கவேண்டுஞ் செட்டியாரே
விதியும்வணங்குபாதச் செட்டியாரே நிதி
மிகத்தந்தனுப்புமையா செட்டியாரே
நதிபுத்திரரான செட்டியாரே முக்கண்
நடேசனருள் பழனிச் செட்டியாரே. (எஎ)

காடுவெட்டியெனுமூரிற் செட்டியாரே யுந்தைக்குக்
கண்ணப்பர்போற்பூசைசெய்வோர் செட்டியாரே
நீடுதிருவாரூரிற் செட்டியாரே விழுப்பு
நீக்குங்குலத்தவர்கள் செட்டியாரே

நாடுமவர்பூசைக்கிச் செட்டியாரே நிதி
நன்றாய்நானளிக்கவேண்டுஞ் செட்டியாரே
பாடுமெனக்குநிதி செட்டியாரே மிகப்
பாலியும்பழனியப்பச் செட்டியாரே. (எஅ)

வாணிபத்தலைவரான செட்டியாரே தில்லை
மன்றன்மதலையான செட்டியாரே
தோணிகுளிக்கும்போது செட்டியாரே சலாபத்
துறையினிலெப்போதுஞ் செட்டியாரே
ஆணிமுத்தாயிருக்கச் செட்டியாரே யதில்
ஆதாயமேன்மேலுஞ் செட்டியாரே
காணுமபடிக்கருளுஞ் செட்டியாரே யும்மைக்
கைகுவிக்கிறேன்பழனிச் செட்டியாரே. (எகூ)

ஐயமானநம்பிக்கையைச் செட்டியாரே நானும்
அன்றேவிடுத்தேன்காணுஞ் செட்டியாரே
பொய்யுநானசொல்வதுண்டோ செட்டியாரே பரி
பூரணமாநீருரையுஞ் செட்டியாரே
மெய்யாகநம்பினேன்காண் செட்டியாரே யெற்கு
விரைந்துநிதிதாருமையா செட்டியாரே
சையாதிரண்டுடைய செட்டியாரே தில்லைக்
கானனருள்பழனிச் செட்டியாரே. (அய)

சத்தியவானீரல்லவோ செட்டியாரே யென்னைத்
தவிக்கவிடலாமோதான் செட்டியாரே
சதுதமிழதத்தையுஞ் செட்டியாரே பனிரு
காதினுழையலையோ செட்டியாரே
சித்தமிரங்குமையா செட்டியாரே யெற்குத்
திருமிகத்தாருமையா செட்டியாரே
முத்தமிழ்க்கின்பளித்திடுஞ் செட்டியாரே தில்லை
முனிவனருள்பழனிச் செட்டியாரே. (அக)

அருணகிரிநாதர்புகழ் செட்டியாரே பொல்லா
அசுரனைவேரறுத்த செட்டியாரே
கருணைக்கடலான செட்டியாரே யுமைக்
கையெடுத்துக்கும்பிடுவேன் செட்டியாரே
திரணமுமக்குநிதி செட்டியாரே தில்லைச்
சீமான்மகன்சீமானல்லோ செட்டியாரே
தருணந்தருணமையா செட்டியாரே நிதி
தந்திரட்சியும்பழனிச் செட்டியாரே. (அஉ)

தெண்டந்தெண்டமுமக்கு செட்டியாரே தில்லைச்
சிவஞானிச் செட்டியாரீ செட்டியாரே
பண்டமராதமைக்காத்த செட்டியாரே யறம்
பண்ணநிதிதாருமையா செட்டியாரே
வண்டமின்னார்க்கியமாட்டேன் செட்டியாரே யவர்க்கு
வழங்காமனிர்பார்த்துக்கொள்ளுஞ் செட்டியாரே
கொண்டலைப்பழித்தகொடைச் செட்டியாரே நிதி
கூசாமற்றரும்பழனிச் செட்டியாரே. (அக)

வேதமுழுதுமுணர்ந்த செட்டியாரே சுத்த
வேதாந்தசாமான செட்டியாரே
பாதசஙகளில்லாத செட்டியாரே யெனைப்
பாருங்கடைக்கண்ணாலே செட்டியாரே
காதலனுகின்றவென் செட்டியரே யெளிதிற
சனசமித்தாருமையா செட்டியாரே
மாதவரெலாம்வணங்குஞ் செட்டியாரே தில்லை
மனறனருள்பழனிச் செட்டியாரே. (அச)

மருகனசர்தன்னிற் செட்டியாரே செட்டி
மாண்டவனுயிர்க்கிலையோ செட்டியாரே
ஒருபெண்ணெனும்பதனைச் செட்டியாரே பெண்
உருவாகச்செயவிலையோ செட்டியாரே
திருவைவெனக்குமிகச் செட்டியாரே யிப்போது
செய்வதோரவுமக்குப்பாரஞ் செட்டியாரே
வருவதெந்நாள்நீரென்பாற் செட்டியாரே தில்லை
மனறனருள்பழனிச் செட்டியாரே. (அரு)

ஆவிக்குளாவியெனுஞ் செட்டியாரே யும
தடைக்கலநானகாணுஞ் செட்டியாரே
பாவியேனுனுஞ் செட்டியாரே யுமது
பதத்தெனைபபேர்படைத்தேன் செட்டியாரே
கூவியழைத்தசெலலாஞ் செட்டியாரே காதிற்
கொள்ளலையோ சொல்லுங்காணுஞ் செட்டியாரே
சேவிக்கிறேனிதிதாருஞ் செட்டியாரே தில்லைச்
சிற்பொதுவோனீபழனிச் செட்டியாரே. (அசா)

வஞ்சகம்பண்ணுதீர் செட்டியாரே யுமது
மைந்தனெனவென்னைப்பாருஞ் செட்டியாரே
செஞ்சினேனேமிகவுஞ் செட்டியாரே யின்னங்
கிருபைசுரக்கலையோ செட்டியாரே

சொஞ்சிமுத்தமிடவாருஞ் செட்டியாரே நீருங்
குழந்தைவடிவேல லோ செட்டியாரே
அஞ்சலெனத்தனந்தாருஞ் செட்டியாரே தில்லை
அம்பலவணீபழனிச் செட்டியாரே. (அஎ)

சிரித்தமுகமுடைய செட்டியாரே யெற்குச்
செம்பொன்மிகத்தாருமையா செட்டியாரே
நரித்திரளத்தனையுஞ் செட்டியாரே யுந்தை
நற்பரியாய்ச்செய்தாராமே செட்டியாரே
கரிதனுணிதன்னிலே செட்டியாரே பிட்டைக்
கனிவாய்வாங்கியுண்டாராமே செட்டியாரே
எரித்தாராமேபுரத்தைச் செட்டியாரே யிஃது
தென்காண்பழனியப்பச் செட்டியாரே. (அஅ)

குஞ்சரிமணாளரெனுஞ் செட்டியாரே யெழிற்
குறவள்ளியைப்புணர்ந்த செட்டியாரே
தஞ்சமெனநம்பினேன்காண் செட்டியாரே யிந்தத்
தருணத்துக்குப்பொன்னுதவுஞ் செட்டியாரே
கொஞ்சமேனுந்தயைவையுஞ் செட்டியாரோ யறக்
கொடுமைபண்ண வேண்டாங்காணுஞ் செட்டியாரோ
அஞ்சலென்றுருளுங்காணுஞ் செட்டியாரோ தில்லை
அம்பலவணீபழனிச் செட்டியாரே (அகூ)

வேதனைச்சிறையில்வைத்த செட்டியாரே யொரு
வித்துவான்சிறைதவிர்த்த செட்டியாரே
ஆதியோடந்தமிலாச் செட்டியாரே சச்சி
தானந்தமேவடிவாஞ் செட்டியாரே
பீதிதவிர்த்தருளுஞ் செட்டியாரே யெற்குப்
பெருகுநிதிதாருமையா செட்டியாரே
நீதிமிகவுடைய செட்டியாரே தில்லை
நிருத்தனருளும்பழனிச் செட்டியாரே (கூய)

சாதியின்னதென்றறியாச் செட்டியாரே கோழி
தன்னைக்கையிற்பிடித்த செட்டியாரே
பூதியுந்தனமுந்தாருஞ் செட்டியாரே தில்லைப்
பொற்பொதுக்கூத்தாடியருள் செட்டியாரே
மாதாபலசாதி செட்டியாரே யுங்கள்
மார்க்கமெல்லாமிவ்வளவோ செட்டியாரே
காதலிகுறத்தியல்லோ செட்டியாரே தமையன்
கரிமுகனல்லோபழனிச் செட்டியாரே. (கூக)

மாதுலனிடையனல்லோ செட்டியாரே யுமது
மைத்துனனிருபிறப்பன் செட்டியாரே
தாதைபிச்சைவாங்கியல்லோ செட்டியாரே நீர்
தாமுமோராண்டியல்லோ செட்டியாரே
ஈதெனக்குத்தெரியாதோ செட்டியாரே பெரியோர்
இயம்பக்கேட்டிருக்கிறேன் செட்டியாரே
ஓதுவேனின்னநிந்தை செட்டியாரே விளைந்
துதவுநிதிநீர்பழனிச் செட்டியாரே (கூஉ)

காதுபனிரண்டிருக்கச் செட்டியாரே நானுங்
கததுவதுகேட்கலையோ செட்டியாரே
மாதிருவர்மோகந்தானோ செட்டியாரே யன்றி
மௌனஞானநிட்டைதானோ செட்டியாரே
தாதைதாய்மோகந்தானோ செட்டியாரே யலதென்
தமிழுமக்கினிக்கலையோ செட்டியாரே
ஈதலின்னஞ்செய்யாதென்ன செட்டியாரே நிதி
ஈயும்பழனியப்பச் செட்டியாரே. (கூக)

பெண்டாட்டியுமக்கிரண்டோ செட்டியாரே சீடப்
பிள்ளைபலவுமுண்டோ செட்டியாரே
கண்டாருமைச்சிரிப்பார் செட்டியாரே யுமது
காலிணைகீழ்வீழ்வார்காணுஞ் செட்டியாரே
உண்டோவுமக்குநிதி செட்டியாரே யிந்த
ஊராராண்டியென்கிறரே செட்டியாரே
தண்டங்கரம்பிடித்த செட்டியாரே நிதி
தாருநடனீபழனிச் செட்டியாரே. (கூச)

முனியோயுமதுபிள்ளை செட்டியாரே யதுதான்
முந்நீரொலாமுண்டதாமே செட்டியாரே
கனியோவுமதுமொழி செட்டியாரே சழனிக்
கற்றவருநச்சிகிறர் செட்டியாரே
தனியாநிதியருளுஞ் செட்டியாரே யும்மைத்
தஞ்சமெனநம்பிவந்தேன் செட்டியாரே
இனியேனுந்தயைகூருஞ் செட்டியாரே தில்லை
ஈசனருளும்பழனிச் செட்டியாரே. (கூரு)

நம்பிவந்தேனம்பிவந்தேன் செட்டியாரே யென்னை
நட்டாற்றில்விடாதீர்காண் செட்டியாரே
தம்பிமுகனுக்கிளைய செட்டியாரே பழனித்
துரைச்சிங்கமேமுருகச் செட்டியாரே

கம்பலையைத்தீருமையா செட்டியாரே யெனைக்
கடைக்கண்ணுற்பாருமையா செட்டியாரே
அம்பலவனீசண்முகச் செட்டியாரே தனம்
அருளுந்தியாகப்பச் செடிட்யாரே. (கசா)

அடியருக்கெளியரென்றே செட்டியாரே யும
தடியரெல்லாஞ்சொனனுர்களே செட்டியாரே
படியிலனுபோகமாய்ச் செட்டியாரே யான்
பார்க்கவருள்செய்வதெந்நாள் செட்டியாரே
குடியடிமைநானல்லவோ செட்டியாரே யெங்கள்
குலதெய்வநீரல்லவோ செட்டியாரே
தடியார்கரமுடைய செட்டியாரே நிதி
தாருநடனீபழனிச் செட்டியாரே. (கஎ)

காலமீதல்லவோ செட்டியாரே யுமது
கருணையுற்றுற்காலமென்ன செட்டியாரே
சீலனியானலலோ செட்டியாரே யும்மைச்
சேர்ந்ததன்றிச்சீலமென்ன செட்டியாரே
பாலனீராணுக்காற் செட்டியாரே சித்தி
பண்ணுநீர்பாலனுமோ செட்டியாரே
ஞாலமெலாம்புகழுஞ் செட்டியாரே நிதி
நல்குநடனீபழனிச் செட்டியாரே. (கஅ)

வேறுகதியில்லையே செட்டியாரே யுமை
விட்டெங்கேநான்போவேன செட்டியாரே
கூறுதமிழோர்களெல்லாஞ் செட்டியாரே யுமைக்
குறுகிற்றுன்பமிலையென்முரே செட்டியாரே
மாறுபாடோவம்மொழிதான் செட்டியாரே யென்றன்
வருத்தமொழித்தாலல்லோமெய் செட்டியாரே
ஆறுமுகமுடைய செட்டியாரே நிதி
அருளுநடனீபழனிச் செட்டியாரே. (கக)

அன்னம்பலர்க்கிடவுஞ் செட்டியாரே கனகம்
அந்தணர்கட்கீய்ந்திடவுஞ் செட்டியாரே
மன்னுந்தவத்தினர்க்குச் செட்டியாரே யன்னம்
வளமாயளித்திடவுஞ் செட்டியாரே
இன்னலனைத்துநீக்கிச் செட்டியாரே நானும்
இலத்திலிருந்துணவுஞ் செட்டியாரே
பொன்னெனக்குத்தாருமையா செட்டியாரே தில்லைப்
பொற்பொதுவோனீபழனிச் செட்டியாரே. (௨0)

அருணகிரியார்தமிழ்க்குட் செட்டியாரே யெனக்
கனுபூதிதனிலிட்டஞ் செட்டியாரே
தருணத்துக்கிவீரென்றே செட்டியாரே யுமது
சந்நிதியில்வந்துநின்று செட்டியாரே
கருணைமிகச்செய்வீரென்றே செட்டியாரே மிகக்
கத்தினேனேகத்தினேனே செட்டியாரே
பொருளுந்தெருளுந்தாருஞ் செட்டியாரே தில்லை
புண்ணியவானிபழனிச் செட்டியாரே. (௲௪)

தஞ்சம்வேறில்லைகாணுஞ் செட்டியாரே யொரு
தண்டங்கரம்பிடித்த செட்டியாரே
வஞ்சகம்பண்ணுதீர் செட்டியாரே தில்லை
வள்ளலருளுங்குமரச் செட்டியாரே
கெஞ்சினேனும்மைநான் செட்டியாரே யின்றே
கிருபைசெய்யவேண்டுமையா செட்டியாரே
நெஞ்சக்கவலைதீரச் செட்டியாரே தன
நிரம்பத்தாரும்பழனிச் செட்டியாரே. (௲௨)

அன்றேனடிமைகொண்டீர் செட்டியாரே யிப்போ
தகலவிடலாமோதான் செட்டியாரே
நன்றோவிதுவுமக்குச் செட்டியாரே யுங்கள்
நாணயத்துக்கிதழகோ செட்டியாரே
மன்றினுக்குப்போகவாருஞ் செட்டியாரே யிலையேல்
மாழைமிகவுந்தாருஞ் செட்டியாரே
ஒன்றும்பேசாதிருந்தென் செட்டியாரே நன்றாய்
உரைப்பீர்பழனியப்பச் செட்டியாரே. (௲௬)

அற்பரிடஞ்செல்லமாட்டேன் செட்டியாரே பிரபு
ஆனவும்மைநம்பிவந்தேன் செட்டியாரே
கற்பகமுமக்கடிமை செட்டியாரே யிந்தக்
காசினியுமதுகாணுஞ் செட்டியாரே
பொற்பதிநுந்தாதைதோழன் செட்டியாரோ யெற்குப்
பொன்மிகவளிக்கவேண்டுஞ் செட்டியாரே
சற்புருடர்மெச்சுகின்ற செட்டியாரே யின்றே
தயவுசெய்யும்பழனிச் செட்டியாரே. (௲௭)

வருத்தப்படலாமோநான் செட்டியாரே யுமக்கு
மாழையோமிகப்பெரிது செட்டியாரே
ஒருத்தரிடஞ்செல்லமாட்டேன் செட்டியாரே யெனக்
குற்றதுணைநீர்காணுஞ் செட்டியாரே

கருத்திற்குடியிருங்காண் செட்டியாரே யெற்குக
கனகமிகத்தருங்காணுஞ் செட்டியாரே
நிருத்தனருள்முருகச் செட்டியாரே யன்பர்
நேசப்பழனியப்பச் செட்டியாரே. (௱௫)

சித்துருவவதூதர்க்குச் செட்டியாரே யானுஞ்
சீர்மறையோர்மாறலாகச் செட்டியாரே
அத்தநன்றாய்க்கொடுத்துச் செட்டியாரே பிச்சை
அளிப்பதுமுண்டுகொணுஞ் செட்டியாரே
புத்தியிலாதொருவன் செட்டியாரே யதற்குப்
பொருளிதோவென்றுசொன்னான் செட்டியாரே
அத்தையானவாங்குவனோ செட்டியாரே நிதி
அருளுநடனீபழனிச் செட்டியாரே. (௱௬)

மிக்கநிதியென்னிடத்திற் செட்டியாரே யந்நாள்
மேவியிருந்ததானாற் செட்டியாரே
அக்கயவன்சொல்லுவானோ செட்டியாரே நிதி
அவதூதசாமிக்கௌறு செட்டியாரே
தக்கவன்பரல்லவோதான் செட்டியாரே மா
தவருக்கென்சொத்துரித்துச் செட்டியாரே
இக்கணமெமக்குநிதி செட்டியாரே விரைந்
தியுநடனீபழனிக் செட்டியாரே. (௱௭)

மாதவர்தமக்கெல்லாஞ் செட்டியாரே யென்பால்
மருவுசெம்பொன்சொந்தமாகுஞ் செட்டியாரே
ஆதலினுலும்மைக்கேட்டேன் செட்டியாரே யெனக்
களைநிதிதாருங்காணுஞ் செட்டியாரே
பாதகர்க்கீந்தெனைபலன் செட்டியாரே யுமையே
பாடுமவர்க்கியுங்காணுஞ் செட்டியாரே
வேதியர்சிகாமணியாஞ் செட்டியாரே தில்லை
வேதியனீயும்பழனிச் செட்டியாரே. (௱௮)

உச்சிக்காலமுடிந்தபின் செட்டியாரே நானும்
ஒருவேளையமுதுண்டு செட்டியாரே
இச்சியாமற்றண்ணீர்கூடச் செட்டியாரே மிக
ஏங்கியேங்கிக்கத்தினுலுஞ் செட்டியாரே
நச்சுகிறீரில்லையேனோ செட்டியாரே யுமை
நம்பினதிற்பலனின்றோ செட்டியாரே
அச்சமகற்றுமையா செட்டியாரே நிதி
அருளுநடனீபழனிச் செட்டியாரே. (௱௯)

பத்தியெனுங்கண்ணியினாற் செட்டியாரே யுமைப்
பையப்பிடித்துக்கொண்டேன் செட்டியாரே
எத்திவிடலாமென்பதைச் செட்டியாரே நீர்தாம்
இனிச்சற்றுமெண்ண வேண்டாஞ் செட்டியாரே
சித்திரம்போலின்றெனினுஞ் செட்டியாரே யன்பாற
சிக்கிக்கொண்டேன்சிக்கிக்கொண்டேன் செட்டியாரே
அத்தமிகத்தாருமையா செட்டியாரே தில்லை
அம்பலவனிபழனிச் செட்டியாரே. (௯௰)

மண்ணோர்க்கெலாந்தலைமைச் செட்டியாரே தன
வணிகர்க்கெல்லாந்தலைமைச் செட்டியாரே
பெண்ணிருவர்கேள்வராகுஞ் செட்டியாரே யெவர்க்கும்
பெரியவீட்டுக்காரராகுஞ் செட்டியாரே
விண்ணவர்க்கெலாந்தலைமைச் செட்டியாரே யளகை
வேந்தனுக்குந்தலைமைச் செட்டியாரே
கண்ணொருதுவாதசத்துச் செட்டியாரே நிதி
காட்டுநடனிபழனிச் செட்டியாரே. (௯௰௧)

மிக்கநடக்குதிரைக்குச் செட்டியாரே யுமது
வீட்டுமுன்கொட்டகைதான் செட்டியாரே
தக்கமண்டபமதாகச் செட்டியாரே யின்று
தான்கட்டவேணுமையா செட்டியாரே
பக்கத்திற்சட்டியென்ன செட்டியாரே யுமைப்
பார்க்கநேரேகட்டவேண்டுஞ் செட்டியாரே
நக்கனருள்தண்டபாணிச் செட்டியாரே நிதி
நல்குநடனிபழனிச் செட்டியாரே. (௯௰௨)

சாத்திரமெலாமுணர்ந்த செட்டியாரே யாகமஞ்
சதுர்வேதமுமுணர்ந்த செட்டியாரே
பாத்திராபாத்திரம்பார்த்துச் செட்டியாரே யிடப்
பணமிகத்தாருமையா செட்டியாரே
காத்திரப்பிணியுந்தீருஞ் செட்டியாரே காமக்
கடும்பிணியுந்தீருமையா செட்டியாரே
நேத்திரம்பனிரண்டுடைய செட்டியாரே தில்லை
நிருத்தனருளும்பழனிச் செட்டியாரே. (௯௰௩)

முதற்செயுமுபகாரஞ் செட்டியாரே மாதர்
மோகத்தைத்தீர்த்துவிடுஞ் செட்டியாரே
மதச்செய்கைகண்டாராஞற் செட்டியாரே கழனி
மாதவரெனைத்தள்ளுவார் செட்டியாரே

நித்முமைப்பாடினுலுஞ் செட்டியாரே சற்றும்
    நீர்தாமிரங்குவீரே செட்டியாரே
அதைமுன்னந்தீர்த்தபினபு செட்டியாரே தனம்
    அருளுநடனீபழனிச் செட்டியாரே. (௱௰௪)

பெரியவிடத்துப்பிள்ளைநீர் செட்டியாரே யின்சொற்
    பேசுகின்றகிள்ளையாச்சே செட்டியாரே
தெரியாதோவெனக்குத்தான் செட்டியாரே தில்லைச்
    சீமான்குழந்தையன்றோ செட்டியாரே
அரிமருகராகின்ற செட்டியாரே யெனக்
    கம்பொன்மிகத்தாருமையா செட்டியாரே
புரிகின்றவாணிபத்தாற் செட்டியாரே மிகப்
    புண்ணியர்போற்றும்பழனிச் செட்டியாரே. (௱௰௫)

அத்திக்கொருதுணையாஞ் செட்டியாரே தில்லை
    அம்பலவாணனருள் செட்டியாரே
கத்திதொண்டைகட்டினேனே செட்டியாரே யெனைக்
    கடைக்கணுற்பாருமையா செட்டியாரே
சுத்தர்மனத்துறையுஞ் செட்டியாரே பரி
    சுத்தரானசுப்பிரமணியச் செட்டியாரே
சித்தியெலாமுடைய செட்டியாரே மிகச்
    சொம்பொனீயும்பழனிச் செட்டியாரே. (௱௰௬)

நன்றிமறவேன்காணுஞ் செட்டியாரே நிதி
    நல்கியெனைக்காக்கவேண்டுஞ் செட்டியாரே
ஒன்றும்பேசாதிருந்தாற் செட்டியாரே நானும்
    உம்மைவிட்டெங்கேபோவேன் செட்டியாரே
குன்றைநிகர்த்தகுணச் செட்டியாரே யும்மைக்
    கும்பிட்டுவிழுகிறேனுன் செட்டியாரே
மன்றனருள்குமரச் செட்டியாரே முடி
    மன்னர்புகழும் பழனிச் செட்டியாரே. (௱௰௭)

மகராசராயிருப்பீர் செட்டியாரே மனையாள்
    மங்கிலியமிகத்தழைக்குஞ் செட்டியாரே
சுகசொருபமாயிருப்பீர் செட்டியாரே நான்
    சொன்னுற்போற்கேளுங்காணுஞ் செட்டியாரே
மிகவுநானேழையையா செட்டியாரே யெனக்கு
    மிக்கநிதிதாருமையா செட்டியாரே
புகழெங்குமோங்குமையா செட்டியாரே தில்லைப்
    பொதுவோனருள்பழனிச் செட்டியாரே. (௱௰௮)

உம்மடியாருதாரியர் செட்டியாரே யுனக்
குலோபகுணமேதுகாணுஞ் செட்டியாரே
செம்மையாய்த்தனமுதவுஞ் செட்டியாரே யுதவி
செய்தாலல்லோசீர்த்திகாணுஞ் செட்டியாரே
அம்மைபுதல்வரான செட்டியாரே தில்லை
அம்பலவாணனருள் செட்டியாரே
மும்முறைவணங்குகிறேன் செட்டியாரே யெனை
முற்றுமிரட்சியும்பழனிச் செட்டியாரே. (௱௰௯)

காலைப்பிடிக்கிறேன் செட்டியாரே யுமைக்
கருத்திலென்றும்வைக்கிறேன் செட்டியாரே
கோலாகலக்குமரச் செட்டியாரே சிறு
குழந்தைவடிவேலரான செட்டியாரே
பாலனெனவந்தேன்காணுஞ் செட்டியாரே யென்னைப்
பரதவிக்கவிடலாமோ செட்டியாரே
சாலநிதிதாருமையா செட்டியாரே தில்லைச்
சம்புவருளும்பழனிச் செட்டியாரே. (௱௨௰)

நாட்டமீராறுடைய செட்டியாரே தில்லை
நடேசனருளுகின்ற செட்டியாரே
வாட்டந்தவிர்த்தருளுஞ் செட்டியாரே யெற்கு
மாழைமிகத்தாருமையா செட்டியாரே
பாட்டினைக்கேளுங்காணுஞ் செட்டியாரே யினிப்
பராமுகமாயிருக்கவேண்டாஞ் செட்டியாரே
கூட்டத்துடனேயிருக்குஞ் செட்டியாரே யென்னைக்
குறுகும்பழனியப்பச் செட்டியாரே. (௱௨௧)

மோசமெனைச்செய்யாதீர் செட்டியாரே நான்
முற்றுமும்மைநம்பினவன் செட்டியாரே
வாசமலர்ப்பாதச் செட்டியாரே பொய்மை
மறந்துமுரையாத செட்டியாரே
காசெனக்குமிகத்தாருஞ் செட்டியாரே யிம்மிக்
கணக்கெல்லாந்தூரவிடுஞ் செட்டியாரே
நாசமொருக்காலுமில்லாச் செட்டியாரே தில்லை
நடேசனருளும்பழனிச் செட்டியாரே. (௱௨௨)

காசிலுமக்காசையுண்டோ செட்டியாரே பின்னேன்
கடுஞ்செட்டுப்பண்ணுகிறீர் செட்டியாரே
தாசனல்லோநானுமக்குச் செட்டியாரே நீர்தாந்
தயவிற்கடலல்லவோ செட்டியாரே

நேசத்தைவிடப்பெரிதோ செட்டியாரே செம்பொன்
நிதிதானுமக்குக்கு .ச் செட்டியாரே
ஆசகற்றித்தனந்தாருஞ் செட்டியாரே தில்லை
அண்ணலருளும்பழனிச் செட்டியாரே. (௱௨௩)

கற்றவர்க்செலாந்தலைமைச் செட்டியாரே சகல
கலையுமறிந்திருக்குஞ் செட்டியாரே
நற்றவர்சட்சிட்டமாஞ் செட்டியாரே யெற்கு
நன்னிதிவிசாந்துதாருஞ் செட்டியாரே
குற்றமியானசெய்தாலுஞ் செட்டியாரே பொறுத்துக்
கொண்டெனைக்காக்கவேண்டுஞ் செட்டியாரே
பற்றெனக்குநீரேகாணுஞ் செட்டியாரே சிதம்
பரனருளும்பழனிச் செட்டியாரே. (௱௨௪)

புலவரெனப்பேர்படைத்த செட்டியாரே சகல
புலவர்களுங்கைகுவிக்குஞ் செட்டியாரே
நலநிதியெனக்குத்தாருஞ் செட்டியாரே யுமை
நம்பிவந்துகாத்துள்ளேனுன் செட்டியாரே
கலகலென்றொலிக்கும்பாதச் செட்டியாரே யெனது
கண்ணும்பன்னிருகண்ணப்பச் செட்டியாரே
பலபதியுமேயிருக்குஞ் செட்டியாரே தில்லைப்
பதியனருள்பழனிச் செட்டியாரே. (௱௨௫)

வாட்டலாமோவென்னையின்னஞ் செட்டியாரே யும்மை
வசையுலகஞ்சொல்லாதோ செட்டியாரே
காட்டுக்குள்ளாடியருள் செட்டியாரே கிருபைக்
கந்தனெனப்பேர்படைத்த செட்டியாரே
பாட்டுக்குப்பேராசைப்பட்ட செட்டியாரே நன்றாப்
பாடுகிறேன்கேளுங்காணுஞ் செட்டியாரே
நாட்டுக்கெலாநதலைமைச் செட்டியாரே நிதி
நல்கும்பழனியப்பச் செட்டியாரே. (௱௨௬)

பொன்மாரிபெய்தவூரிற் செட்டியாரே நம்பிப்
பூசுரருமைப்பூசிக்கச் செட்டியாரே
நன்மையாங்கோயிலொன்று செட்டியாரே யுமக்கு
நான்கட்டிவைக்கிறேன்காண் செட்டியாரே
என்மேற்றயவுவையுஞ் செட்டியாரே நிதி
எளிதில்வாணிபத்தாலீயுஞ் செட்டியாரே
சொன்மாதவர்பணியுஞ் செட்டியாரே தில்லைச்
சோதியருள்பழனிச் செட்டியாரே. (௱௨௭)

அன்னசத்திரமொன்று செட்டியரரோ மேலாம்
அந்தணர்கள் தினம்புசிக்கச் செட்டியாரே
பொன்னிதீர்த்தக்கரையிற் செட்டியாரே திருப்
புத்தூரிற்செய்யவேண்டுஞ் செட்டியாரே
கன்னலுவக்குமொழிச் செட்டியாரே யெனக்குக்
கனசமிகத்திருமையா செட்டியாரே
பொன்னம்பலவனருள்செட்டியாரே யெழிற்
புனிதப்பழனியப்பச் செட்டியாரே. (௱௨௮)

நந்தவனங்கள்பல செட்டியாரே யுமக்கு
நறுமலர்த்தொடையல்சாத்தச் செட்டியாரே
சொந்தத்திலேசெய்யச் செட்டியாரே யெற்குச்
சுவர்ணமிகத்தாருமையா செட்டியாரே
கந்தனெனப்பேர்படைத்த செட்டியாரே மிகு
கருணைக்கடலான செட்டியாரே
வந்திக்கின்றேனும்மைநான் செட்டியாரே யிங்கு
வாரும்வாரும்பழனிச் செட்டியாரே. (௱௨௯)

மாதவரெலாம்வசிக்கச் செட்டியாரே நானும்
மங்கையர்மயக்கமன்று செட்டியாரே
ஓதில்வேதாந்தனுலைச் செட்டியாரே நிதஞ்
சிரவணாதிகள்செய்யச் செட்டியாரே
ஓதுமுமைப்பூசைசெய்யச் செட்டியாரே கூபம்
ஊறுமிடந்தனிலே செட்டியாரே
நீதிமடங்கட்டநிதி செட்டியாரே நல்கு
நிருத்தனருளும்பழனிச் செட்டியாரே (௱௩௰)

ஏதோயான் செய்ததவஞ் செட்டியாரே மிக
என்றலையினல்லெழுத்து செட்டியாரே
மாதவரெலாந்துதிக்குஞ் செட்டியாரே கழனி
மாதவர்பாற்சேர்ந்தேனையா செட்டியாரே
பாதகத்தெய்வந்தொழாமற் செட்டியாரே யுமது
பத்தர்மனைப்பாலனானேன் செட்டியாரே
ஈதுந்தவமல்லவோ செட்டியாரே தனம்
ஈயுநடனீபழனிச் செட்டியாரே. (௱௩௧)

மட்டித்தெய்வங்களினைச் செட்டியாரே யென்சிறு
மதலையுமதிக்கமாட்டான் செட்டியாரே
குட்டிவெட்டிப்பொங்கலிடச் செட்டியாரே நாங்கள்
குசப்பயல்காலில்விழோஞ் செட்டியாரே

பட்டியின்றார்போலில்லைகாண் செட்டியாரே யுமது
பத்திமறக்கமாட் டாஞ் செட்டியாரே
அட்டியின்றிநிதிதாருஞ் செட்டியாரே தில்லை
அம்பலவணிபழனிச் செட்டியாரே. (௱௩௨)

கறுப்பன்காளியென்றுற் செட்டியாரே நாங்கள்
காறியுமிழ்வோங்காணுஞ் செட்டியாரே
மறுப்பேயிலைமதியோஞ் செட்டியாரே யதனை
மதிப்பாரையுமதியோஞ் செட்டியாரே
அறுப்போம்வினையையெல்லாஞ் செட்டியாரே யுமது
ஆவினன்குடிக்குவந்து செட்டியாரே
நறுபபூவணிகின்ற செட்டியாரே நிதி
நல்குநடனீபழனிச் செட்டியாரே. (௱௩௩)

அடியார்க்கெல்லாஞ்செல்வஞ் செட்டியாரோ நீர்தாம்
அளிக்குந்திறமிருக்கச் செட்டியாரே
நெடியோன்வழுத்துமுந்தை செட்டியாரே காட்ட
நேசர்க்குசசுமந்ததென்னச் செட்டியாரே
கொடியிட்டபிட்டினுக்காச் செட்டியாரே மண்ணைக்
கூடையிற்சுமந்ததென்ன செட்டியாரே
அடிபட்டதெனனகாணுஞ் செட்டியாரே நிதி
அருளும்பழனியப்பச் செட்டியாரே. (௱௩௪)

காமுற்றமங்கைககுச் செட்டியாரே யுந்தை
கருணைவடிவமாகிச் செட்டியாரே
தாமுற்றதனமெனவே செட்டியாரே யொரு
தனபதிவணிகன்போலச் செட்டியாரே
மாமனுய்வழக்குரைத்துச் செட்டியாரே யவள்
வருததந்தணித்தாரல்லோ செட்டியாரே
நாமும்மைநம்பினேங்காண் செட்டியாரே நிதி
நல்கும்பழனியப்பச் செட்டியாரே. (௱௩௫)

காமனுங்காமுறுமெழிற் செட்டியாரே வள்ளிக்
காதலிகாதலுறுஞ் செட்டியாரே
பூமனும்வணங்குகின்ற செட்டியாரே மிகப்
புண்ணியர்க்குப்புண்ணியராஞ் செட்டியாரே
பாமரருக்கெட்டாத செட்டியாரே ஞானப்
பண்டிதரெனும்பெயரார் செட்டியாரே
சேமநிதிதாருங்காணுஞ் செட்டியாரே தில்லைச்
செல்வனருளும்பழனிச் செட்டியாரே. (௱௩௬)

முத்துப்பல்லக்குடைய செட்டியாரே தலை
முதலாளியாகின்ற செட்டியாரே
கொதருத்ராவடமணிந்த செட்டியாரே சைவக்
குடிசனைநிலைக்கவைத்த செட்டியாரே
தத்துபரிமேலேறுஞ் செட்டியாரே சுயஞ்சை
தன்னியமேவடிவாஞ் செட்டியாரே
கத்துவதைக்கேட்டருளுஞ் செட்டியாரே யெற்குக்
கனகநனியீபழனிச் செட்டியாரே. (௱௩௭)

தேவதேவோத்தமனே செட்டியாரே சிக்கற்
சிங்காரவடிவேலாஞ் செட்டியாரே
பாவத்தைக்கொள்ளைகொள்ளுஞ் செட்டியாரே யெல்லாப்
பாக்கியமுமன்பர்க்கீயுஞ் செட்டியாரே
நீபத்தாரணிகின்ற செட்டியாரே யளகை
நிதிபதியுங்கைகுவிக்குஞ் செட்டியாரே
ஆபத்துக்குதவுநிதி செட்டியாரே தில்லை
அம்பலவனீபழனிச் செட்டியாரே. (௱௩௮)

மதுரைக்கெப்போதும்வந்தாற் செட்டியாரே யுந்தைக்கு
வளமாயபிடேகஞ்செய்வேன் செட்டியாரே
திதிமுட்டினாலேயன்றோ செட்டியாரே யிப்போது
செய்யாமலாசித்துவந்தேன் செட்டியாரே
ததியிதுதாருமையா செட்டியாரே தன
பதிநிதிதாருமையா செட்டியாரே
கதியுமையன்றிக்காணேன் செட்டியாரே தில்லைக்
கானனருள்பழனிச் செட்டியாரே (௱௩௯)

பாடிவந்தவெனக்குச் செட்டியாரே யுமது
பத்தனானவெமக்குச் செட்டியாரே
நாடிவந்தவெனக்குச் செட்டியாரேமிக
நம்பிவந்தவெனக்குச் செட்டியாரே
தேடியலையாமலே செட்டியாரே யெளிதிற்
சலாபத்திலேவிளைந்து செட்டியாரோ
கோடிநிதிதாருமையா செட்டியாரே தில்லைக்
கூத்தனருள்பழனிச் செட்டியாரே. (௱௪௰)

இந்தச்சமையத்திலே செட்டியாரே யெளிதில்
யெற்குநிதியளித்தாற் செட்டியாரே
கந்தமலர்ப்பதத்தைச் செட்டியாரே யொரு
கனவிலுநான்மறவேன் செட்டியாரே

வந்தனைமிகவுஞ் செய்வேன் செட்டியாரே யுமை
　　மனக்கோயிற்குள்ளே வைப்பேன் செட்டியாரே
தந்துகாக்கவேணுமையா செட்டியாரே தில்லைச்
　　சம்புவருள்பழனிச் செட்டியாரே. (௯௪௧)

மூண்டகன்பரவுகின்ற செட்டியாரே சீவன்
　　முத்தரெலாங்கைகுவிக்குஞ் செட்டியாரே
தொண்டருக்குத் தொண்டராஞ் செட்டியாரே பரி
　　சுத்தமானசுப்பிரமணியச் செட்டியாரே
தண்டபாணிதருவாரென்றுற் செட்டியாரே ஆமா
　　தருவாரென்றே யிகழ்வார் செட்டியாரே
வண்டர்களை யான்பழிக்கச் செட்டியாரே நிதி
　　வழங்குநடனீபழனிச் செட்டியாரே. (௯௪௨)

மலையாண்டி யீவரென்றுற் செட்டியாரே ஆமா
　　வழங்குவாரென்றேயிகழ்வார் செட்டியாரே
தலைவள்ளலாகின்ற செட்டியாரே நிதி
　　தாருமவரைப்பழிக்கச் செட்டியாரே
கலையாவையுமுணர்ந்த செட்டியாரே மிகக்
　　கவிவாணர்போற்றுகின்ற செட்டியாரே
விலையிலாமாணிக்கச் செட்டியாரே தில்லை
　　வேதியனீயும்பழனிச் செட்டியாரே. (௯௪௩)

குலதெய்வமீயுமென்றுற் செட்டியாரே மலைக்
　　குகைத்தெய்வமீயுமென்றுற் செட்டியாரே
நலதெயவமீயுமென்றுற் செட்டியாரே நான்
　　நம்புதெய்வமீயுமென்றுற் செட்டியாரே
பலதெய்வந்தொழுமூடர் செட்டியாரே யிதைப்
　　பழிப்பார்பழிப்பாரையோ செட்டியாரே
நலமிலவரைப்பழிக்கச் செட்டியாரே நிதி
　　நல்குநடனீபழனிச் செட்டியாரே. (௯௪௪)

இக்கலிகாலத்திலே செட்டியாரே தெய்வம்
　　ஈயுமோவெவர்க்கு மென்பார் செட்டியாரே
அக்கடவுளுக்குச்செய்தாற் செட்டியாரே தவந்தான்
　　அதற்கையமில்லையென்பார் செட்டியாரே
தக்கவுமைநானம்புதல் செட்டியாரே நீருந்
　　தாமறிவீரல்லாமற் செட்டியாரே
மக்களறிவார்களோ செட்டியாரே நிதி
　　வழங்குநடனீபழனிச் செட்டியாரே. (௯௪௫)

கலிகாலமென்றவர்க்குச் செட்டியாரே யானிக்
கவியுநிதியுங்காட்டச் செட்டியாரே
சலியாமற்றருமையா செட்டியாரே மிக்க
தனமிப்பிவாணிபத்தாற் செட்டியாரே
நலியாமலல்லவோதான் செட்டியாரே நும்பால்
நானும்விரைந்தோடிவந்தேன் செட்டியாரே
ஒலியாம்பதமுடைய செட்டியாரே புலி
யூரனருளும் பழனிச் செட்டியாரே. (௱௪௬)

மனையாட்குச்சொன்னக்காற் செட்டியாரே முன்போய்
வாங்கினதென்னென்பாளென்று செட்டியாரே
தனையருக்குஞ்சொல்லாமற் செட்டியாரே மதுரை
தனக்குவருவதுபோற் செட்டியாரே
வினையேனிங்கோடிவந்தேன் செட்டியாரே யென்றன்
வேதனையைமாற்றுமையா செட்டியாரே
எனையாதரியுமையா செட்டியாரே நிதி
யீயுநடனீபழனிச் செட்டியாரே. (௱௪௭)

வயிறுபசித்ததென்றாற் செட்டியாரே குழவி
மாதாவினபாற்சொல்லுமன்றிச் செட்டியாரே
அயலோரிடத்திறபோமோ செட்டியாரே நானும்
அதுபோலும்மைநாடிவந்தேன் செட்டியாரே
பயமகலச்செய்யுமையா செட்டியாரே மிகவும்
பாக்கியந்தந்தாளுமையா செட்டியாரே
நயமெளிதிற்றருமையா செட்டியாரே தில்லை
நடேசனருள்பழனிச் செட்டியாரே (௱௪௮)

வேயுறுதோளியென்றே செட்டியாரே நீர்தாம்
விளம்புந்தேவாரத்தினுஞ் செட்டியாரே
ஆயதோர்சோதிடந்தான் செட்டியாரே நன்றாய்ச்
சொன்னீரேநம்பினர்க்குச் செட்டியாரே
ஞாயிறுசூலமேற்கென்றே செட்டியாரே வரவும்
நானுமையப்பட்டதுண்டோ செட்டியாரே
தாயெனவுமைநம்பினேன் செட்டியாரே நிதி
தாருநடனீபழனிச் செட்டியாரே. (௱௪௯)

தாசிவீட்டுக்குச்செல்வோன் செட்டியாரே சகுனந்
தடுத்தக்காணிற்கவேண்டுஞ் செட்டியாரே
கூசாமற்றன்வீட்டிற்செல்வோன் செட்டியாரே சகுனங்
குறியாமற்செல்வதுபோற் செட்டியாரே

மாசிலுமைச்சொந்தமாக்கிச் செட்டியாரே ஒற்றை
மறையோன்வரவ வந்தேன் செட்டியாரே
ஆசினறியுமைநப்பினேன் செட்டியாரே தனம்
அருளுநடனீபழனிச் செட்டியாரே. (௱௫௰)

ஈனனுக்குநிதியீந்தீர் செட்டியாரே சீதக்
காதிக்குநிதியீந்தீர் செட்டியாரே
மனனனகுமுணனுசகுஞ் செட்டியாரே நிதி
வழங்கிப்புகழ்படைத்தீர் செட்டியாரே
சொர்ணமளிக்களிக்கச் செட்டியாரே யெறகுத்
தொலையாமற்றருமையா செட்டியாரே
வர்ணமயிலேறிவருஞ் செட்டியாரே தில்லை
மன்றனருள்பழனிச் செட்டியாரே. ௱௫௧)

செட்டிகட்குச்குருவாகுஞ் செட்டியாரே புனைவச்
சேனுபதிகுருவாஞ் செட்டியாரே
மட்டில்தயவுடைய செட்டியாரே யெங்கள்
மயூரகிரிச்சுப்பிரமணியச் செட்டியாரே
சட்டிவிரததோர்க்குச் செட்டியாரே நிதியுஞ்
சந்தானமுங்கொடுக்குஞ் செட்டியாரே
அட்டியிலாமலெற்குச் செட்டியாரே நிதியிக்
கருளுநடனீபழனிச் செட்டியாரே. (௱௫௨)

குருகிரிச்சுப்பிரமணியச் செட்டியாரே பரங்
குன்றிலுறைகந்தப்பச் செட்டியாரே
பொருவில்திருத்தணிகைச் செட்டியாரே திருப்
போரூரிற் சண்முகச் செட்டியாரே
கருவையகற்றுமையா செட்டியாரே யென்னைக்
கடைக்கண்ணுற்பாருமையா செட்டியாரே
தருவைப்பழித்தகொடைச் செட்டியாரே நிதி
தாருநடனீபழனிச் செட்டியாரே. (௱௫௩)

ஆண்பனையைசாய்க்கப்பாடுஞ் செட்டியாரே யுமக்
கதைவிடயிஃதரிதோ செட்டியாரே
வீணரெனைநிந்தியாமற் செட்டியாரே யெற்கு
மிகவுநிதியளிப்பீர் செட்டியாரே
பூண்மிகவணிந்திருக்குஞ் செட்டியாரே கழனிப்
புண்ணியர்கள்போற்றுகின்ற செட்டியாரே
காண்படிக்குவாணிபத்தாற் செட்டியாரே நிதி
காட்டுநடனீபழனிச செட்டியாரே. (௱௫௪)

வாக்கினையுமக்குத்தந்தேன் செட்டியாரே சென்னி
வணங்கநிதமுந்தந்தேன் செட்டியாரே
ஆக்கையுமுமக்குத்தந்தேன் செட்டியாரே மனம்
ஆனமட்டுந்தந்தேனையா செட்டியாரே
போக்கிலிமனதினைத்தான் செட்டியாரே யுமது
பொன்னடியில்வைத்துக்கொள்ளுஞ் செட்டியாரே
பாக்கியமிகவுந்தாருஞ் செட்டியாரே தில்லைப்
பரமனருள்பழனிச் செட்டியாரே. (௱௫௫)

தாதாவிடத்தினிலே செட்டியாரே யொரு
தரித்திரன்போயிரந்தாற் செட்டியாரே
மாதாவினுமிரங்கிச் செட்டியாரே நிதி
வழங்கவேண்டுமல்லவோ செட்டியாரே
ஈதல்செய்யாதிருந்தாற் செட்டியாரே நிந்தை
எவர்க்குறுமெனறெண்ணிப்பாருஞ் செட்டியாரே
மாதனமெனக்களித்தாற் செட்டியாரே கீர்த்தி
வருநடனியும்பழனிச் செட்டியாரே. (௱௫௬)

சிதம்பரதலந்தனிலே செட்டியாரே யறஞ்
செய்யமிகவிச்சையுண்டு செட்டியாரே
இதம்பெறுமறத்துக்காகச் செட்டியாரே நிதி
யீயுமென்றேனும்மிடத்திற் செட்டியாரே
மதம்பெறயான்கேட்கவில்லை செட்டியாரே மதமும்
வராமனீர்பார்த்துக்கொள்ளுஞ் செட்டியாரே
நிதம்பணமெனக்கருளுஞ் செட்டியாரே தில்லை
நிருத்தன்றரும்பழனிச் செட்டியாரே. (௱௫௭)

உம்மிடத்தில்வந்தவெனைச் செட்டியாரே நிதியம்
உதவாதோட்டிவிடுவதில்லை செட்டியாரே
செம்மையாய்நானறிவேன் செட்டியாரே யெனினுந்
திடுக்கிடுகிறதுநெஞ்சஞ் செட்டியாரே
அம்மவிதற்கென்னசெய்வேன் செட்டியாரே கையை
யமர்த்தியஞ்சலென்கொணாதோ செட்டியாரே
மும்முறைவணங்குகிறேன் செட்டியாரே தில்லை
முத்தன்றரும்பழனிச் செட்டியாரே. (௱௫௮)

என்னைச்சிரித்தாரானாற் செட்டியாரே யெனக்
கிறையாருமக்கில்லையோ செட்டியாரே
உன்னியினம்பார்த்திலீரோ செட்டியாரே நீரும்
உன்மத்தமுள்ளவரோ செட்டியாரே

வன்னியினுறுமெழுகாய்ச் செட்டியாரே நானும்
வந்தடுத்தேவாரென்றேன் செட்டியாரே
பொன்னெனக்கொல்லைநாருஞ் செட்டியாரே தில்லைப்
பொற்பொதுவேவானீபழனிச் செட்டியாரே. (௱௫௯)

சீலமிருந்தசைவச் செட்டியாரே சமணத்
தீயரைக்கழுவிலிட்ட செட்டியாரே
காலமூன்றுமுணர்ந்த செட்டியாரே தினங்
கழுத்திலக்கமாலைபுனை செட்டியாரே
பாலனைப்போலென்முன்வந்து செட்டியாரே ஞானி
பாலன்செட்டியென்றுரைத்த செட்டியாரே
ஓலமுமக்கோலமையா செட்டியாரே நிதி
யுதவுநடனீபழனிச் செட்டியாரே. (௱௬௰)

தூயவெண்ணீறணியுஞ் செட்டியாரே பரி
சுதந்தருளத்தமருஞ் செட்டியாரே
ஐயோவுமைநம்பிச் செட்டியாரே நானும்
அவதிப்படலாமோகாண் செட்டியாரே
மெய்யறமும்பொய்யாச்சே செட்டியாரே யும்மை
மேவுவோர்க்குத்துன்போபலன் செட்டியாரே
நையயவோவுமையடைந்தேன் செட்டியாரே நிதி
நல்குநடனீபழனிச் செட்டியாரே. (௱௬௧)

ஆரூர்ச்சைவப்பண்டாரஞ் செட்டியாரே யென்னை
ஆலவாயதிற்கண்டு செட்டியாரே
தாருஞ்செலவுக்கென்றூர் செட்டியாரே யந்தச்
சற்சனர்க்குக்கொஞ்சமீந்தேன் செட்டியாரே
சீருறுமக்காலமென்றூற் செட்டியாரே யவர்க்குச்
சிறிதாவோநானளிப்பேன் செட்டியாரே
வாருந்தனமருளச் செட்டியாரே தில்லை
மன்னனருளும்பழனிச் செட்டியாரே. (௱௬௨)

இல்லையெனச்சொல்வார்க்குச் செட்டியாரே பதில்
இல்லையென்னவாய்நாணுதே செட்டியாரே
தில்லைமறையோர்கேட்டாற் செட்டியாரே யற்பத்
திரவியங்கொடுக்கலாமோ செட்டியாரே
நல்லபிரபுவாச்சே செட்டியாரே யுமை
நம்பினவனுமாச்சே செட்டியாரே
அல்லலயசற்றுமையா செட்டியாரே நிதி
யருளுநடனீபழனிச் செட்டியாரே. (௱௬௩)

தில்லைமூவாயிரவர் செட்டியாரே கொஞ்சஞ்
செலவுக்கென்னைக்கேட்டார்கள் செட்டியாரே
நல்லதென்றுசொன்னேனே செட்டியாரே யந்த
நன்மொழிதான் பொய்க்கலாமோ செட்டியாரே
இல்லையென்னநாணுதையா செட்டியாரே மிக
ஈயமுட்டாயிருக்கின்றதே செட்டியாரே
அல்லலைவினைந்துநீக்கிச் செட்டியாரே செம்பொன்
அருளுநடனீபழனிச் செட்டியாரே. (௱௬௪)

கொழும்புக்குப்போகவென்றாற் செட்டியாரே யது
சோக்கொலைபுரியுந்தேசஞ் செட்டியாரே
அழும்பான்மிகுந்ததேசஞ் செட்டியாரே சைவ
ஆசாரமற்றதேசஞ் செட்டியாரே
செழும்பான்மையோர்க்குரிய செட்டிடாரே முதநுச்
சிலாபத்திலென கூட்டாளிபாற செட்டியாரே
அழும்பான்மைதனைநீக்கிச் செட்டியாரே நிதிமிக்
கருளுநடனீபழனிச் செட்டியாரே. (௱௬௫)

மெத்தமெத்தப்பாட்டுக்கேட்டுச் செட்டியாரே என்பால்
விரும்பாதிருக்கலாமோ செட்டியாரே
சித்தமிரங்குமையா செட்டியாரே யெற்குச்
செம்பொன்கோடிதாருமையா செட்டியாரே
வித்துவானையேயக்கலாமோ செட்டியாரே நீர்தாம்
மெத்தச்சமத்தரேனுஞ் செட்டியாரே
இத்தைப்போய்ச்சொலலவாருஞ் செட்டியாரே யுந்தை
யேமசபையிற்பழனிச் செட்டியாரே. (௱௬௬)

அடுத்தெனைக்கெடுக்கலாமோ செட்டியாரே சிதம்பர
அய்யாவண்டைச்சொல்லவாருஞ் செட்டியாரே
படுத்தடிபண்ணுதீர்காண் செட்டியாரே சொந்தப்
பாலனெனப்பாருங்காணுஞ் செட்டியாரே
கடுத்தமொழிசொன்னாலுஞ் செட்டியாரே யென்றன்
சலிநீங்கிப்போகுமையா செட்டியாரே
கொடுத்திடுங்கோடிதனஞ் செட்டியாரே தில்லைக்
கூத்தனருளும்பழனிச் செட்டியாரே. (௱௬௭)

காக்கக்கடனுமக்குச் செட்டியாரே யினிக்
கவலையெனக்கில்லைகாணுஞ் செட்டியாரே
மார்க்கண்டனுக்காகச் செட்டியாரே யுக்தை
மறலியையுதைத்தாரல்லோ செட்டியாரே

தீர்க்கமாய்கிதிதருவீர் செட்டியாரே யிதிற்
சிறிதுமையமில்லை நானுஞ் செட்டியாரே
மூர்க்கர்தமக்கெட்டாத செட்டியாரே தில்லை
முத்தனருளும்பழனிச் செட்டியாரே. (௱௬௮)

மச்சக்காவடிவந்தாற் செட்டியாரே யங்கு
மாண்டதிங்குதாவுமையா செட்டியாரே
துச்சவரகுமிதான் செட்டியாரே பூசுந்
தூய்யவெண்ணீறுகுமாமே செட்டியாரே
விச்சைமிகவுடைய செட்டியாரே சித்தி
விளையாட்டுப்பிள்ளையோகாண் செட்டியாரே
அச்சநதனையகற்றிச் செட்டியாரே நிதி
யருளுநடனீபழனிச் செட்டியாரே (௱௬௯)

உம்முடையவேளூர்க்குச செட்டியாரே புதல்விக்
கொருமுடிவைத் திருப்பதாற் செட்டியாரே
செம்மையாய்த்துலாமதியிற் செட்டியாரே யங்குச்
சென்றுவரவேணுமையா செட்டியாரே
கைம்மாற்றினிவாங்காமற் செட்டியாரே யந்தக்
காணிக்கைமுதலெவைக்குஞ் செட்டியாரே
இம்மதிக்குள்ளாகச் செட்டியாரே நிதி
யீயுநடனீபழனிச் செட்டியாரே. (௱௭௰)

இருநதபொருளையெல்லாஞ் செட்டியாரே யறம்
ஈநததிலுலல்லவோதான் செட்டியாரே
வருநதியுமைத்தஞ்சமென்றேன் செட்டியாரே மிருந்த
மாழைதாருமொல்லையினிற் செட்டியாரே
அருநதல்முதலானவைக்குஞ் செட்டியாரே யினி
யாரிடத்தில்வாங்கப்போவேன் செட்டியாரே
திருந்துநடனீபழனிச் செட்டியாரே தயவு
செய்யுமுமைமக்கும்பிடுவேன் செட்டியாரே. (௱௭௧)

தனமுள்ளகாலத்திற் செட்டியாரே நானுந்
தைப்பூசத்திருநாளுக்குச் செட்டியாரே
இனமுடன்கூடவந்து செட்டியாரே யுமை
யிறைஞ்சித்தமிழ்கூறினேனே செட்டியாரே
மனக்குறைசொன்னேனே செட்டியாரே நிதி
வழங்குமெனக்கேட்டேனே செட்டியாரே
கனகமிந்நாள்வேண்டுமையா செட்டியாரே தில்லை
கானனருளும்பழனிச் செட்டியாரே. (௱௭௨)

மெத்தப்பசித்தவர்க்குச் செட்டியாரே யன்னம்
விரைவிலிடவேண்டுமன்றிச் செட்டியாரே
சித்தஞ்சோதிக்கலாமோ செட்டியாரே சிலநாட்
செல்லட்டுமென்கலாமோ செட்டியாரே
பத்தர்க்கெளியரென்றே செட்டியாரே யுமைப்
பகர்ந்ததமிழெல்லாம்பொய்யோ செட்டியாரே
சத்தியமாய்க்கோடிதாருஞ் செட்டியாரே தில்லைச்
சம்புவருளும்பழனிச் செட்டியாரே. (௱௭௩)

வள்ளுவனார்குறள்முதற் செட்டியாரே யறம்
வழுத்துகின்றநூல்களெல்லாஞ் செட்டியாரே
தெள்ளுணர்வுநூல்தானே செட்டியாரே பொய்மை
செப்புகின்றநூலோதான் செட்டியாரே
கள்ளமின்றித்தில்லையினிற் செட்டியாரே நான்றான்
களிப்புடன்செய்யறப்பயன் செட்டியாரே
வள்ளலாநீர்நல்காவிட்டாற் செட்டியாரே யுமக்கு
வளமென்னடனீபழனிச் செட்டியாரே. (௱௭௪)

மதங்களனைத்தினிலுஞ் செட்டியாரே சைவ
மதமிதுவேமேலானாற் செட்டியாரே
பதங்கள்பெறுதலத்தினுட் செட்டியாரே யுமது
பழனிப்பதிமேலானாற் செட்டியாரே
சதங்களனைத்தினிலுஞ் செட்டியாரே யுமது
சதமெனக்குமெய்யானாற் செட்டியாரே
இதம்பெறவெளிதினிற் செட்டியாரே தனம்
ஈயுநடனீபழனிச் செட்டியாரே. (௱௭௫)

அருணாசலகுருவைச் செட்டியாரே நானும்
அடைந்தநாள்முதலாகச் செட்டியாரே
ஒருகுறைவுமில்லைகாணுஞ் செட்டியாரே யவர்
உமதுவடிவமல்லோ செட்டியாரே
பொருளுளதையறஞ்செய்தேன் செட்டியாரே யின்னும்
புரிந்திடுமாசையினாற் செட்டியாரே
தருவாமுமையடைந்தேன் செட்டியாரே நிதி
தாருநடனீபழனிச்செட்டியாரே. (௱௭௬)

பழியேற்றுக்கொள்ளாதீர் செட்டியாரே யும்மைப்
பாடுமெற்குநிதியீவான் செட்டியாரே
வழிசெம்மையாகச்சொல்லுஞ் செட்டியாரே படு
உழக்கினிப்பண்ணாதீர் செட்டியாரே

அழிவில்பெருங்கீர்த்தியுள்ள செட்டியாரே நம்பும்
அடியார்தமக்கெளிய செட்டியாரே
விழியொருதுவாதசத்துச் செட்டியாரே தில்லை
வேந்தனருளும்பழனிச் செட்டியாரே. (௱௭௭)

தருமசாத்திரந்தனைச் செட்டியாரே கிழித்துத்
தண்ணீரிலேபோடவா செட்டியாரே
பெருநெருப்பிற்போடவா செட்டியாரே சற்றும்
பிழையின்றிநிதிதாரீரா செட்டியாரே
குருவெனவுமைக்குப்பிட்டேனே செட்டியாரே மௌலிக்
கொற்றவர்க்குச்சொற்றவராஞ் செட்டியாரே
கருமமகற்றுகின்ற செட்டியாரே தில்லைக்
கானனருளும்பழனிச் செட்டியாரே. (௱௭௮)

ஞானமன்றிலுந்தைபாலிற் செட்டியாரே சிவ
ஞானங்கேட்டாற்றருவரர் செட்டியாரே
ஏனையகாரியமெல்லாஞ் செட்டியாரே யந்த
எழிற்றலத்தியார்காணுஞ் செட்டியாரே
நானவரோடிட்டங்காணுஞ் செட்டியாரே யுமக்கு
நன்றாய்த்தெரியுங்காணுஞ் செட்டியாரே
ஆனதாலங்கேசெலத்தான செட்டியாரே நிதி
யருளும்பழனியப்பச் செட்டியாரே. (௱௭௯)

என்னையாளச்சற்குருவுஞ் செட்டியாரே யெனக்
கியம்புமொழியைக்கேளுஞ் செட்டியாரே
பொன்னுறுவாணிபஞ்செயினுஞ் செட்டியாரே வேதாந்தம்
புகல்சிரவணாதிகளைச் செட்டியாரே
மன்னியிருக்கச்சொன்னார் செட்டியாரே யருணை
மலையாந்துறவுச்சாமி செட்டியாரே
கன்னலுவக்குமொழிச் செட்டியாரே நிதி
காட்டிநடனீபழனிச் செட்டியாரே. (௱௮௰)

மெத்தத்தனமிருந்தாற் செட்டியாரே யறம்
மிகமிகச்செய்திடினுஞ் செட்டியாரே
கத்தாரொருவருமே செட்டியாரே யெனது
காதலியுந்துன்பமுற்றாள் செட்டியாரே
சித்தமிரங்குமையா செட்டியாரே யெற்குத்
திருமிகத்தாருமையா செட்டியாரே
சத்தியமாயுமைநம்பினேன் செட்டியாரே யிது
சமயநடனீபழனிச் செட்டியாரே. (௱௮௧)

உம்மைநம்பிவந்தவெற்குச் செட்டியாரே யுதவி
யூரிலெவருஞ்செய்வாரோ செட்டியாரே
தம்மடியார்தன்பமுற்றாற் செட்டியாரோ நீக்குந்
தகைமைதலைவர்க்கலவோ செட்டியாரே
எம்மிறைவராகின்ற செட்டியாரே யிப்போது
இரங்கிநிதியளியுஞ் செட்டியாரே
அம்மையொருபாகரருள் செட்டியாரே பழனி
ஆண்டவராகினறவெங்கள் செட்டியாரே (௪௨)

எத்தனைதான்சொன்னாலுஞ் செட்டியாரே யென்பால
இரக்கமுமக்கில்லையோ செட்டியாரே
மெத்தவருந்தலானேன் செட்டியாரே யிந்த
வேதனையைத்திருமையா செட்டியாரே
புத்திரனானுமக்கையா செட்டியாரே சற்றும்
பொய்யுரைக்கமாட்டேனையா செட்டியாரே
அத்தமருளுமையா செட்டியாரே தில்லை
யம்பலவனீபழனிச் செட்டியாரே. (௪௩)

குற்றமுமக்கேதுசெய்தேன் செட்டியாரே செயினுங்
குணமாகக்கொள்ளுமையா செட்டியாரே
பற்றெனக்குமதுபாதஞ் செட்டியாரே யிந்தப
பாரினில்வேறில்லைகாணுஞ் செட்டியாரே
சற்றுமிரங்காதிருந்தாற் செட்டியாரே யென்ன
தானசெய்வேனிதியீயுஞ் செட்டியாரே
முற்றுமிரட்சியுங்காணுஞ் செட்டியாரே தில்லை
முனிவனருளும்பழனிச் செட்டியாரே. (௪௪)

பட்டமச்சந்தாவுமென்றாற் செட்டியாரே யெற்குப்
பணந்தருவதோவருமை செட்டியாரே
அட்டசித்தியுமறிந்த செட்டியாரே யுமக்
கருமையாவதென்னகாணுஞ் செட்டியாரே
சட்டமகற்றுமையா செட்டியாரே யெற்குக்
கனகமிகத்தாருமையா செட்டியாரே
நட்டமிடுவோனருளுஞ் செட்டியாரே பழனி
நன்மலைமேல்வீற்றிருக்குஞ் செட்டியாரே. (௪௫)

திருப்பள்ளியெழுச்சிக்குமுன் செட்டியாரே யுமது
செவிகுளிரக்கத்தினேனே செட்டியாரே
விருப்பமன்றுசெய்திலீரோ செட்டியாரே சென்று
மீண்டுமும்பால்வந்தேனையா செட்டியாரே

திருபபொலியச்செய்யுமையா செட்டியாரே யிச்
சிலாபத்திலென்கூட்டாளிபாற் செட்டியாரே
தருப்பொலியாவினன்குடிச் செட்டியாரே தில்லைத்
தாண்டவனருள்பழனிச் செட்டியாரே. (௪௯௩)

கழனிமுத்துராமரான செட்டியாரே யந்தக்
கறபகமுநாணுங்கொடைச் செட்டியாரே
அழலின்மெழுகதாகச் செட்டியாரே மிக
அகனைநந்துவாடினேன் செட்டியாரே
மழலைமொழியுடைய செட்டியாரே நிதி
வழங்கியெனைக்காக்கவேண்டுஞ் செட்டியாரே
பழனி பதியிலுறை செட்டியாரே தில்லைப்
பதிஞானிசசெட்டியாரீ செட்டியாரே. (௪௯௭)

திருவாமருணசலச் செட்டியாரே தில்லைக்
கோணுஞ்சபாபதிச் செட்டியாரே
ஒருபொருளாயிருக்குஞ் செட்டியாரே துவிதம்
ஒருககாலுமில்லாத செட்டியாரே
தருவீரெனக்குநிதி செட்டியாரே யுமது
தஞ்சநதஞ்சமடியேன் செட்டியாரே
திருவாவினன்குடிச் செட்டியாரே அட்ட
சித்தியுஞ்செயும்பழனிச் செட்டியாரே. (௪௯௮)

மிக்கபரதேசிக்கெல்லாஞ் செட்டியாரே யுமது
வேலாயுதத்துமுன்பாற் செட்டியாரே
தக்கபூசையிடுவோஞ் செட்டியாரே நாங்கள்
தலைதலைமுறையாகச் செட்டியாரே
அக்கனகததாலேயல்லோ செட்டியாரே வெகுநாள்
அட்டிப்பட்டிருக்கிறது செட்டியாரே
இக்கணமேபொன்தாருஞ் செட்டியாரே தில்லை
யீசனருளும்பழனிச்செட்டியாரே. (௪௯௯)

என்னைப்பெண்ணுக்கிவைத்த செட்டியாரே யெரியில்
இடுமேட்டைப்பச்சையாக்குஞ் செட்டியாரே
தனபததிலாழ்ந்தவெனைச் செட்டியாரே யிப்போது
தூக்கியினபக்கரைசேருஞ் செட்டிடியாரே
பொன்மிகத்தாருமையா செட்டியாரே யுமது
பொன்னடியைப்போற்றுகிறேன் செட்டியாரே
அன்பர்கசெளியரெனுஞ் செட்டியாரே தில்லை
யம்பலவனீபழனிச் செட்டியாரே.

கதிர்காமப்பதிமேவுஞ் செட்டியாரே யெழிற்
கழனிநகர்க்கந்தப்பச் செட்டியாரே
நிதியார்பொன்மாரியுறை செட்டியாரே புலியூர்
நிகழ்மேலக்கோபுரத்துச் செட்டியாரே
திதியானளைகையன்பொன் செட்டியாரே யிந்தச்
சிலாபத்திலெனக்கருளுஞ் செட்டியாரே
ததியிதுததியிது செட்டியாரே தில்லைத
தாண்டவனருள்பழனிச் செட்டியாரே. (௱௯௧)

பங்கேருகன்புகழுஞ் செட்டியாரே மெய்மைப்
பத்தர்தமக்கினிய செட்டியாரே
எங்கள்குலதெய்வமான செட்டியாரே நிதி
யெனக்குமிகத்தந்தருளுஞ் செட்டியாரே
தங்கமயப்பல்லக்கேறுஞ் செட்டியாரே தொந்தித்
தந்திமுகனுக்கிளைய செட்டியாரே
செங்கையில்வேல்பிடித்த செட்டியாரே தில்லைச்
சிவனாரருள்பழனிச் செட்டியாரே. (௱௯௨)

கணக்கெல்லாம்பாருங்காணுஞ் செட்டியாரே யுமக்குக்
கண்பனிரண்டிருக்கிறதே செட்டியாரே
வணக்கமாக்காணிக்கைதந்தோஞ் செட்டியாரே யினி
வழக்கென்னசொல்லுமையா செட்டியாரே
இணக்கமாய்ச்சொன்றைக்கேளுஞ் செட்டியாரே நீரே
யெங்களுக்குத்தரவேண்டுஞ் செட்டியாரே
குணக்கடலேநிதிதாருஞ் செட்டியாரே தில்லைக்
கூத்தனருளும்பழனிச் செட்டியாரே. (௱௯௩)

பொய்யடியேனென்றாற் செட்டியாரே பொதியின
புண்ணியராமெய்யர்பாற் செட்டியாரே
செய்யுளாவெழுதச்சொல்லிச் செட்டியாரே ஓலை
சீக்கிரத்திற்கொடுவரவோ செட்டியாரே
ஐ மில்லாதவண்ணஞ் செட்டியாரே யதனையின்
அளிக்கலாமேநிதியஞ் செட்டியாரே
துய்யவொருவாக்குச்சொல்லுஞ் செட்டியாரே தில்லைத
தூயோனருள்பழனிச் செட்டியாரே. (௱௯௪)

வடமொழிச்செய்யுளாகச் செட்டியாரே பொன்னி
வளநாடெங்கும்வசிப்பர் செட்டியாரே
திடஞானவல்லுநர் செட்டியாரே யவர்க்கோலை
சீக்கிரத்திற்கொடுவரவோ செட்டியாரே

அடம்பண்ணுமற்சொல்லுமையா செட்டியாரே நான்
அடிகளிடம்போய்வரவா செட்டியாரே
கடன்காப்பதுமக்கென்றாற் செட்டியாரே நிதி
காட்டுநடனீபழனிச்செட்டியாரே. (௱௧௫)

சிதம்பரத்தையாவிடத்திற் செட்டியாரே கழனித்
திசைநோக்கி யான்சென்று செட்டியாரே
இதம்பெறுநற்றமிழ்மாலை செட்டியாரே விளைந்
திங்கணங்கொடுவரவோ செட்டியாரே
அதன்பினட்டிசொல்லொணாதே செட்டியாரே யிப்போ
தளித்தாற்குறையெனனகாண் செட்டியாரே
சதமெனவுமைநம்பினேன் செட்டியாரே நிதி
தாருநடனீபழனிச் செட்டியாரே. (௱௧௬)

என்னைப்போலல்லசாணுஞ் செட்டியாரே யவர்
ஈனமின்றாசைவிட்டார் செட்டியாரே
பொன்னாசையுமொழித்தார செட்டியாரே கழனிப
புண்ணியர்சிதம்பரய்யா செட்டியாரே
அன்றோர்கையோலைவந்தாற் செட்டியாரே நீர்தாம்
அட்டியனுச்சொல்லலாமோ செட்டியாரே
பொன்னையினறுதாருங்காணுஞ் செட்டியாரே தில்லைப்
பொற்பொதுவோனீபழனிச் செட்டியாரே. (௱௧௭)

உமையவர்தானாகக்கண்டார் செட்டியாரே கழனி
உததமச்சிதம்பனையா செட்டியாரே
எமையுமவ்வாறுசெய்வார் செட்டியாரே பொல்லா
இசைவிட்டுகிட்டப்போனாற் செட்டியாரே
சமைய மிதுகாணுஞ் செட்டியாரே நிதி
தந்தனுப்பிவிட்டுவிடுஞ் செட்டியாரே
அமையுமமையுந்துன்பஞ் செட்டியாரே தில்லை
அம்பலவனீபழனிச் செட்டியாரே (௱௧௮)

பத்தருணகிரி செட்டியாரே முன்னம்
பகர்ந்தவனுபூதியினைச் செட்டியாரே
உத்தமமிதுவென்றெண்ணிச் செட்டியாரே நானும்
ஒருகடிகைக் கிருதரஞ் செட்டியாரே
கத்திந்தந்தொண்டைசட்டச் செட்டியாரே நீர்தாங்
கருணைகூராததென்ன செட்டியாரே
சத்தியத்திற்சத்தியராஞ் செட்டியாரே நிதி
தாருநடனீபழனிச் செட்டியாரே. (௱௧௯)

அந்தகனுக்கோரோலை செட்டியாரே யென்னை
அவன்றூதர்கிட்டாமலே செட்டியாரே
சொந்தமாயாண்டமென்றே செட்டியாரே மிகத்
துரிதமாயனுப்புமையா செட்டியாரே
சிந்தாமணியேயென் செட்டியாரே யெற்குச்
செல்வமிகத்தாருமையா செட்டியாரே
நந்தாதவாழ்வுடைய செட்டியாரே தில்லை
நடேசனருள்பழனிச் செட்டியாரே. (௨௦௦)

வாழிவாழிமிகச் செட்டியாரே தமிழ்
வழுத்துமருணகிரி செட்டியாரே
வாழிதிருநீறு செட்டியாரே மிக
வாழியக்குமாமணியுஞ் செட்டியாரே
வாழிதிருத்தில்லைமன்றுஞ் செட்டியாரே யாறு
மனையுமெப்போதும்வாழி செட்டியாரே
வாழிமிகுங்கருணை செட்டியாரே ஞான
வணிகனருளும்பழனிச் செட்டியாரே. (௨௦௧)

வாழியறுபத்துமூவர் செட்டியாரே துங்க
மாணிக்கவாசகர்வாழி செட்டியாரே
வாழியருணைக்குரவன் செட்டியாரே யுமது
மனையிருவோரும்வாழி செட்டியாரே
வாழியடியார்களெலாஞ் செட்டியாரே யுமை
வழுத்துங்கவிஞர்வாழி செட்டியாரே
வாழிமலர்ப்பதங்கள் செட்டியாரே ஞானி
வணிகனருளும்பழனிச் செட்டியாரே. (௨௦௨)

மங்களம் மங்களஞ் செட்டியாரே யுமது
மாதாபிதாவினுக்குச் செட்டியாரே
மங்களமங்களம் செட்டியாரே தேவர்
மாருக்கருணைக்குஞ் செட்டியாரே
மங்களமங்களஞ் செட்டியாரே குற
வள்ளிக்கும்யானைக்குஞ் செட்டியாரே
மங்களம்பழனியப்பச் செட்டியாரே வீர
வாகுமுதலோர்களுக்குஞ் செட்டியாரே. (௨௦௩)

மங்களங்கயமுகற்குஞ் செட்டியாரே கழனி
மாதவரனைவருக்குஞ் செட்டியாரே
மங்களங் கும்பமுனிக்குச் செட்டியாரே தமிழ
வழுத்துநற்கீரருக்குச் செட்டியாரே

மங்களமங்களஞ் செட்டியாரே யுமை
வாழ்த்துமடியார்க்கெல்லாஞ் செட்டியாரே
மங்களமங்களஞ் செட்டியாரே ஞான
வணிகனருளும்பழனிச் செட்டியாரே. (உ0ச)

## வேறு.

உத்தரவின்படிக்கடியேனிருநூறுகவியுரைத்தே
னொப்பீறில்லா
அத்தனருள்பழனியப்பச் செட்டியாரே யும்மை
யண்டினேற்குச்
சத்தியமாயிச்சிலாபதனிலே கோடிதனந்
தந்துநாயேன்
புத்திரபாரம்பரையா யுமதடிமை செயவருள்வீர்
போற்றிபோற்றி. (உ0ரு)

## செட்டியார்மாலை முற்றிற்று.

ஆக செய்யுள்-உஉ0.

சிவமயம்.

# கல்லுளிமாலை

காப்பு.

தில்லையான்குழவிமேன்முன் செட்டியார்மாலை சென்று
சொல்லவப்பழனிக்கோமான்றுவாதசச்செவியிறைனு
நல்லதாயேற்றல்கண்டுநன்னிதிவினைவிற்கொள்வான்
கல்லுளிமாலைசொல்லக்கணபதி காப்பதாமே.

திருவாரூரினிற் பழனிச்செட்டி வாழ்
தியாகராசன்மகனே பழனிச்செட்டி
ஒருதந்தைபேருக்குப் பழனிச்செட்டி நீ
ஊனம்வையாதே பழனிச்செட்டி
தருவனையானே பழனிச்செட்டி நல்ல
தருமப்பிரபுவே பழனிச்செட்டி
குருவாய்வந்தேற்குப் பழனிச்செட்டி மிகக்
கொடுப்பாய்மாழை பழனிச்செட்டி (க)

இப்பிவாணிபத்தாலே பழனிச்செட்டி நிதி
ஈயெனவேண்டினேன் பழனிச்செட்டி
தப்பாகச்கேட்கவில்லை பழனிச்செட்டி நான்
சததியவானல்லோ பழனிச்செட்டி
அப்பச்சிக்குந்தெரியுமே பழனிச்செட்டி நம
தாத்தாட்குந்தெரியுமே பழனிசெட்டி
செப்புமுனக்குந்தெரியும் பழனிச்செட்டி நமது
சேட்டனுமறிவானே பழனிச்செட்டி. (உ)

தடியுன்றன்கையிலே பழனிச்செட்டி செந்
தமிழென்றன்கையிலே பழனிச்செட்டி
அடித்தாலுமடிநீ பழனிச்செட்டி நான்
அகலமாட்டேனினிப் பழனிச்செட்டி
படித்ததெல் லாங்கேள் பழனிச்செட்டி யுன்
பன்னிருசெவியாலும் பழனிச்செட்டி
கொடிச்சேவலானே பழனிச்செட்டி தனங்
கொடுவொல்லைநடனீ பழனிச்செட்டி. (ங)

பாட்டுக்குமுகம்வீங்கிப் பழனிச்செட்டி யின்னம்
பாடுகிறேன்கேளப்பா பழனிச்செட்டி
காட்டுப்பித்தன்மைந்தா பழனிச்செட்டி கயற்
கண்ணிமகனே பழனிச்செட்டி
சேட்டனீயாச்சே பழனிச்செட்டி யொல்லை
திருவிளையிகத்தா பழனிச்செட்டி
வீட்டுக்குநீவா பழனிச்செட்டி யுனை
மிகப்பூசைபண்ணுகிறேன் பழனிச்செட்டி (௪)

வேதியன்மகனே பழனிச்செட்டி யென்னை
வெருட்டினும்போகேனன் பழனிச்செட்டி
பாதகாபாற்சொன்னாற் பழனிச்செட்டி யொரு
பட்சமாய்ச்சொல்லுவார் பழனிச்செட்டி
மாதவரிடத்திலே பழனிச்செட்டி கழனி
மாநகர்க்கேகவா பழனிச்செட்டி
ஓதுவோம்வழக்கினைப் பழனிச்செட்டி நிதி
உதவெனாலொல்லைதா பழனிச்செட்டி (௫)

இல்லையென்றானன் பழனிச்செட்டி யுனை
யினிவிடமாட்டேனே பழனிச்செட்டி
தில்லைக்குவாநீ பழனிச்செட்டி சபையிற்
செபபுவோம்வழக்கினைப் பழனிச்செட்டி
நல்லதாய்தந்தைதாம் பழனிச்செட்டி தன
நல்கச்சொன்னாற்றான் பழனிச்செட்டி
அல்லறபடுத்தாதே பழனிச்செட்டி பணம
அசத்தியந்தாதா பழனிச்செட்டி. (௬)

திருவிளக்குநெய்யைப் பழனிச்செட்டி நான்
திருடினேனோசொல்லு பழனிச்செட்டி
மருவைசகொழுந்தினைப் பழனிச்செட்டி யெடுத்து
மடியினில்வைத்தேனோ பழனிச்செட்டி
ஒருபிழைசெய்திலேன் பழனிச்செட்டி நானும்
உண்மைப்பத்தனல்லோ பழனிச்செட்டி
இருநிதியொல்லைதா பழனிச்செட்டி தில்லை
ஈசன்மகனே பழனிச்செட்டி. (௭)

தேனைப் பாலைப் பழனிச்செட்டி யபிடேகஞ்
செய்யாமலொளித்தேனோ பழனிச்செட்டி
ஏனெனைவருத்துகிறாய் பழனிசெட்டி யுனக்
கென்னகுற்றஞ்செய்தேன் பழனிச்செட்டி

தானமிகச்செய்யப் பழனிச்செட்டி நிதி
    தந்தொல்லைரட்சிப்பாய் பழனிச்செட்டி
மானைப்புணர்ந்தவா பழனிச்செட்டி தில்லை
    மன்றன்மகனே பழனிச்செட்டி. (௮)

வள்ளல்மகன்வள்ளலாச்சே பழனிச்செட்டி நிதி
    வழங்காததென்னமுறை பழனிச்செட்டி
பிள்ளைநீயாகுமென்றுற் பழனிச்செட்டி முனிப்
    பெரியவன்குருவாச்சே பழனிச்செட்டி
தள்ளவுமுறையுண்டோ பழனிச்செட்டி யெனைத்
    தள்ளினுமுனைவிடேன் பழனிச்செட்டி
கள்ளமில்லையென்னிடத்திற் பழனிச்செட்டி கடைக்
    கண்பார்த்துநிதிதா பழனிச்செட்டி. (௯)

பஞ்சாமிர்தத்தைப் பழனிச்செட்டி யபிடேகம்
    பண்ணுமலொளித்தேனே பழனிச்செட்டி
கஞ்சாக்குடித்தேனே பழனிச்செட்டி மெத்தக்
    கள்ளுக்குடித்தேனே பழனிச்செட்டி
அஞ்சாமல்விலங்கினைப் பழனிச்செட்டி பறவை
    ஆதிகளைக்கொன்றேனே பழனிச்செட்டி
நெஞ்சாரக்குற்றமில்லேன் பழனிச்செட்டி யொல்லை
    நிதிதாநடனருள் பழனிச்செட்டி. (௰)

உனக்காட்டுநல்லெண்ணெயைப் பழனிச்செட்டி நான்
    ஒளித்துக்கொண்டுபோனேனே பழனிச்செட்டி
நினைகநன்னயிரும்போது பழனிச்செட்டி கிட்டி
    நெருங்கினுனின்றேனே பழனிச்செட்டி
வினைக்காமமாதரைப் பழனிச்செட்டி யிங்கு
    மேவினனேநானும் பழனிச்செட்டி
மனக்களங்கமில்லை பழனிச்செட்டி நிதி
    வழங்கொல்லைநடனீ பழனிச்செட்டி. (௰௧)

பாகுவெறறிலைபோட்டுப் பழனிச்செட்டி யுன்முன்
    பக்கநதிற்றுப்பினேனே பழனிச்செட்டி
போக்கற்றவர்போல் பழனிச்செட்டி யுன்னைப்
    புறஞ்சொலலித்திரிந்தேனே பழனிச்செட்டி
வாக்கினிமைப்பேச்சென்னைப் பழனிச்செட்டி யுன்முன்
    வைதேனேயாரையுநான் பழனிச்செட்டி
தீக்குணநீக்கினேன் பழனிச்செட்டி நிதி
    சீக்கிரந்தாநடனீ பழனிச்செட்டி. (௰௨)

உனக்கன்னம்படைத்திடப் பழனிச்செட்டி யன்பர்
உதவுந்தாம்பாளத்திற் பழனிச்செட்டி
எனக்கன்னமிடச்சொல்லிப் பழனிச்செட்டி யதை
யெச்சிற்கலமாக்கினனோ பழனிச்செட்டி
கனக்கும்புகழுடைய பழனிச்செட்டி விலைக்
கன்னியர்பாற்பேசினேனோ பழனிச்செட்டி
மனக்கலக்கமில்லேன் பழனிச்செட்டி நிதி
வழங்காய்நடனீ பழனிச்செட்டி. (௰௩)

ஆசாரச்சைவனே பழனிச்செட்டி யுன
தபிடேகக்கலயத்தைப் பழனிச்செட்டி
கூசாமல்வாயில்வைத்துப் பழனிச்செட்டி தீர்த்தங்
குடித்தேனோநானுந்தான் பழனிச்செட்டி
தாசனல்லோநான் பழனிச்செட்டி யென
றனித்தெய்வமல்லோநீ பழனிச்செட்டி
பேசவாயெனக்குத்தா பழனிச்செட்டி தனம்
பெருகவேதந்தாள் பழனிச்செட்டி. (௰௪)

குன்றைக்குடிக்கோயிற்சொத்தைப் பழனிச்செட்டி நான்
கூத்தியருக்கீந்தேனோ பழனிச்செட்டி
நன்றில்லாராருக்குமீந்தாற் பழனிச்செட்டி யந்த
ஞாயநீகேட்டுக்கொள் பழனிச்செட்டி
ஒன்றும்பிழையில்லேன் பழனிச்செட்டி யென
துளத்தைக்கண்பார்த்துக்கொள் பழனிச்செட்டி
மன்றன்மகனே பழனிச்செட்டி நிதி
வாணிபத்தாலொல்லையீ பழனிச்செட்டி (௰௫)

கருமிப்பயலிடம் பழனிச்செட்டி நான்
கனவினுஞ்செல்லேனே பழனிச்செட்டி
தருமவானே பழனிச்செட்டி தில்லைச்
சங்கரன்மகனே பழனிச்செட்டி
பெருமையுனக்குத்தான் பழனிச்செட்டி யெற்குப்
பெருகுநிதிதந்தாள் பழனிச்செட்டி
அருமைத்துரையே பழனிச்செட்டி யெங்கள்
ஆண்டவனாகிய பழனிச்செட்டி. (௰௬)

தினமென்பாலுண்டோ பழனிச்செட்டி யுனக்குத்
தீங்கொன்றுசெய்வேனோ பழனிச்செட்டி
தனந்தான்கேட்டேன் பழனிச்செட்டி நல்ல
தருமமிகச்செய்வான் பழனிச்செட்டி

கனமாயளித்தாற் பழனிச்செட்டி யந்தக்
கனமுனக்குத்தான் பழனிச்செட்டி
இனநானல்லவோ பழனிச்செட்டி தில்லை
ஈசன்மகனே பழனிச்செட்டி. (௰௭)

ஞானிச்செட்டிமகனே பழனிச்செட்டி நீ
நல்கநிதிவாங்குவேன பழனிச்செட்டி
ஈனச்செட்டிமக்கள்பாற் பழனிச்செட்டி நான்
ஏகுவனோகனவிலும் பழனிச்செட்டி
வானவர்சிறைமீட்ட பழனிச்செட்டி முழு
வள்ள லல்லோ பழனிச்செட்டி
ஏனினித்தாமதம் பழனிச்செட்டி விரைந்
தெளிதினிதா பழனிச்செட்டி. (௰௮)

என்குருவாணை பழனிச்செட்டி யுனை
இனிநான்விடமாட்டேன பழனிச்செட்டி
பொன்பணிபதத்தாய் பழனிச்செட்டி மிகப்
புண்ணியவானே பழனிச்செட்டி
நன்முனிகுரவா பழனிச்செட்டி தில்லை
ஞானிசெட்டிமகனே பழனிச்செட்டி
மன்மதன்மைத்துன பழனிச்செட்டி நிதி
வழங்கொல்லைவானெருழும் பழனிச்செட்டி. (௰௯)

பிச்சைவாங்கிமகனே பழனிச்செட்டி மெத்தப்
பெருமைபண்ணுதே பழனிச்செட்டி
இச்சித்தெனறமிழ்கேட்டாய் பழனிச்செட்டி தனம்
ஈவதற்குத்தாமதமேன் பழனிச்செட்டி
வைச்சுவைச்சுப்பார்த்தாலும் பழனிச்செட்டி தனம்
வாங்காமனுன்விடுவேனோ பழனிச்செட்டி
அச்சமினியெனக்கில்லை பழனிச்செட்டி தனம்
அட்டியின்றிமிகத்தாதா பழனிச்செட்டி. (௨௰)

படையுங்கரத்திலுற்றுற் பழனிச்செட்டி நான்
பயப்படமாட்டேனே பழனிச்செட்டி
கொடையாளியாகின்ற பழனிச்செட்டி நிதி
கொடுப்பதற்குத்தாமதமேன் பழனிச்செட்டி
தடையாருஞ்சொன்னுரோ பழனிச்செட்டி நின்
றனக்குமனமில்லையோ பழனிச்செட்டி
சடையாண்டிமகனே பழனிச்செட்டி நிதி
தந்தெனைரட்சிப்பாய் பழனிச்செட்டி. (௨௧)

வையகமெங்கும் பழனிச்செட்டி யுனை
வாழ்த்துவேனோநான் பழனிச்செட்டி
பொய்யுரையேனே பழனிச்செட்டி மிகப
புண்ணியவானே பழனிச்செட்டி
செய்யசலாபத்தே பழனிச்செட்டி யொல்லை
திருவினைமிகத்தா பழனிச்செட்டி
ஐயநம்பிக்கையைப் பழனிச்செட்டி நா
னகற்றினே னடனீபழனிச்செட்டி (௨௨)

புத்தனன்றேநான் பழனிச்செட்டி நுதலிற்
பூதியைப்பாராய் பழனிச்செட்டி
பததனல்லோநான் பழனிச்செட்டி நிதி
பாலிப்பாயொல்லையிற பழனிசசெட்டி
கத்தினேனேமிசப் பழனிச்செட்டி யுன
கருத்திளகாதுதென் பழனிச்செட்டி
பிதததனமகனே பழனிச்செட்டி மெத்தப
பேச்சுக்காரனீயல்லோ பழனிச்செட்டி. (௨௩)

தானவனல்ல பழனிச்செட்டி பொல்லாச
சமணநானுல்ல பழனிச்செட்டி
ஏனெனைமுனிகிறாய பழனிச்செடடி மிக
ஏழைநானபபா பழனிச்செட்டி
வானவாகோவே பழனிச்செட்டி நிதி
வாணிபததாலொல்லைதா பழனிசசெட்டி
ஞானபணடிதனே பழனிச்செட்டி தில்லை
நடேசன்மகனே பழனிசசெடடி. (௨௪)

குருவையென்னூர்பாற் பழனிச்செட்டி பொல்லாக்
கொடியவஞ்சகர்பாற் பழனிச்செட்டி
மருவமாட்டேனே பழனிச்செட்டி நான்
மறநதொருகனவினும் பழனிச்செட்டி
தருவனையானே பழனிச்செட்டி மிகத்
தருமதுரையே பழனிச்செட்டி
திருவெனக்கொலலையீ பழனிச்செட்டி தில்லைச
சிதம்பரன்மகனே பழனிச்செட்டி (௨௫)

கல்விப்பயல்வீட்டிற்பழனிச்செட்டி பொல்லாச்
சண்டாளப்பயல்வீட்டிற் பழனிச் செட்டி.
கல்விப்பயலிடம் பழனிச்செட்டி நான்
கனவிலும்போகேனே பழனிச்செட்டி

சொல்லித்துதிப்பேன் பழனிச்செட்டி யுன்னைத்
தொழுவேனழுவேன் பழனிச்செட்டி
இல்லையென்றுமலே பழனிச்செட்டி தன
மெற்குநீயீவாய் பழனிச்செட்டி. (௨௬)

சற்குருநாமத்தைப் பழனிச்செட்டி நின்
றன்பேர்போலயான் பழனிச்செட்டி
நற்குணத்தாலே பழனிச்செட்டி யெண்ணி
நானேயறைந்திடப் பழனிச்செட்டி
துற்குணக்கொடியோர் பழனிச்செட்டி யதைத்
தூசித்துக்கிறுக்கின்றார் பழனிச்செட்டி
பொறபொருண்மிகத்தா பழனிச்செட்டி நிந்தை
புகன்றிடாமுன்னம் பழனிச்செட்டி. (௨௭)

பாடுதுறையிலே பழனிச்செட்டி குருவைப்
பையலென்றொருதுறை பழனிச்செட்டி
கூடுபோனபின்றை பழனிச்செட்டி தத்துவா
கூறினீரையோ பழனிச்செட்டி
நீடுமத்றகாகத்தான பழனிச்செட்டி யிப்போது
நினைநான்கண்டேன பழனிசசெட்டி
ஆடுவானமகனே பழனிச்செட்டி நிதி
அகத்தியந்தாதா பழனிசசெட்டி. (௨௮)

பூசுரர்குலத்தாயைப் பழனிச்செட்டி யென
புந்தியிலினைந்தேன்று பழனிசசெட்டி
பேசுவனோவாயாற பழனிசசெட்டி யது
பெருநெருப்பல்லவோ பழனிச்
மாசிலுனதாயைப்போற பழனிச்செட்டி நான
மதிந்தேனீயறியாயோ பழனிச்செட்டி
ஆசிலாருறவே பழனிச்செட்டி நிதி
அளியொளலை நடனீபழனிச்செட்டி. (௨௯)

சற்குருமுதலாகப் பழனிச்செட்டி நற
சங்கமமீறாகப் பழனிச்செட்டி
நற்சிவமென்றே பழனிச்செட்டி மிக
நம்பினேனேநானும் பழனிச்செட்டி
சிற்பொதுவோனமைந்தா பழனிச்செட்டி யறஞ்
செயநிதிதாதா பழனிச்செட்டி
அற்புதத்தாளாய் பழனிச்செட்டி திரு
ஆவினன்குடியாய் பழனிச்செட்டி. (௩௰)

சங்கரன்மகனென்றாற் பழனிச்செட்டி யென்
தமிழுக்குநிதிதா பழனிச்செட்டி
பங்கம்பண்ணாதே பழனிச்செட்டி மிகப்
பழிவருஞ்சொன்னேன் பழனிச்செட்டி
சிங்கத்துணையே பழனிச்செட்டி யுனைத்
தேசமெல்லாஞ்சொல்வேன் பழனிச்செட்டி
எங்கள்குலத்தேவே பழனிச்செட்டி யொல்லை
இருநிதிதாதா பழனிச்செட்டி. (௧௧)

எங்கே பார்ப்போம் பழனிச்செட்டி நிதி
ஈயாதிருப்பதைப் பழனிச்செட்டி
சங்கரன்மகன்தானே பழனிச்செட்டி யிதில்
தப்புமுண்டோசொல் பழனிச்செட்டி
துங்கன்மகனென்றாற் பழனிச்செட்டி யெறகுச்
சொர்ணமிக்கொல்லைதா பழனிச்செட்டி
பங்கஞ்செய்தியேற் பழனிச்செட்டி யெண்ணிப்
பார்த்துக்கொள்பழிவரும் பழனிச்செட்டி. (௧௨)

மன்னருந்தரும்பல்லோ பழனிச்செட்டிபொன்
வணிகருந்தரும்பல்லோ பழனிச்செட்டி
என்னகுறையெற்குப் பழனிச்செட்டி யுன
திட்டமிருந்தபின் பழனிச்செட்டி
பொன்னெற்குமிகததா பழனிச்செட்டி நல்ல
புலியூரிலறஞ்செய்யப் பழனிச்செட்டி
உன்னையல்லாமலே பழனிச்செட்டி யெனக்
குறவெவர்நடனீ பழனிச்செட்டி. (௧௩)

ஒருவனுக்கேதான் பழனிச்செட்டி யுன்றாய
உதவினதுனையென்றாற பழனிச்செட்டி
திருமிகவெனக்குப் பழனிச்செட்டி யின்று
சீக்கிரநீதா பழனிச்செட்டி
தருவினைநிகர்த்தாய பழனிச்செட்டி யுனைச்
சாற்றியவாயினாற் பழனிச்செட்டி
இருநிதிக்காகப் பழனிச்செட்டி வானத்
திமையோரையும்பாடேன் பழனிச்செட்டி (௧௪)

ஞானப்பொதுவிலே பழனிச்செட்டி கவி
நான்போய்ச்சொன்னாற் பழனிச்செட்டி
தானேதருவாரே பழனிச்செட்டி யுந்தை
தருமப்பிரபுவே பழனிச்செட்டி

ஞானத்தனத்துக்காப் பழனிச்செட்டி நான்
ஓதேனேகவி பழனிச்செட்டி
ஆனதாலிங்குச்சொன்னேன் பழனிச்செட்டி நிதி
அருளுவாய் குகதெய்வப் பழனிச்செட்டி. (௫௫)

அருணகிரிமுதற் பழனிச்செட்டி யுன
தடியார்க் கெல்லாம் பழனிச்செட்டி
பொருளீந்தனையல்லோ பழனிச்செட்டி நான்
பொய்யானபத்தனே பழனிச்செட்டி
தருவாயென்றேநம்பிப் பழனிச்செட்டி நான்
தமிழ்பலகூறினேன் பழனிச்செட்டி
ஒருபேச்சுமின்றிப் பழனிச்செட்டி மோனம்
உற்றதே ணடனீபழனிச்செட்டி. (௫௬)

மறுமதக்காரனே பழனிச்செட்டி நான்
வைப்பாட்டிமகனே பழனிச்செட்டி
குருவைமறந்தேனே பழனிச்செட்டி யுனைக்
கூறாமலிருந்தேனே பழனிச்செட்டி
தருமத்துக்கனறியே பழனிச்செட்டி பாவந்
தான்செய்யக்கேட்டேனே பழனிச்செட்டி
திருவைமிக்கொல்லைதா பழனிச்செட்டி யுனைச்
செப்புகிறேனடனீ பழனிச்செட்டி. (௫௭)

அப்பச்சிநீயல்லோ பழனிச்செட்டி யெங்கள்
அண்ணனுநீயல்லோ பழனிச்செட்டி
செப்பியமுறைபல பழனிச்செட்டி யெங்கள்
சீமானுநீயல்லோ பழனிச்செட்டி
ஒப்பொருவருமில்லாப் பழனிச்செட்டி யெனக்
குறவுநீதானே பழனிச்செட்டி
எப்படியாயினும் பழனிச்செட்டி நிதி
ஈயொல்லைநடனீ பழனிச்செட்டி. (௫௮)

தாருகாவனத்திலே பழனிச்செட்டி யுன்
தகப்பன்செய்முறையெலாம் பழனிச்செட்டி
பாரெலாமோதுவேன் பழனிச்செட்டி யெற்குப்
பாக்கியமிகத்தா பழனிச்செட்டி
கோரமணமில்லாப் பழனிச்செட்டி சூரன்
குடியையேன்கெடுத்தாய் பழனிச்செட்டி
வீரர்துணைவனே பழனிச்செட்டி யெழில்
வேள்மைத்துனனே பழனிச்செட்டி. (௫௯)

காழிதன்னிலே பழனிச்செட்டி யொரு
கவுணியனாய்வந்து பழனிச்செட்டி
வீழியிலுந்தைபாற் பழனிச்செட்டி பாடி
வியன்காசுபெற்றாயே பழனிச்செட்டி
ஏழையென்றேவெனைப் பழனிச்செட்டி மிக
எத்தநினைக்கின்றாய் பழனிச்செட்டி
வாழியெனச்சொல்வேன் பழனிச்செட்டி யெற்கு
மாழைமிக்கொல்லைதா பழனிச்செட்டி. (௪௰)

கடுத்தின்றோன்மகனே பழனிச்செட்டி பிச்சைக்
காரன்மகனே பழனிச்செட்டி
கொடுத்திடுநிதியொல்லை பழனிச்செட்டி யின்றேற்
கூறுவேன்பழிமிகப் பழனிச்செட்டி
தொடுத்தனன்பழிசொல்லப் பழனிச்செட்டி யினித்
தூற்றுவேனூரெல்லாம் பழனிச்செட்டி
அடுத்தேனுனைநான பழனிச்செட்டி நிதி
அகத்தியந்தாதா பழனிச்செட்டி. (௪௧)

தந்தாலுஞ்சரிதான் பழனிச்செட்டி நிதி
தராவிடினுஞ்சரிதான் பழனிச்செட்டி
செந்தமிழாலுனைப்பழனிச்செட்டி நான
தினமுஞ்செப்புவேன பழனிச்செட்டி
அந்தோவந்தோ பழனிச்செட்டி பொல்லா
அவிசாரிமக்களைப் பழனிச்செட்டி
எந்தம்வாயாற் சொல்லோம பழனிச்செட்டி யெனக
கிரங்குவாய்நடனீ பழனிச்செட்டி. (௪௨)

பிள்ளைப்பெருமாள் பழனிச்செட்டி யவன்
பிதற்றுககாரப்பையல் பழனிச்செட்டி
கள்ளவழியினன பழனிச்செட்டி யரங்கக்
கலம்பகந்தன்னிலே பழனிச்செட்டி
வள்ளலுந்தைதன்னைப பழனிச்செட்டி பழிதது
வாய்புழுத்துச்செததான் பழனிச்செட்டி
உள்ளதோபொய்யோ பழனிச்செட்டி யெனக்
கோதி நிதிதா பழனிச்செட்டி. (௪௩)

கட்டப்படலாமோ பழனிச்செட்டி யுன்னைக்
கதியென்றடைந்தபின் பழனிச்செட்டி
முட்டுப்படலாமோ பழனிச்செட்டி யிது
முறையல்லசொன்னேன் பழனிச்செட்டி

செட்டிப்பலிக்கச்செய் பழனிச்செட்டி யெற்குச்
சீக்கிரங்கிதரா பழனிச்செட்டி
கட்டணருளிய பழனிச்செட்டி வள்ளி
நாயகி கணவா பழனிச்செட்டி. (௪௪)

ஞாதியர்கடையிலே பழனிச்செட்டி சற்றும்
நாடவுமாட்டேனே பழனிச்செட்டி
மாதுலர்கடையிலே பழனிச்செட்டி யணுவு
மணநாடேனே பழனிச்செட்டி
பாதகர்கடையிலே பழனிச்செட்டி யந்த
பாதைநடக்கேனே பழனிச்செட்டி
நாதனியெனக்கென்றாற் பழனிச்செட்டி நிதி
நலசோலைநடனி பழனிச்செட்டி. (௪௫)

கனகத்துக்கன்றியே பழனிச்செட்டி சும்மா
கைதானபழகவும் பழனிச்செட்டி
தனையனைவிடுவனோ பழனிசெட்டி ஐயோ
தாயத்தார்கடையிலும் பழனிச்செட்டி
உனையலாற்சொந்தமார் பழனிச்செட்டி மைந்தர்க்
குதவுவாய்கடையினறு பழனிச்செட்டி
எனையாதரிப்பாய் பழனிச்செட்டி நிதி
நயொலலைநடனீ பழனிச்செட்டி. (௪௬)

காப்பாயென்றே பழனிச்செட்டி யுனக்குக்
கவிபலசொன்னேன் பழனிச்செட்டி
கூப்பிட்டதமிழெல்லாம் பழனிச்செட்டி செவியிற்
கொள்ளலையோ வின்னம் பழனிச்செட்டி
மாப்பிள்ளைநீயல்லோ பழனிச்செட்டி குற
வள்ளிக்குமயானைக்கும் பழனிச்செட்டி
சாப்பாடுதவர்க்கிடப் பழனிச்செட்டி யொல்லை
தனந்தானடனீ பழனிச்செடடி. (௪௭)

பாண்டியன்மகளல்லோ பழனிச்செட்டி யுனைப்
பயந்தாள்தானும் பழனிச்செட்டி
தாண்டவனல்லோ பழனிச்செட்டி நின்னைத்
தந்தவன்தானும் பழனிச்செட்டி
நீண்டவனல்லோ பழனிச்செட்டி பன்னும்
நின்சொந்தமாமனும் பழனிச்செட்டி
ஆண்டவனீயல்லோ பழனிச்செட்டி நிதி
அருளுவாயொல்லையிற் பழனிச்செட்டி. (௪௮)

SWAMINATHA IYER

நன்றிமறந்தாரே பழனிச்செட்டி மிக்க
நன்மாநிதிபெற்றோர் பழனிச்செட்டி
என்றுமறவேனே பழனிச்செட்டி நிதி
ஈயு நின்னைத்தான் பழனிச்செட்டி
குன்றாதறஞ்செய்யப் பழனிச்செட்டி யெற்குக்
கோடிநிதிதந்தாள் பழனிச்செட்டி
மன்னன்மகனே பழனிச்செட்டி யுனை
வாழ்த்துகிறேன்வாழ்த்துகிறேன் பழனிச்செட்டி. (௪௯)

பாலாசீலா பழனிச்செட்டி யுனைப்
பாடுகிறேனோடிவா பழனிச்செட்டி
காலாவலிக்கும் பழனிச்செட்டி தடி
கரத்திலிருக்கினறதே பழனிச்செட்டி
கோலாகலனே பழனிச்செட்டி மயிற்
குதிரைதானிருக்குதே பழனிச்செட்டி
மாலோன்மருகா பழனிச்செட்டி நிதி
வழங்கொல்லைநடனீ பழனிச்செட்டி. (௫௰)

கூட்டாளிநீயல்லோ பழனிச்செட்டி யெற்குக்
கொண்டுவிலைசெய்யப் பழனிச்செட்டி
பாட்டாளிநானல்லோ பழனிச்செட்டி யுனைப்
பைந்தமிழ் நிதம்பாடப் பழனிச்செட்டி
ஈட்டிச்சிலாபத்தே பழனிச்செட்டி நாயேற்
சேமமிக்கொல்லைதா பழனிச்செட்டி
நாட்டமூன்றுனீ பழனிச்செட்டி கும்ப
நன்முனிகுரவா பழனிச்செட்டி. (௫௧)

போகர்க்கென்றே பழனிச்செட்டி மதுப்
புசிக்கத்தனங்கேட்டான் பழனிச்செட்டி
ஆகாதென்றேனே பழனிச்செட்டி நான்
அதற்கெல்லாங்கொடுப்பேனோ பழனிச்செட்டி
ஏகவத்திரம் பழனிச்செட்டி தூற்கைக்
கீந்தேனல்லோ பழனிச்செட்டி
நாகர்கோவே பழனிச்செட்டி நிதி
நல்கொல்லைநடனீ பழனிச்செட்டி. (௫௨)

தென்னனுள்ளார் பழனிச்செட்டி யின்று
நீங்கினாரென்றே பழனிச்செட்டி
பன்னுநூல்பார்த்துப் பழனிச்செட்டி நான்
பரநாடாமற் பழனிச்செட்டி

பொன்னுக்காகப் பழனிச்செட்டி யுன்பாற்
　　புலம்பித்திரிந்தாற் பழனிச்செட்டி
என்னமுறையிது பழனிச்செட்டி யொல்லை
　　ஈந்திடுவாய் பழனிச்செட்டி. (௫௩)

அருமையாமனுவுடல் பழனிச்செட்டி நான்
　　அடைந்து மையகோ பழனிச்செட்டி
பெருமையாஞானத்தைப் பழனிச்செட்டி மிகப்
　　பெறவிரும்பாமலே பழனிச்செட்டி
தருமம்பெரிதென்றே பழனிச்செட்டி யுன்பால்
　　தனத்துக்குக்கவிபாடிப் பழனிச்செட்டி
உருகினேனேசிந்தை பழனிச்செட்டி நிதி
　　உதவொல்லைநடவாய் பழனிச்செட்டி. (௫௪)

வைதார்தமையும் பழனிச்செட்டி நீ
　　வாழ்விப்பாயென்றே பழனிச்செட்டி
பொய்யணுவுரையார் பழனிச்செட்டி முன்
　　புகலலங்காரமும் பழனிச்செட்டி
மெய்தானென்முற் பழனிச்செட்டி யெறகு
　　விரைந்துநிதிதா பழனிச்செட்டி
சையிராறுள பழனிச்செட்டி தில்லைக்
　　காணவன்மகனே பழனிச்செட்டி. (௫௫)

சிரன்றமிழுக்காப் பழனிச்செட்டி நீ
　　சிரிதுளைத்தாயல்லோ பழனிச்செட்டி
சிரமன்றுள்ளாது பழனிச்செட்டி யின்று
　　மெலிவுண்டோநீசொல்லு பழனிச்செட்டி
சூரனுடலைப் பழனிச்செட்டி யன்று
　　துணித்தாயல்லோ பழனிச்செட்டி
ஒரம்பண்ணுதே பழனிச்செட்டி நிதி
　　உதவொல்லைநடவாய் பழனிச்செட்டி. (௫௬)

நித்திரையில்லாமற் பழனிச்செட்டி யென்னை
　　நீதானெழுப்பினாய் பழனிச்செட்டி
சத்தவோபழந்தமிழ் பழனிச்செட்டி புதுக்
　　கவிதானெழுதவோ பழனிச்செட்டி
அத்தந்தரவோ பழனிச்செட்டி ஞான
　　அனுக்கிரகஞ்செய்யவோ பழனிச்செட்டி
சத்தியமாய்ச்சொல்லு பழனிச்செட்டி தில்லைச்
　　சங்கரன்மகனே பழனிச்செட்டி. (௫௭)

தெண்டங்கையிற் பழனிச்செட்டி ஞான
சின்முத்திரைகையிற் பழனிச்செட்டி
தண்டமேதுக்குப் பழனிச்செட்டி யன்பர்
தமக்கிடர்தீர்க்கவோ பழனிச்செட்டி
வண்டுறைகடம்பா பழனிச்செட்டி வள்ளி
மாப்பிள்ளைத்துரையே பழனிச்செட்டி
கண்டேன்கண்டேன் பழனிச்செட்டி யொல்லை
கனகந்தந்தருளாய் பழனிச்செட்டி. (௫௮)

சிதம்பரையாபாற் பழனிச்செட்டி சேட்டாற்
சீக்கிரந்தருவாரே பழனிச்செட்டி
இதம்பெறுதாயினும் பழனிச்செட்டி யெனக்
கினியவரல்லோ பழனிச்செட்டி
பதம்பெறுவேனன்றிப் பழனிச்செட்டி யங்குப்
பணநான்வேண்டேனே பழனிச்செட்டி
மதமாகொழிக்கிறாய் பழனிச்செட்டி நிதி
வழங்கொல்லைநடனி பழனிச்செட்டி. (௫௯)

பள்ளத்துரையாபாற் பழனிச்செட்டி யான்
பணந்தான்கேட்டாற பழனிச்செட்டி
வெள்ளமாய்த்தருவாரோ பழனிச்செட்டி யான்
விரும்பேனேநிதியங்குப் பழனிச்செட்டி
உள்ளத்துறவினர் பழனிச்செட்டி யெனக்
குறவுமிசவல்லோ பழனிச்செட்டி
வள்ளலிற்றலைவா பழனிச்செட்டி நிதி
வழங்கொல்லைநடனி பழனிச்செட்டி. (௬௰)

தலைதலைமுறையாய்ப் பழனிச்செட்டி பணந்
தந்தவனியல்லோ பழனிச்செட்டி
கலையுணர்புலவா பழனிச்செட்டி யுன்
கவிஞனல்லோ பழனிச்செட்டி
இலையென்றுசொன்னாற் பழனிச்செட்டி யுனை
இனிவிடுவேனோ பழனிச்செட்டி
மலையாள்மகனே பழனிச்செட்டி யெற்கு
மாழைமிகத்தா பழனிச்செட்டி. (௬௧)

தாராயாதருவாயா பழனிச்செட்டி தில்லைச்
சபைக்குப்போகவா பழனிச்செட்டி
வாராயாவருவாயா பழனிச்செட்டி யிந்த
வழக்கினைச்சொல்லத்தான் பழனிச்செட்டி

ஆராகநினைத்தாய் பழனிச்செட்டி மெய்
அன்பனுனல்லவோ பழனிச்செட்டி
ஈராறுகையாலும் பழனிச்செட்டி நிதி
ஈயொல்லைநடனீ பழனிச்செட்டி. (௬௨)

தாதைமுதலினோர் பழனிச்செட்டி பழந்
தமிழ்சொல் வாரன்றிப் பழனிச்செட்டி
ஓதுவாரோதமிழ் பழனிச்செட்டி யவர்க்
குதவினையேதினம் பழனிச்செட்டி
பேதைமகனுநீ பழனிச்செட்டி தில்லைப்
பித்தன்மகனே பழனிச்செட்டி
நீதில்நிதி தாராயேற் பழனிச்செட்டி யுன்னைச்
சிரிக்குமேயுலகெலாம் பழனிச்செட்டி. (௬௩)

ஆருக்குப்பிறந்தாய் பழனிச்செட்டி தில்லை
யரனுக்குத்தானன்றோ பழனிச்செட்டி
சீருக்குங்கீர்த்திக்கும் பழனிச்செட்டி யினிச்
சின்னம்வையாதே பழனிச்செட்டி
ஊரார்சிரிப்பார் பழனிச்செட்டி யுனை
ஒருவரும்நம்பார் பழனிச்செட்டி
ஏரார்கொடையனீ பழனிச்செட்டி யொல்லை
ஈயீநிதியம் பழனிச்செட்டி. (௬௪)

மதியார் மதியார் பழனிச்செட்டி யுனக்கு
மாழைபெரிதோ பழனிச்செட்டி
கதிநீயென்றுற பழனிச்செட்டி யுன்
கவிஞனன்றோ பழனிச்செட்டி
ததியிதுவென்றுற் பழனிச்செட்டி யொல்லை
தனந்தாநடனீ பழனிச்செட்டி
இதுநாள்வரைக்கும் பழனிச்செட்டி யதை
எண்ணலையோசொல்லு பழனிச்செட்டி. (௬௫)

சட்டியிற்சோறுண்ணேன் பழனிச்செட்டி யெற்குத்
தங்கச்கும்பந்தா பழனிச்செட்டி
பட்டினியுறினும் பழனிச்செட்டி யுன்னைப்
பாடவலிதா பழனிச்செட்டி
செட்டிகட்கெல்லாம் பழனிச்செட்டி நீ
சீமானன்றோ பழனிச்செட்டி
அட்டியில்லாமலே பழனிச்செட்டி நிதி
அருளுவாய்நடனீ பழனிச்செட்டி. (௬௬)

இல்லை யென்றாற் பழனிச்செட்டி நான்
எங்கேபோவேன் பழனிச்செட்டி
சொல்லவாவிதைநீ பழனிச்செட்டி கழனித்
தூயவரிடத்தே பழனிச்செட்டி
அல்லதுன்சீடன்பாற் பழனிச்செட்டி பொதியில்
அறைகுவோம்விரைந்துவா பழனிச்செட்டி
நல்லவனீயன்றோ பழனிச்செட்டி நிதி
நல்கொல்லைநடனீ பழனிச்செட்டி. (௬௭)

படுத்தடிபண்ணாதே பழனிச்செட்டி தமிழ்ப்
பாவலர்க்கெளியானே பழனிச்செட்டி
கொடுத்திடுதனமொல்லை பழனிச்செட்டி யினிக்
கூசினாலேசுவேன் பழனிச்செட்டி
அடுத்தெனைக்கெடுக்காதே பழனிச்செட்டி யீது
அறமல்லசொன்னேன் பழனிச்செட்டி
கடுத்தின்றதுமுந்தை பழனிச்செட்டி நற்
கருணையல்லவோசொல்லு பழனிச்செட்டி (௬௮)

தேவரைச்சிறைமீட்டே பழனிச்செட்டி சூரரைச்
செகுத்துவேரறுத்தும் பழனிச்செட்டி
ஆவலுனக்குண்டோ பழனிச்செட்டி நம்பும
அடியார்பொருட்டன்றோ பழனிச்செட்டி
பாவலரேறே பழனிச்செட்டி நம்பும்
பத்தருக்கெளியாய் பழனிச்செட்டி
காவலனாகின்ற பழனிச்செட்டி யொல்லை
கனகந்தாநடனீ பழனிச்செட்டி. (௬௯)

நல்லவருறவே பழனிச்செட்டி பெரிய
நாயகிமகனே பழனிச்செட்டி
வல்லவரேறே பழனிச்செட்டி மால்
மருகாமுருகா பழனிச்செட்டி
சல்லினாருரிப்பேனே பழனிச்செட்டி யெனைக்
கண்ணினாற்பாராய் பழனிச்செட்டி
தில்லையாண்மகனே பழனிச்செட்டி யொல்லை
திருத்தாவறஞ்செய்யப் பழனிச்செட்டி. (௭௰)

ஈயாவுலுத்தரைப் பழனிச்செட்டி நான்
இயம்பமாட்டேனே பழனிச்செட்டி
ஓடாக்கொடையானே பழனிச்செட்டி நான்
உன்சொந்தமல்லவோ பழனிச்செட்டி

வாயாலிதஞ்சொல்லு பழனிச்செட்டி யுனை
வருதநப்படுத்துவேனு பழனிச்செட்டி
ஆயவாணிபத்தாலே பழனிச்செட்டி யொல்லை
சொர்ணநதாநடனி பழனிச்செட்டி. (எக)

தில்லைவனமெல்லாம் பழனிச்செட்டி யுனைச்
செப்புவேனோநான் பழனிச்செட்டி
நல்லவரிடத்தெல்லாம் பழனிச்செட்டி யுனை
நவிலுவேனோநான பழனிசசெட்டி
இல்லையென்றதே பழனிச்செட்டி யெனக்
கீயததான்வேண்டுமே பழனிச்செட்டி
அல்லலைததீர்ததே பழனிச்செட்டி தனம்
அருளொல்லைநடனி பழனிச்செட்டி. (எஉ)

குஞ்சரிகணவா பழனிச்செட்டி யெழிற்
குறவள்ளிகணவா பழனிச்செட்டி
தஞ்சநீயப்பா பழனிச்செட்டி தில்லைச்
சங்கரன்மகனே பழனிச்செட்டி
வஞ்சகம்பண்ணாதே பழனிசசெட்டி செய்தால்
வைவேனவைவேன் பழனிச்செட்டி
நெஞ்சமிரங்கப்பா பழனிச்செட்டி யொலலை
நிதிதாநிதிதா பழனிசசெட்டி. (எங)

சவலைநீ யென்றாற் பழனிச்செட்டி யுன்னைத்
தவரெல்லாநதொழுவதேன் பழனிச்செட்டி
பவலயந்திரவோ பழனிசசெட்டி நற
பாக்கியம்பெறவோ பழனிச்செட்டி
நவநிதியெனக்குததா பழனிசெட்டி யுனை
நானும்வணங்குகிறேன் பழனிச்செட்டி
கவலையைததீர்ப்பாய் பழனிச்செட்டி சண்டங்
கறுத்தான்மகனே பழனிச்செட்டி. (எச)

காலத்தைவீணிலே பழனிச்செட்டி சும்மா
கழிக்கமுறையோ பழனிச்செட்டி
சீலத்தவர்பாற் பழனிச்செட்டி கழனிக்குச்
சென்றுய்யவேணுநான் பழனிச்செட்டி
ஞாலததவர்புகழ் பழனிச்செட்டி யுனை
நம்பினேனேமுற்றும் பழனிச்செட்டி
சாலத்திருவொல்லைதா பழனிச்செட்டி தில்லைச்
சங்கரன்மகனே பழனிச்செட்டி. (எரு)

கொழும்புக்குப்போகேன் பழனிச்செட்டி யது
கொடியதேசம் பழனிச்செட்டி
அழிம்பாலலோசெல்வார் பழனிச்செட்டி நானுன்
அடியானல்லோ பழனிசெட்டி
செழும்பான்மையனே பழனிசெட்டி தில்லைச்
சிமான்மகனே பழனிச்செட்டி
தொழும்பர்க்குரியாய் பழனிச்செட்டி யுன்னைத
துதிக்கிறேனிதா பழனிச்செட்டி. (எசு)

சோனகத்தெருவெல்லாம் பழனிசெட்டி நான்
சுற்றமாட்டேனே பழனிச்செட்டி
ஞானச்சைவனல்லோ பழனிச்செட்டி யுனை
நம்புமடிமையல்லோ பழனிச்செட்டி
ஆனதாலெனக்குப் பழனிச்செட்டி செமபொன
அறஞ்செய்யவொலலைதா பழனிச்செடடி
வானவரேறே பழனிச்செட்டி திலலை
மனறன்மகனே பழனிச்செட்டி. (எஎ)

காலிக்கிச்செல்லேன் பழனிச்செட்டி யது
கயவர்தந்தேசம் பழனிசசெட்டி
நீலிமகனே பழனிச்செட்டி தில்லை
நிருத்தனமகனே பழனிச்செட்டி
சோலிபண்ணுதே பழனிச்செட்டி யுனைத்
துதிக்கிறேனிதா பழனிச்செடடி
பாலியுனைபூசைக்குப் பழனிச்செட்டி மிகப்
பாலப்பசுத்தா பழனிச்செட்டி. (எஅ)

கண்டிநாட்டுக்குப் பழனிச்செட்டி யொரு
கனவினுஞ்செல்லேன் பழனிச்செடடி
வண்டர்தேசம் பழனிச்செட்டி யங்கு
மடையர்கள்வாசம் பழனிச்செட்டி
தொண்டர்க்கெளியாய் பழனிச்செட்டி யுன்னைத்
துதிக்கிறேனிதா பழனிச்செட்டி
தண்டைப்பதத்தாய் பழனிச்செட்டி திலலைச்
சங்கரன்மகனே பழனிச்செட்டி. (எகு)

வீமலிப்பட்டணம் பழனிச்செட்டி யது
வெய்யவர்வாசம் பழனிச்செட்டி
காழியாமிகுதி பழனிசசெட்டி பொல்லாக்
கஞ்சமுமப்படி பழனிச்செட்டி

பூமியெலாமிசப் பழனிச்செட்டி நான்
　　போயலைகுவனோ பழனிச்செட்டி
சாமியாகியநீ பழனிச்செட்டி யொல்லை
　　தனந்தாநடனீ பழனிச்செட்டி. (அ௰)

கொங்குதேசம் பழனிச்செட்டி மிகக்
　　கொடியோர்வாசம் பழனிச்செட்டி
வங்காளதேசம் பழனிச்செட்டி பொல்லா
　　வம்பர்கள்வாசம் பழனிச்செட்டி
எங்குமப்படித்தான் பழனிச்செட்டி யுனது
　　இடமேநல்லது பழனிச்செட்டி
துங்கநிதியொல்லைதா பழனிச்செட்டி தில்லைத்
　　தாயோண்மகனே பழனிச்செட்டி. (அக)

சென்னபட்டணம் பழனிச்செட்டி பொல்லாத்
　　திருடாகள்வாசம பழனிச்செட்டி
பொன்னீட்டுவானங்குப் பழனிச்செட்டி நான்
　　போயலைந்திடமாட்டேன் பழனிச்செட்டி
அனைவாகனனெருழும் பழனிசெட்டி நல்ல
　　அறிஞர்தமமுறவே பழனிச்செட்டி
உன்னையேநப்பினேன் பழனிச்செட்டி நிதி
　　உதவொல்லைநடனீ பழனிச்செட்டி. (அஉ)

சிங்கப்பூருக்குப் பழனிச்செட்டி நான்
　　செத்தாலும்போகமாட்டேன பழனிச்செட்டி
வெங்கரல்லோசெலவார் பழனிச்செட்டி யுனை
　　மேவுமியான்செல்லலாமோ பழனிச்செட்டி
பங்கமில்லாமலே பழனிச்செட்டி யான
　　பாடுஞ்செந்தமிழுக்குப் பழனிச்செட்டி
தங்கமிக்கொல்லைதா பழனிச்செட்டி தில்லைத்
　　தாண்டவன்மகனே பழனிச்செட்டி. (அங)

கோலப்பினாங்குங்கு பழனிச்செட்டி யெனைக்
　　கொன்றாலுமபோகமாட்டேன் பழனிச்செட்டி
பாலர்களுஞ்செல்லார் பழனிச்செட்டி யவரும்
　　பத்தனகுடிப்பத்தரல்லோ பழனிச்செட்டி
சாலத்தயாநிதியே பழனிச்செட்டி யென்
　　தமிழ்க்குநிதியொல்லைதா பழனிச்செட்டி
ஆலமிடற்றோன்மைந்தா பழனிச்செட்டி நம்பும்
　　அமரர்தஞ்சிறைமீட்ட பழனிச்செட்டி. ( )

அச்சக்கரையாழ்ப்பாணம் பழனிச்செட்டி சேலம்
அருப்புக்கோட்டைசமுதி பழனிச்செட்டி
பிச்சைக்காரத்தேசமெல்லாம் பழனிச்செட்டி யுனைப்
பேணுமியான்செல்லலாமோ பழனிச்செட்டி
கச்சிப்பதியுடையாய் பழனிச்செட்டி தில்லைக்
கானவனருள்பாலா பழனிச்செட்டி
மெச்சுமென்றமிழுக்குப் பழனிசசெட்டி தனம்
விளைந்துதாவிளைந்துதா பழனிச்செட்டி. (அ௫)

நாகூர்வெளிப்பாளையம் பழனிச்செட்டி யுலுத்தர்
நச்சுமேலப்பாளையம் பழனிச்செட்டி
ஆசாதசொச்சிகொல்லம் பழனிச்செட்டி நான்
அடியெடுத்துவைக்கமாட்டேன் பழனிச்செட்டி
போகாவிடங்களிற் பழனிச்செட்டி நான்
பொன்னுக்காகப்போகலாமோ பழனிச்செட்டி
நீகாநீகா பழனிச்செட்டி யொல்லை
நிதிதநதுநடனீ பழனிச்செட்டி. (அ௬)

சிக்கலுகந்தானந்தர் பழனிச்செட்டி முதல்
தேசிகரானவர் பழனிச்செட்டி
அக்குரவர்மாணுக்கர் பழனிச்செட்டி சழனி
அருமைமுத்துராமலிங்கர் பழனிச்செட்டி
தக்கவவர்மாணுக்கர் பழனிச்செட்டி யென
சற்குருவருணுசலர் பழனிச்செட்டி
மிக்கவவர்சீடனுன் பழனிச்செட்டி நிதி
விளைந்துதாநடனீ பழனிச்செட்டி. (அஎ)

என்குரவர்நாமத்தார் பழனிச்செட்டி யவர்
இணையாத்துறவுசெய்தோர் பழனிச்செட்டி
மன்புகழ்க்காசியிறசென்று பழனிச்செட்டி யுன்
மலரடியடைந்தாரே பழனிச்செட்டி
அன்பிலருக்கெட்டாத பழனிச்செட்டி நல்ல
அடிய ருறவே பழனிச்செட்டி
பொன்பரிந்துகோடியொல்லை பழனிச்செட்டி யறம்
புரியத்தாநடனீ பழனிச்செட்டி. (அஅ)

நித்தியானந்தர் பழனிச்செட்டி யென்குரு
நேசமாகியதொண்டர் பழனிச்செட்டி
சுத்தநடையினர்களள் பழனிச்செட்டி யிரண்டு
சுப்பிரமணியருளார் பழனிச்செட்டி

பத்தரிலிருவர்கள் பழனிச்செட்டி யுன்
பதமலர்சேர்ந்தார்கள் பழனிச்செட்டி
மித்திரனாகிய பழனிச்செட்டி நிதி
விரைந்துதாநடனீ பழனிச்செட்டி. (௮௯)

நேமத்தான்பட்டிதனிற் பழனிச்செட்டி யுனை
நிசழ்த்துதிருநாமத்தார் பழனிச்செட்டி
சேமத்திரு ஞானச்செல்வர் பழனிச்செட்டி யுன்
திருவடியடைந்தாரே பழனிச்செட்டி
தாமத்தோனுடையானே பழனிச்செட்டி யற்பத்
தையலாரிடத்தினிற் பழனிச்செட்டி
காமுற்றவனைச்சொலலேன் பழனிச்செட்டி யொல்லை
கனகந்தாநடனீ பழனிச்செட்டி. (௯௰)

கோட்டையூர்தன்னிலே பழனிச்செட்டி யுன்னைக்
கூறுமணனு மலையார்க்குப் பழனிச்செட்டி
காட்டுவணிககவியைப் பழனிச்செட்டி யவருன
சழலிணைச்சோந்தாரே பழனிச்செட்டி
வீடினிற்சேர்க்குநூல் பழனிச்செட்டி சுத்த
வேதாநதமன்றியுண்டோ பழனிச்செட்டி
நாடுக்கெல்லாமிறைநீ பழனிச்செட்டி நிதி
நல்கொல்லைநடனீ பழனிச்செட்டி. (௯௧)

கண்டனூர்தன்னிலே பழனிச்செட்டி யன்பர்
கழறுமுன்றனுமததாா பழனிச்செட்டி
தொண்டரொருவருண்டு பழனிச்செட்டி யெற்குச்
சொந்தமவர்மிகவும் பழனிச்செட்டி
அண்டர்புகழ்குருவின்பாற் பழனிச்செட்டி யென்னை
அழைத்துநன்றாய்ச்சேர்த்தவர் பழனிச்செட்டி
தெண்டனிடுவேனவரைப் பழனிச்செட்டி யொல்லைத்
திருத்தாநடனீ பழனிச்செட்டி. (௯௨)

பொன்னம்பலவையா பழனிச்செட்டி துறவு
பூண்டநற்புண்ணியவான் பழனிச்செட்டி
இன்னம்பலர்களுண்டு பழனிச்செட்டி யெனக்
கிட்டமவர்களெல்லாம் பழனிச்செட்டி
அனைவர்களோடெல்லாம் பழனிச்செட்டி நான்
அருமையாய்ப்பேசுவேன் பழனிச்செட்டி
கன்னலனையாயெற்குப் பழனிச்செட்டி யொல்லை
கனகந்தாநடனீ பழனிச்செட்டி. (௯௩)

பள்ளத்தூர்ப்பரதேசி பழனிச்செட்டி யுன்
பத்தரவ ரப்பா பழனிச்செட்டி
உள்ளத்துறவுமுண்டு பழனிச்செட்டி வெளி
யுற்றதுறவுமுண்டு பழனிச்செட்டி
கள்ளத்தனங்களில்லை பழனிச்செட்டி நான்
கண்டேனீயுமறிவாய் பழனிச்செட்டி
கொள்ளைத்தனமொல்லைதா பழனிச்செட்டி தில்லைக
கூத்தாடிமகனே பழனிச்செட்டி (கச)

சுப்பராயப்பரதேசி பழனிச்செட்டி யென்குரு
தொண்டர்களி லொருவர்காண் பழனிச்செட்டி
செப்புமக்குரவர்மேற பழனிச்செட்டி பிள்ளைத்தமிழ
சித்தமகிழ்ந்துரைத்தார் பழனிச்செட்டி
மைப்படுகண்மினாரூர்யாற் பழனிச்செட்டி யவரை
மயங்காமலினிக்காப்பாய் பழனிச்செட்டி
ஒப்பிலாவுறவே பழனிச்செட்டி நிதி
யொல்லைதாநடனீ பழனிச்செட்டி. (கரு)

உடலாதிமூன்றையும் பழனிச்செட்டி யுனக்
குண்மையாயீந்தவா பழனிச்செட்டி
இடமாயண்ணாமலையார் பழனிச்செட்டி சமுனிச்
சிதம்பரையாவுனக்கனையர் பழனிச்செட்டி
மடமாதராசையைப் பழனிச்செட்டி யையோ
மறந்தாரேமறந்தாரே பழனிச்செட்டி
இடமாதிமூன்றையும பழனிச்செட்டி யொல்லை
ஈயெற்குநடனீ பழனிச்செட்டி. (கசு)

மாதேவர்கிருட்டினர் பழனிச்செட்டி யுனக்கு
வளமாகியதொண்டர் பழனிச்செட்டி
தீதுறுமாதரின்பம் பழனிச்செட்டி யவர்க்குத்
தெரியாதேதெரியாதே பழனிச்செட்டி
சோதிலாருறவே பழனிச்செட்டி சற்
குணப்பெருங்கடலே பழனிச்செட்டி
ஈதலறஞ்செய்யப் பழனிச்செட்டி நிதி
ஈயொல்லைநடனீ பழனிச்செட்டி. (கஎ)

ஆடிப்பூரத்திற் பழனிச்செட்டி யென்னை
ஆளருணைக்குரவற்குப் பழனிச்செட்டி
நாடிப்பூசைசெய்யவும் பழனிச்செட்டி பல
நல்லறங்கள்செய்யவும பழனிச்செட்டி

தேடிப்போயலையாமலே பழனிச்செட்டி யிச்
சிலாபத்திலேவிளைந்து பழனிச்செட்டி
கோடிப்பொனைத்தொலைத்தா பழனிச்செட்டி தில்லைக்
கூத்தாடிமகனே பழனிச்செட்டி. (௯௮)

மாணழச்செல்வந் தீரும் பழனிச்செட்டி யுன்னம்
வளமாயடிமைசகியப பழனிச்செட்டி
மேழிச்செல்வமுமவேண்டுமே பழனிச்செட்டி சொல்லும்
வேலைக்கேவலருமவேண்டுமே பழனிச்செட்டி
சாழிச்சவுண்டியனே பழனிச்செட்டி யொலைலை
சாணியுமித்தூதா பழனிச்செட்டி
கோழிச்சொடியனே பழனிச்செட்டி தில்லைக்
கூத்தாடிமகனே பழனிச்செட்டி. (௯௯)

பாயனேரியென்றுமூரிற பழனிச்செட்டி யொரு
பத்தருனைக்கண்டு பழனிச்செட்டி
ஆறுமவர்திருநாமம் பழனிச்செட்டி மூத்
தஞ்சனைததிருநாமம பழனிச்செட்டி
சோசமிலென்குருவுக்குப் பழனிச்செட்டி மெய்த்
தொண்டராவாகாண் பழனிச்செட்டி
காசனவாசனு பணிச்செட்டி நிதி
நலசொல்லைநடனி பழனிச்செட்டி. (௱)

கல்லெனும்பதியிற பழனிச்செட்டி யுனக்குக்
கட்டிவுரேசோயில பழனிச்செட்டி
நல்லவேதாந்தியபபா பழனிச்செட்டி சுவேத
நாமமவர்நாமம் பழனிச்செட்டி
வல்லைமிகவுமபபா பழனிச்செட்டி குடும்ப
மருவினுமயங்காரே பழனிச்செட்டி
தில்லையான்மகனே பழனிச்செட்டி யறஞ்
செய்யநிதியொல்லைதா பழனிச்செட்டி. (௱௧)

காணாசுருடியென்றூரிற் பழனிச்செட்டி நற்
கவியினதுநாமத்தார் பழனிச்செட்டி
சோரமிலெனகுருவர்க்குப் பழனிச்செட்டி சற்
குணமுள்ளசீடர்காண் பழனிச்செட்டி
சோராகுணதவனைப் பழனிச்செட்டி நான்
சொல்லுவேனின்றமிழிற் பழனிச்செட்டி
வீரர் ர்துணைவா பழனிச்செட்டி நிதி
விலாந்துதாநடனி பழனிச்செட்டி. (௱௨)

சொல்லுமித்தவரையெலாம் பழனிச்செட்டி யென்றுந்
　　துன்னியேயிருப்பதன்றிப் பழனிச்செட்டி
புல்லலுறுந்தேசங்களிற் பழனிச்செட்டி நான்
　　பொன்றேடப்போகமாட்டேன் பழனிச்செட்டி
நல்லவனாகிய பழனிச்செட்டி யிந்த
　　ஞாயாமெல்லாமுணர்ந்து பழனிச்செட்டி
ஒல்லையேகனகந்தா பழனிச்செட்டி புலி
　　ஊரன்றன்மகனே பழனிச்செட்டி (௧௩)

கோடிநிதியீவரேனும் பழனிச்செட்டி யளகைக்
　　குபேரனென்றாலுந்தான் பழனிச்செட்டி
பாடுவனோதமிழ் பழனிச்செட்டி யுன்
　　பத்தர்குடிப்பாலனல்லோ பழனிச்செட்டி
நீடுவீரசைவனுச்சே பழனிச்செட்டி யெற்கு
　　நிதியொருதுரும்பல்லோ பழனிச்செட்டி
மாடேறிமகனே பழனிச்செட்டி யொல்லை
　　வழங்குவாய்நிதிமிகப் பழனிச்செட்டி (௧௪)

சூலையைவிடுத்துந்தை பழனிச்செட்டி மெய்த்
　　தொண்டனையாண்டதுபோற பழனிச்செட்டி
சீலவீரசைவமாகப் பழனிச்செட்டி யென்
　　சேய்முதலோரையெல்லாம் பழனிச்செட்டி
சாலத்தயாநிதியே பழனிச்செட்டி நீ
　　தடுத்தினியாட்கொள்வாய் பழனிச்செட்டி
வேலாயுதத்தெய்வமே பழனிச்செட்டி நிதி
　　விரைந்துதாநடனீ பழனிச்செட்டி. (௧௫)

சேயெனும்வடிவாய் பழனிச்செட்டி தில்லைச்
　　சிதம்பரமன்கனே பழனிச்செட்டி
தாயினுமினியாய் பழனிச்செட்டி யொரு
　　சச்சிதானந்தனே பழனிச்செட்டி
ஓயாக்கொடையானே பழனிச்செட்டி யெனக்
　　கொல்லைநிதிமிகத்தா பழனிச்செட்டி
ஈயாக்கடையரெலாம் பழனிச்செட்டி பார்க்கில்
　　என்கடைரோமங்காண் பழனிச்செட்டி (௧௬)

அகத்தியர்வணங்கும் பழனிச்செட்டி தில்லை
　　அந்தணர்வணங்கும் பழனிச்செட்டி
மகத்துச்சள்வணங்கும் பழனிச்செட்டி நெடு
　　மாலயன்வணங்கும் பழனிச்செட்டி

இகத்தின்பமொல்லைதா பழனிச்செட்டிப பர
இன்பமுமொல்லைதா பழனிச்செட்டி
சகத்துளோர்க்கரியாய் பழனிச்செட்டி தில்லைத்
தாண்டவனமகனே பழனிச்செட்டி. (௯௭)

ஒடுங்கண்ணருவியும் பழனிச்செட்டி யுன்பால்
உறுதிநெஞ்சமும் பழனிச்செட்டி
பாடும்வாயுமல்லாற பழனிச்செட்டி யினிப்
பண்ணும்பூசைவேறுமுண்டோ பழனிச்செட்டி
வாடுதல்தன்னைநீக்கிப் பழனிச்செட்டி யொல்லை
வழங்குவாய்நன்னிதி பழனிச்செட்டி
நாடுவார்க்கமுதமே பழனிச்செட்டி தில்லை
நடராசன்மகனே பழனிச்செட்டி. (௯அ)

சூரனுமழிந்தானே பழனிசசெட்டி யுன்னைத்
துணிவாகநம்பாமற பழனிச்செட்டி
ஆருனைநமபாதார் பழனிச்செட்டி யிந்த
அகிலத்தில்வாழ்வார் பழனிச்செட்டி
வீரர்கள்துணைவனே பழனிச்செட்டி யெங்கள்
மெய்க்குலதெய்வமே பழனிச்செட்டி
தாரமிரண்டுள்ளாய் பழனிச்செட்டி யொல்லை
தாநிதிநடனீ பழனிச்செட்டி. (௯௯)

ஞானிச்செட்டிமகனே பழனிச்செட்டி யிங்கு
நானொருமாற்றஞ்சொல்வேன் பழனிச்செட்டி
ஈனக்குணத்தையெலாம் பழனிச்செட்டி நான்
ஈகிறேன்வாங்கிக்கொள் பழனிச்செட்டி
ஞானக்குணத்தைத்தா பழனிச்செட்டி யிதில்
நயமிருவோர்க்குமுண்டு பழனிச்செட்டி
வானத்தவர்வணங்கும் பழனிச்செட்டி நிதி
வழங்கொல்லையறஞ்செய்யப் பழனிச்செட்டி. (௯0)

வீரனென்றுலென்ன பழனிச்செட்டி யுனக்கு
வெருளுவனோநான பழனிச்செட்டி
சூரனோநானஞ்சப் பழனிச்செட்டி யவன்
துணைவனோநானஞ்சப் பழனிச்செட்டி
ஆரெனநினைந்தாய் பழனிச்செட்டி மெய்
அன்பனல்லோநான் பழனிச்செட்டி
கோரமினடனீ பழனிச்செட்டி யெற்குக்
கோடிநிதியொல்லைதா பழனிச்செட்டி. (௯0க)

ஒப்பினிவைப்பேன் பழனிச்செட்டி யுனக்
கோயாமலழுவேன் பழனிச்செட்டி
அப்பாவப்பா பழனிச்செட்டி யென
தரசேயரசே பழனிச்செட்டி
வைப்பேவவைப்பே பழனிச்செட்டி யொல்லை
மாழைமிகவுந்தா பழனிச்செட்டி
செப்பற்கரியாய் பழனிச்செட்டி தில்லைச்
சீமான்மகனே பழனிச்செட்டி. (௱௰௨)

வீரமெங்கே பழனிச்செட்டி வெற்றி
வேல்தானெங்கே பழனிச்செட்டி
தீரமெங்கே பழனிச்செட்டி மிகத்
தியாகமெங்கே பழனிச்செட்டி
பாரதெய்வமே பழனிச்செட்டி நிதி
பாலிப்பாய்பாலிப்பாய் பழனிச்செட்டி
ஓரஞ்செய்யாதே பழனிச்செட்டி நிந்தை
ஓதுவனடனீ பழனிச்செட்டி. (௱௰௩)

மாலையைக்கொழுந்தைப் பழனிச்செட்டி திரு
மடியினில்வைப்போர் பழனிச்செட்டி
சாலுநின்கருணையைப் பழனிச்செட்டி சோரந்
தான்செய்யமுடியாதே பழனிச்செட்டி
பாலியேநிதியம் பழனிச்செட்டி யெண்ணிப்
பார்ப்பதெனசொல்லே பழனிச்செட்டி
சொலியண்ணுதே பழனிச்செட்டி நிந்தை
சொல்லுவனடனீ பழனிச்செட்டி. (௱௰௪)

சற்குணக்குழவியைப் பழனிச்செட்டி நின்
தன்பாலிரந்தே பழனிச்செட்டி
துற்குணமறியான் பழனிச்செட்டி யென்னைச்
சுதனாகப்பெற்றானே பழனிச்செட்டி
நற்குறளின்படி பழனிச்செட்டி பேறு
நண்ணினவனல்லோ பழனிச்செட்டி
நிற்குணவடிவே பழனிச்செட்டி யெற்கு
நிதிதானடனீ பழனிச்செட்டி. (௱௰௫)

என்கவிப்பிரபுவே பழனிச்செட்டி பண்
ணிருசெவிப்பிரபுநீ பழனிச்செட்டி
புன்கவிகேளாயே பழனிச்செட்டி யந்தப்
புல்லருலைப்பாடாரே பழனிச்செட்டி

நன்கியாழ தெய்வத்தைப் பழனிச்செட்டி கனவிலும்
நான்கவியிற்சொல்லேனே பழனிச்செட்டி
பொன்கோடிபொல்லாதா பழனிச்செட்டி யறம்
புரிந்திடநடனீ பழனிச்செட்டி. (௱௰௬)

பொய்சொல்லியீட்டினுற் பழனிச்செட்டி மிக்க
பொருள்களீட்டலாம் பழனிச்செட்டி
ஐயோவழியுமே பழனிச்செட்டி நல்
அறதுணைருமாகாதே பழனிச்செட்டி
மெய்யாமெய்யா பழனிச்செட்டி யெற்கு
விளைந்திப்பிவாணிபத்தாற பழனிச்செட்டி
தூயமிதிகோடிதா பழனிச்செட்டி தமிழ்
சொல்லுகிறேனடனீ பழனிச்செட்டி. (௱௰௭)

காதலியின்பம பழனிச்செட்டி மிகக
கசபபாயிருந்தாற பழனிச்செட்டி
மாதாவிருச்சினருமோ பழனிச்செட்டி நான
மறைசுருலதெய்வமே பழனிசசெட்டி
பாதகப்பாழுங்குப பழனிச்செட்டி யபபா
பணிந்சொரிதநாயே பழனிச்செட்டி
போதுமயகடனமைமநதா பழனிச்செட்டி யொல்லைப
பொனனைறந்தியறஞ்செயயப் பழனிச்செட்டி. (௱௰௮)

வேதியனேனும் பழனிச்செட்டி யுன்னை
மேவாமூடனா பழனிச்செட்டி
சாதிகெட்டவைணவனைய பழனிச்செட்டி நீறு
தானிடாசகொடியோனைப் பழனிச்செட்டி
சோதுற்றபாதகனைய பழனிச்செட்டி கனவிலுங்
கும்பிடேனேநான் பழனிச்செட்டி
பூதிப்பிரபுவே பழனிச்செட்டி யெற்குப்
பொருள்தாநடனீ பழனிச்செட்டி. (௱௰௯)

கள்ளவைணவர்க்குப் பழனிச்செட்டி யினிசீர்க்
காவடியுனச்செடுப்பார் பழனிச்செட்டி
மன்னரதிகமாச்சே பழனிச்செட்டி நீறு
வாஞ்சையுடன்பூசுவாரே பழனிச்செட்டி
உள்ளதோபொய்யோ பழனிச்செட்டி யெனக்
கோதுவாய்நடன்மைந்தா பழனிச்செட்டி
வள்ளலாய்பிரபுவே பழனிச்செட்டி யொல்லை
வாணிபத்தால்நிதிதா பழனிச்செட்டி. (௱௨௰)

மாதவர்க்கீவான் பழனிச்செட்டி பொன்னை
மதிததுநான்றமிழ்சொன்னேன் பழனிச்செட்டி
காதலுக்கின்றே பழனிச்செட்டி வீண்
காரியத்துக்கினறே பழனிச்செட்டி
ஈதுநீயறியாயோ பழனிச்செட்டி யுனை
எத்துவாரெவர்கொலோ பழனிச்செட்டி
ஆதலாலொல்லைதா பழனிச்செட்டி தில்லை
அரனூர்மகனே பழனிச்செட்டி. (௱உக)

பித்தன்மகனென்பேன் பழனிச்செட்டி யுன்னைப்
பேதைதனமகனென்பேன் பழனிச்செட்டி
பத்தன்யான்சொல்லலாம் பழனிச்செட்டி மற்றப்
பயல்சொன்னூற்கெடுவனே பழனிச்செட்டி
இத்தைநீயறியாயோ பழனிச்செட்டி யுனக்
கெல்லாந்தெரியுமே பழனிச்செட்டி
மெத்தநிதியொல்லைதா பழனிச்செட்டி குன்று
மெய்யறமியான்செய்ய பழனிச்செட்டி. (௱உஉ)

பல்லார்க்குச்சனியன் பழனிச்செட்டி பொல்லாப்
பாதகச்சனியன் பழனிச்செட்டி
பொல்லாச்சனியன் பழனிச்செட்டி கெசப்
" போக்கிலிக்களி பழனிச்செட்டி
நல்லார்க்குவேண்டாம் பழனிசசெட்டி மெய்ஞ்
ஞானிக்கும்வேண்டாம் பழனிச்செட்டி
தில்லாபுரியானி பழனிச்செட்டி யறஞ்
செய்யநிதியொல்லைதா பழனிச்செட்டி. (௱உ௩)

பல்லாக்கேறும்பயல்கள் பழனிச்செட்டி யுன்
பதிக்கேவநதாற் பழனிச்செட்டி
எல்லாரையும்போலே பழனிச்செட்டி படி
ஏறித்தான்வரவேண்டும பழனிச்செட்டி
நல்லாவிருந்தாயே பழனிச்செட்டி யார்க்கும்
நடுவாய்மலைமேலே பழனிச்செட்டி
பொல்லார்க்சரியாய் பழனிச்செட்டி யொல்லைப்
பொருள்தாநடனி பழனிச்செட்டி. (௱உ௪)

உன்னையான்மறக்கினும் பழனிச்செட்டி மிக்க
உந்தையைமறக்கினும் பழனிச்செட்டி
என்னையாள்குரவனைப் பழனிச்செட்டி மறந்
தெண்ணுவதுமுண்டோ பழனிச்செட்டி

கன்னலனையாய் பழனிச்செட்டி யென்
கண்ணேமணியே பழனிச்செட்டி
பொன்னெனக்களியொல்லை பழனிச்செட்டி யறம்
புரிந்திடநடனீ பழனிச்செட்டி. (௱௨௫)

குருமொழிதனைநம்பிப் பழனிச்செட்டி நான்
கோயிலிலோராண்டிருந்தேன் பழனிச்செட்டி
பொருவிலாவறஞ்செய்தேன் பழனிச்செட்டி யங்குப்
புன்மின்னார்கசோவீந்தேன் பழனிச்செட்டி
வருமோதிமையும் பழனிச்செட்டி நடன்
மகனேகுகனே பழனிச்செட்டி
தருவாயினிநிதி பழனிச்செட்டி சற்றுந்
தாமதம்பண்ணாதே பழனிசசெட்டி. (௱௨௬)

உனக்கிணையாந்தெய்வம் பழனிச்செட்டி வேறே
உண்டென்போனையும் பழனிச்செட்டி
மனக்கோதகன்றவர் பழனிச்செட்டி சழனி
மாதவற்கொப்பாகப் பழனிச்செட்டி
வினைக்காமொருவனைப் பழனிச்செட்டி சரியாய்
விளம்புமவனையும் பழனிச்செட்டி
நினைக்கேன்கனவினும் பழனிச்செட்டி யொல்லை
நிதிதாநடனீ பழனிச்செட்டி. (௱௨௭)

குருபூசைக்கும் பழனிசசெட்டி குன்றக்
குடித்திருநாட்கும் பழனிச்செட்டி
திரிசிரபுரமிருந்து பழனிச்செட்டி யுடனே
திருமெய்யத்துக்கெய்தினேன் பழனிச்செட்டி
தரிச்சேனுமத்தியிற் பழனிச்செட்டி யெனக்குச்
சரியோமூடப்பயல்கள் பழனிச்செட்டி
ஒருவாகனமும்வேண்டேன் பழனிச்செட்டி நிதி
ஒல்லைதாநடனீ பழனிச்செட்டி. (௱௨௮)

இடைமருதூரிந்து பழனிச்செட்டி தில்லைக்
கேகினேனேயுடனே பழனிச்செட்டி
நடராசன்சிரத்தை பழனிச்செட்டி யுனக்கு
நன்றாய்த்தெரியுமே பழனிச்செட்டி
விடமன்னபல்லாக்குப் பழனிச்செட்டி யெனக்கு
வேண்டாம்வேண்டாம் பழனிச்செட்டி
திடமாகக்கனகந்தா பழனிச்செட்டி யறஞ்
செய்திடவிரைந்தின்று பழனிச்செட்டி (௱௨௯)

சடகோபர்மு லிசேஞர் பழனிச்செட்டி யுனைச்
சார்ந், மெய்ஞானியர் பழனிச்செட்டி
மடவைணவரைப்போற் பழனிச்செட்டி நீற்றை
வாங்கிக்கீழ்ப்போடாரே பழனிச்செட்டி
நடராசனையுன்னைப் பழனிச்செட்டி நிந்தை
நவில்வாரோவனுவும பழனிச்செட்டி
கடவாரணைக்கனிட்டா பழனிச்செட்டி பெறத்தக்
கனசமிக்கொல்லைதா பழனிச்செட்டி. (௩௯0)

தாதன்பட்டியிலிருந்து பழனிச்செட்டி யுடனே
சத்திரப்பட்டிக்கிப் பழனிசசெட்டி
தீதிலுன்மலைகாணப் பழனிச்செட்டி மிகு
சிரத்தையாய்வந்தேனே பழனிச்செட்டி
ஈதுநீயறிவையே பழனிச்செட்டி யெனக்
கேதுக்குப்பல்லாக்குப் பழனிச்செட்டி
மாதவன்மருகனே பழனிச்செட்டி நிதி
வழங்கொல்லைநடனீ பழனிச்செட்டி. (௩௯௧)

தக்கஞர்திருப்புன்கூர் பழனிச்செட்டி சிவ
தலங்களினம்பல பழனிச்செட்டி
மிக்கவுஞ்சிரணைந்தான் பழனிச்செட்டி சற்று
மேவுதற்குநீதியோ பழனிச்செட்டி
முக்கணுயகன்மைந்தா பழனிச்செட்டி பாரி
முதலாளிநீயாச்சே பழனிச்செட்டி
இக்கணமேபொன்றா பழனிச்செட்டி யந்த
இரும்பணிசெய்திடப் பழனிச்செட்டி. (௩௯௨)

ததிதாகிருதந்தா பழனிச்செட்டி யாவின்பால
தாகி ம்பூசைக்குப் பழனிச்செட்டி
திதிதாமிகவொல்லைப் பழனிச்செட்டி யறஞ்
செய்துநான்மகிழ்ந்திடப் பழனிச்செட்டி
கதிதாபதியுந்தா பழனிச்செட்டி முதகுக்
கந்தாவந்தாள் பழனிச்செட்டி
விதிதாழ்பதத்தைப் பழனிச்செட்டி தில்லை
வேதியன்மதலாய் பழனிச்செட்டி. (௩௯௩)

காசுமிகக்கொடுத்தே பழனிச்செட்டி யன்பால்
சறந்துதான்வாங்கினும் பழனிச்செட்டி
தோசிமுண்டைகள்தான் பழனிச்செட்டி யதில்
தோயத்தைவிடுகிறார் பழனிச்செட்டி

பூசையுனக்குச்செய்யப் பழனிச்செட்டி யெப்
போதுமென்கிரகத்திற பழனிச்செட்டி
ஆசினறசிரந்தா பழனிச்செட்டி நிதி
அருளொல்லைநடனீ பழனிச்செட்டி. (௱௯௪)

பூதியையணியினும பழனிச்செட்டி யுன்னைப்
பூசைகள்புரியினும பழனிச்செட்டி
வேதாநதநூலினைப் பழனிச்செட்டி சற்றும்
விரும்பாதவர்களைப பழனிசசெட்டி
மூதேவிகளென்றே பழனிச்செட்டி கண்டால
முகத்தைநான்மாறுவேன பழனிச்செட்டி
தாதாவாகிய பழனிசசெட்டி நிதி
தாவொல்லைநடனீ பழனிச்செட்டி. (௱௯௫)

ஐயமானபோதெலாம் பழனிசசெட்டி நீ
அகலவேவினைருபெ பழனிசசெட்டி
மெய்யன்பைகசண்டபின பழனிச்செட்டி யெனயாள்
விரைவினிலவநதாயே பழனிச்செட்டி
துய்யதிருமாணமருகா பழனிசசெட்டி யெங்கள
துரைச்சாமிநீயல்லோ பழனிச்செட்டி
வையகமபுகழ்மெய்யா பழனிச்செட்டி நிதி
வழங்கொல்லைநடனீ பழனிசசெட்டி. (௱௯௬)

உநதைதலங்களிற் பழனிசசெட்டி புவி
ஊரினிலிடம பழனிசசெட்டி
ஆநதோதினறலங்களிற பழனிச்செட்டி திரு
ஆவினனகுடியிட்டம் பழனிச்செட்டி
எநததலங்களேனும் பழனிச்செட்டி சான்றோர்
இருக்கினறதலமிட்டம் பழனிச்செட்டி
கநதாமுருகா பழனிச்செட்டி யொல்லைக்
கனகநதாநடனீ பழனிச்செட்டி. (௱௯௭)

பருப்புநெய்யும் பழனிச்செட்டி கொடுவா
பருகுவேனபருகுவேன் பழனிச்செட்டி
விருப்பமானபால் பழனிச்செட்டி யதை
மெதுவுங்கொடுவா பழனிச்செட்டி
திருப்புகழ்படிக்கிறேன் பழனிச்செட்டி யுனைத்
தெண்டஞ்செய்கிறேன பழனிச்செட்டி
குருப்பெருமானே பழனிச்செட்டி யொல்லை
கொடுக்கிறநடனீ பழனிச்செட்டி. (௱௯௮)

வங்கக்காய்முதிரப் பழனிச்செட்டி தோட்டத்தில்
மலிவாய்க்காய்க்கட்டும் பழனிச்செட்டி
பங்கமில்தவருக்குப் பழனிச்செட்டி நான்
பாலிக்கவேண்டும் பழனிச்செட்டி
மங்கையர்பொன்னாற் பழனிச்செட்டி யென்
வாணிபங்குறையுமோ பழனிச்செட்டி
இங்கென்குறைச்சல் பழனிச்செட்டி நிதி
ஈயொல்லைநடனீ பழனிச்செட்டி. (௱௩௯)

தங்கக்குருவைப் பழனிச்செட்டி யருண
சலசற்குருவைப் பழனிச்செட்டி
துங்கக்குருவைப் பழனிச்செட்டி துறவு
சாமிக்குருவைப் பழனிச்செட்டி
இங்குற்றதாலல்லோ பழனிச்செட்டி யும
திட்டமுறப்பாடினேன் பழனிச்செட்டி
சங்கமவடிவே பழனிச்செட்டி நிதி
தாவொல்லைநடனீ பழனிச்செட்டி (௧௪௰)

முத்துக்குருவைப் பழனிச்செட்டி மின்னா
மோகமற்றகுருவைப் பழனிச்செட்டி
சித்துக்குருவைப் பழனிச்செட்டி சிதம்பரர்
சேட்டனுங்குருவைப் பழனிச்செட்டி
மெத்தக்கருதினேன் பழனிச்செட்டி சகல
மேன்மையும்பெற்றேன் பழனிச்செட்டி
பத்தர்க்கெளியாய் பழனிச்செட்டி நிதி
பாலியொல்லைநடனீ பழனிச்செட்டி. (௧௪௧)

தாதையைப்பார்க்கினும் பழனிச்செட்டி மெத்தச
சமர்த்தனீயறிவாய் பழனிச்செட்டி
ஓதுஞ்சமர்த்திருந்தும் பழனிச்செட்டி நான்
ஒருவஞ்சம்பண்ணேனே பழனிச்செட்டி
நீதியுந்தப்பேனே பழனிச்செட்டி யான்
நிசந்தப்பிப்போனேனோ பழனிச்செட்டி
தீதிலிப்பிவாணிபத்தாற் பழனிச்செட்டி யொல்லைத்
திருத்தாநடனீ பழனிச்செட்டி. (௧௪௨)

மெத்தச்சமர்த்தனீ பழனிச்செட்டி யுனை
மேவுஞ்சமர்த்தனுன் பழனிச்செட்டி
இத்தையறியாமற் பழனிச்செட்டி தில்லை
ஈசன் மகனே பழனிச்செட்டி
புத்தியில்லாப் பயல்களெலாம் பழனிச்செட்டி யறத்தைப்
புகழாமலிகழ்ந்தாரே பழனிச்செட்டி
அத்தம்விரைந்துதா பழனிச்செட்டி நான்
அவர்களைப் பழித்திடப் பழனிச்செட்டி. (கசரு)

நின்னைப்பூசிக்குமறையோர் பழனிச்செட்டி யன்பு
நீங்கலாகச்சீலத்திற் பழனிச்செட்டி
உன்னருங்கண்ணைப்பற்குப் பழனிச்செட்டி நல்லூரர்
உறவின்முறையாரோ பழனிச்செட்டி
பன்னவேண்டுமதைநன்றாய்ப் பழனிச்செட்டி பொறையிற்
பரவையுமிணையிலாப் பழனிச்செட்டி
பொன்னம்பலன்மைந்தா பழனிச்செட்டி யொல்லை
பொன்தாபூத்தா பழனிச்செட்டி. (கசச)

நித்திரைவேளையோ பழனிச்செட்டி ஞான
நிட்டைதானோசொல்லு பழனிச்செட்டி
கத்தினேனேமிகப் பழனிச்செட்டி பன்னிரு
காதினும்நுழையலையோ பழனிச்செட்டி
முத்தமிழ்ப்பிரபுவே பழனிச்செட்டி யெனை
மோசநீபண்ணுதே பழனிச்செட்டி
சத்தியவானே பழனிச்செட்டி நிதி
தாவொல்லைநடனீ பழனிச்செட்டி. (கசரு)

சைவநாயகனே பழனிச்செட்டி வீர
சைவநாயகனே பழனிச்செட்டி
பொய்யருக் கெட்டாய் பழனிச்செட்டி பரி
பூரணவடிவே பழனிச்செட்டி
மெய்யாய் நம்பினேன் பழனிச்செட்டி யெற்கு
மிகவொல்லை நிதிதா பழனிச்செட்டி
அய்யாவப்பா பழனிச்செட்டி யோட்
டாண்டிமகனே பழனிச்செட்டி. (கசசு)

கற்புடையாள்மைந்தா பழனிச்செட்டி நின்னைக்
கழறுங்கவியிலெலாம் பழனிச்செட்டி
சிற்பொதுவோன்மைந்தா பழனிச்செட்டி மிகச்
சிறப்பாகநானுரைப்பேன் பழனிச்செட்டி

அற்பரைப்பா டெங்கவிஞர் பழனிச்செட்டி தாதைபேர்
அறையினுமையந்தானே பழனிச்செட்டி
துற்பாத கருக்கெட்டாப் பழனிச்செட்டி யெற்குச்
சொர்ணமிக் கொல்லைதா பழனிச்செட்டி. (கசஎ)

பாக்கியவானே பழனிச்செட்டி யுன்
பதிவிசாரணையைப் பழனிச்செட்டி
போக்கிலிக்கேனீந்தாய் பழனிச்செட்டி யுன்னைப்
புகலுவேனிந்தை பழனிச்செட்டி
நீக்குவிரைவிலே பழனிச்செட்டி யதை
நினதடியார்க்கீயப் பழனிச்செட்டி
சீக்கிரநிதிதா பழனிச்செட்டி யறஞ்
செய்திடநடனீ பழனிச்செட்டி. (கசஅ)

ஆரூர்க்கோவிலிற் பழனிச்செட்டி நடக்கும்
அநியா யத்தைப் பழனிச்செட்டி
பாரேன்கண்ணாலே பழனிச்செட்டி யுன்னைப்
பழிப்பேன்பழிப்பேன் பழனிச்செட்டி
வீரமெங்கே பழனிச்செட்டி யார்க்கும்
விலைக்கோவிற்றாய் பழனிச்செட்டி
சீராக்கதனைப் பழனிச்செட்டி யொல்லை
திருத்தாநடனீ பழனிச்செட்டி. (கசகூ)

பணக்காரனீயென்றாற் பழனிச்செட்டி நான்
பயப்படமாட்டேனே பழனிச்செட்டி
குணக்காரனானல்லோ பழனிச்செட்டி யுன்னைக்
கூறுங்கவிஞனல்லோ பழனிச்செட்டி
மணக்கடப்பந்தாராய் பழனிச்செட்டி வள்ளி
மாப்பிள்ளைத்துரையே பழனிச்செட்டி
இணக்கமாய்நிதியீவாய் பழனிச்செட்டி யின்றேல்
ஏசுவேனடனீ பழனிச்செட்டி. (கருo)

முதலாளிநீயென்றாற் பழனிச்செட்டி யுன்
முறுக்குக்குநானஞ்சேன் பழனிச்செட்டி
பதமுன்மேற்பாடினேன் பழனிச்செட்டி வண்ணம்
பாடச்சொன்னாற்பாடுகிறேன் பழனிச்செட்டி
மதஞ்சைவமுடையாய் பழனிச்செட்டி வள்ளி
மடந்தைமணாளா பழனிச்செட்டி
இதமாய்நிதிதா பழனிச்செட்டி இன்றேல்
ஏசுவேனடனீ பழனிச்செட்டி. (கருக)

குஞ்சரிகணவா பழனிச்செட்டி யெழிற்
குறவள்ளிகணவா பழனிச்செட்டி
வஞ்சகம்பண்ணாதே பழனிச்செட்டி யினி
வைவேன் வைவேன் பழனிச்செட்டி
நெஞ்சகப்புண்ணைத்தீர் பழனிச்செட்டி யொல்லை
நிதிபதிதனந்தா பழனிச்செட்டி
அஞ்சேலெனச்சொல்லு பழனிச்செட்டி யெங்கள்
அல்லமாப்பிரபுமைந்தா பழனிச்செட்டி. (௯௨)

நஞ்சுகுடித்தாரேயுந்தை பழனிச்செட்டி யுனக்கு
நாணந்தானில்லையோ பழனிச்செட்டி
அஞ்சாமனீதான் பழனிச்செட்டி குற
அணங்கைக்கைப்பிடித்தாயே பழனிச்செட்டி
புன்சிரிப்புக்காரா பழனிச்செட்டி தில்லைப்
பொதுவோன்மைந்தா பழனிச்செட்டி
தஞ்ச நீதான் பழனிச்செட்டி யொல்லை
தாதாநிதிமிகப் பழனிச்செட்டி. (௯௩)

கள்ளத்தனமாய்ப் பழனிச்செட்டி குறத்திதன்
காலிலேவிழுந்தாயே பழனிச்செட்டி
மெள்ளநான்பேசேன் பழனிச்செட்டி சுத்த
வீரசைவனல்லோ பழனிச்செட்டி
வள்ளலிற்றலைவா பழனிச்செட்டி யென்
வண்டமிழ்ப்பிரபுவே பழனிச்செட்டி
பிள்ளைமதிச்சடையானீ பழனிச்செட்டி யெற்குப்
பெருநிதியொல்லைதா பழனிச்செட்டி. (௯௪)

கொடியிட்டபிட்டுக்காப் பழனிச்செட்டி யுந்தை
கூடையில்மண்சுமந்தாரே பழனிச்செட்டி
அடிபட்டுந்திரிந்தாரே பழனிச்செட்டி யீதெல்லாம்
அறியேனோவறியேனோ பழனிச்செட்டி
வடியுற்றவேலுள்ளாய் பழனிச்செட்டி யொல்லை
மாழைமிகத்தாதா பழனிச்செட்டி
பொடியிட்டநுதலாய் பழனிச்செட்டி மிகும்
புண்ணியவானே பழனிச்செட்டி. (௯௫)

காளமேகத்தைப் பழனிச்செட்டி நான்
கண்டேனேயென்றாற் பழனிச்செட்டி
தாளைப்பிடித்தேனும் பழனிச்செட்டி யுன்மேற்
தமிழ்பாடச்சொல்வேனே பழனிச்செட்டி

காளைப்பருவமேனும் பழனிச்செட்டி மின்றுரைக்
காறிக்காறித்துப்பலாமே பழனிச்செட்டி
வேளையெரித்தோன்மைந்தா பழனிச்செட்டி யெற்கு
மிக்கநிதியொல்லைதா பழனிச்செட்டி. (கருசு)

வல்லவரென்றாலும் பழனிச்செட்டி தமிழ்
வழுத்துங்கவிஞரேனும் பழனிச்செட்டி
நல்லவரென்றாலும் பழனிச்செட்டி யுனை
நம்பாதார்கெடுவார் பழனிச்செட்டி
பொல்லாச்சூ ரனைவிடப் பழனிச்செட்டி யிந்தப்
பூதலத்தில்வலியாரார் பழனிச்செட்டி
அல்லமாப்பிரபுமைந்தா பழனிச்செட்டி யொல்லை
ஆடகமிகத்தா பழனிச்செட்டி. (கருஎ)

கற்பகக்காவே பழனிச்செட்டி யென்
கவிக்குப்பிரபுவே பழனிச்செட்டி
அற்புதத்தேனே பழனிச்செட்டி யெனக்
காராவமுதே பழனிச்செட்டி
நற்பெரியோனே பழனிச்செட்டி யொல்லை
நன்னிதிமிகத்தா பழனிச்செட்டி
துற்புத்தியர்க்கெட்டாப் பழனிச்செட்டி தில்லைத்
தூயோன்மகனே பழனிச்செட்டி. (கருஅ)

கட்டிச்செந்தேனென்றே பழனிச்செட்டி விலைக்
கன்னியரையெண்ணினேனே பழனிச்செட்டி
எட்டிக்காயென்றின்று பழனிச்செட்டி சொல்லி
ஏசவாய்தந்தாயே பழனிச்செட்டி
கெட்டிக்காரனீயல்லோ பழனிச்செட்டி யழியாக்
கீர்த்திக்காரனீயல்லோ பழனிச்செட்டி
அட்டியின்றிப்பொன்மிகத்தா பழனிச்செட்டி யெங்கள்
அல்லமாப்பிரபுமைந்தா பழனிச்செட்டி. (கருகூ)

பத்தரருணகிரி பழனிச்செட்டி திவ்வியப்
பாடல்மிகச்சொன்னாரே பழனிச்செட்டி
இத்திக்குமேயது பழனிச்செட்டி யுனக்குச்
சிறியேன்கவிக்கிச்சையோ பழனிச்செட்டி
முத்தமிழ்ப்பிரபுவே பழனிச்செட்டி நன்றாய்
மொழிகிறேன்கேளப்பா பழனிச்செட்டி
சித்தமென்பாக்கியம் பழனிச்செட்டி யொல்லை
திருத்தாநடனி பழனிச்செட்டி. (கசு0)

அனுபூதித்தமிழிலே பழனிச்செட்டி யெனக்
காசைநிரம்பவுண்டு பழனிச்செட்டி
தினமுப்பதுதரம் பழனிச்செட்டி மனத்
திடஞ்சலியாமற்சொல்வேன் பழனிச்செட்டி
தனையர்க்குமுபதேசம் பழனிச்செட்டி யதைச்
சாற்றுவேன்குறையின்றிப் பழனிச்செட்டி
கனகமிக்கொல்லைதா பழனிச்செட்டி தில்லைக்
கானவன்மகனே பழனிச்செட்டி. (கசூக)

கானமடந்தைபங்கா பழனிச்செட்டி தெய்வக்
கரிக்கன்னிகணவாபழனிச்செட்டி
வானமின்னார் வரினும் பழனிச்செட்டி யினி
மயங்கமாட்டேனே பழனிச்செட்டி
ஏனோவேனோ வென்றாற் பழனிச்செட்டி யுன
திட்டத்தாலல்லவோ பழனிச்செட்டி
ஞானிச்செட்டிமகனே பழனிச்செட்டி யொல்லை
நன்னிதிமிகத்தா பழனிச்செட்டி. (கசூஉ)

சொந்த நீதான் பழனிச்செட்டி பெற்ற
சுதரோசொந்தம் பழனிச்செட்டி
பந்து நீதான் பழனிச்செட்டி மூடப்
பயல்களோபந்து பழனிச்செட்டி
தந்தையுநீதான் பழனிச்செட்டி பெற்ற
தாயு நீதான் பழனிச்செட்டி
சிந்தாமணியே பழனிச்செட்டி யொல்லை
திருத்தாநடனே பழனிச்செட்டி (கசூங)

மைத்துனமைத்துன பழனிச்செட்டி தாய்
மாமாமாமா பழனிச்செட்டி
புத்திராபுத்திரா பழனிச்செட்டி மறைப்
பொருளேதெருளே பழனிச்செட்டி
மித்துருநீயல்லாற் பழனிச்செட்டி நான்
வேறொன்றுங்காணேனே பழனிச்செட்டி
சித்துருவடிவே பழனிச்செட்டி யொல்லை
திருத்தாநடனே பழனிச்செட்டி. (கசூச)

தங்காய்தங்காய் பழனிச்செட்டி நற்
றமக்காய்தமக்காய் பழனிச்செட்டி
துங்கச்சேட்டா பழனிச்செட்டி யன்பு
துன்னுங்கனிட்டா பழனிச்செட்டி

இங்கார்துணையெற்குப் பழனிச்செட்டி யெனக்
கெல்லா நீதான் பழனிச்செட்டி
கங்காதரன்பாலா பழனிச்செட்டி யெற்குக்
கனகமிக்கொல்லைதா பழனிச்செட்டி. (கசுரு)

செஞ்சாலியன்னம் பழனிச்செட்டி மிகச்
சீக்கிரங்கொடுவா பழனிச்செட்டி
வஞ்சமில்தவருக்கும் பழனிச்செட்டி நிதம்
வழங்கியாங் களுமுண்ணப் பழனிச்செட்டி
தஞ்ச நீதான் பழனிச்செட்டி வேறு
சார்புநானறியேன் பழனிச்செட்டி
நெஞ்சுப்புண்ணாற்றிப் பழனிச்செட்டி யொல்லை
நிதிதாநடனீ பழனிச்செட்டி. (கசுசு)

சுப்பய்யாவுக்குப் பழனிச்செட்டி யெங்கள்
சுந்தரத்தையீவோமென்பார் பழனிச்செட்டி
எப்பொழுதென்றாற்கேளு பழனிச்செட்டி நிதி
இருந்தாற்றான்மிகப் பழனிச்செட்டி
அப்பொருளில்லையென்றாற் பழனிச்செட்டி பேச்சும
அப்படியப்படித்தான் பழனிச்செட்டி
ஒப்பிலாவுறவே பழனிச்செட்டி நிதி
உதவொல்லைநடனீ பழனிச்செட்டி. (கசுஎ)

நாச்சம்மைதன்னைப் பழனிச்செட்டி யுங்கள்
நாராயணனுக்குப் பழனிச்செட்டி
ஆச்சுநிச்சயதாம்பூலம் பழனிச்செட்டி யிதற்
கடுத்த மாதமென்பார் பழனிச்செட்டி
போச்சுதுகாசென்றாற் பழனிச்செட்டி தாலிப்
பொருத்தமில்லையென்பார் பழனிச்செட்டி
மாட்சிமையுறவே பழனிச்செட்டி நிதி
வழங்கொல்லைநடனீ பழனிச்செட்டி. (கசுஅ)

பத்துப்பூவராகன் பழனிச்செட்டி யவர்கள்
பங்குக்குவருமாமே பழனிச்செட்டி
புத்தியுள்ள மாப்பிள்ளைதான் பழனிச்செட்டி நமது
பூரணியையீவோமென்பார் பழனிச்செட்டி
அத்தினிற்குறைந்தாற் பழனிச்செட்டி பின்
அசத்தியஞ்சொல்வாரே பழனிச்செட்டி
த்தியவானே பழனிச்செட்டி நிதி
தாவொல்லைநடனீ பழனிச்செட்டி. (கசுகூ)

உங்கள்முருகப்பனுக்குப் பழனிச்செட்டி யெங்கள்
உண்ணாமுலையினைப் பழனிச்செட்டி
திங்கள்மீனத்திற் பழனிச்செட்டி மணஞ்
செய்விப்போமென்பார் பழனிச்செட்டி
சிங்கப்பூரிலே பழனிச்செட்டி பணஞ்
சேதமென்றோலைவந்தாற் பழனிச்செட்டி
பங்கஞ்சொல்வாரே பழனிச்செட்டி யொல்லை
பணந்தாநடனீ பழனிச்செட்டி. (௧௭0)

கண்ணப்பனுக்குப் பழனிச்செட்டி யெங்கள்
கடைக்குட்டித்தங்கச்சியைப் பழனிச்செட்டி
பண்ணுகிறோமென்பார் பழனிச்செட்டி முன்னைப்
பசுமைகுறைந்திட்டாற் பழனிச்செட்டி
பெண்ணைவேறிடத்திலே பழனிச்செட்டி நாங்கள்
பேசினோமென்பார் பழனிச்செட்டி
புண்ணியவானே பழனிச்செட்டி யொல்லைப்
பொருள்தாநடனீ பழனிச்செட்டி. (௧௭௧)

மச்சினியில்லாவிடிற் பழனிச்செட்டி மச்சினி
மகளைச்செய்வோமென்பார் பழனிச்செட்டி
நிச்சமாய்நிதியிருந்தாற் பழனிச்செட்டி இன்றேல்
விரும்பினுமீயாரே பழனிச்செட்டி
நற்சனருறவைவிட்டேன் பழனிச்செட்டி யினிச
சொந்தமெனக்குநீதான் பழனிச்செட்டி
அச்சமகற்றுவாய் பழனிச்செட்டி நிதி
அருளொல்லைநடனீ பழனிச்செட்டி. (௧௭௨)

வைகாசிமூலத்திற் பழனிச்செட்டி யுனக்கு
வருங்குருபூசையைப் பழனிச்செட்டி
செய்யாமனீக்கினரே பழனிச்செட்டி யந்தத்
தீயரோடுறவேன் பழனிச்செட்டி
நய்யநின்னுறவும் பழனிச்செட்டி மெய்த்
தொண்டருறவுமுற்றேன் பழனிச்செட்டி
ஐயமிலுறவே பழனிச்செட்டி நிதி
அருளொல்லைநடனீ பழனிச்செட்டி. (௧௭௩)

தம்பிவாருங்களென்பார் பழனிச்செட்டி மூத்த
தடிப்பயலென்றாலும் பழனிச்செட்டி
செம்பொன்மிகவிருந்தாற் பழனிச்செட்டி விருந்து
செய்கிறோமென்பார பழனிச்செட்டி

அம்பொனிலாதிருந்தாற் பழனிச்செட்டி நீ
ஆரென்றுங்கேளாரே பழனிச்செட்டி
வம்பருறவைவிட்டேன் பழனிச்செட்டி நிதி
வழங்கொல்லைநடனீ பழனிச்செட்டி. (கஎச)

அக்காளென்றாலும் பழனிச்செட்டி கண்டால்
அம்பிவாருங்களென்பார் பழனிச்செட்டி
மிக்கபணமிருந்தாற் பழனிச்செட்டி யில்லா
விடிலொன்றும்பேசாளே பழனிச்செட்டி
மக்களெல்லோருமம்மான் பழனிச்செட்டி மிக
வாருங்கள்வாருங்களென்பார் பழனிச்செட்டி
பக்கிரியுறவைவிட்டேன் பழனிச்செட்டி நிதி
பாலியொல்லைநடனீ பழனிச்செட்டி. (கஎரு)

பாலினீரைக்கலந்து பழனிச்செட்டி பொல்லாப்
பணத்தாசைமுண்டைகள் பழனிச்செட்டி
சாலும்பிழைக்கஞ்சாமற் பழனிச்செட்டி விற்றுத்
தனமிகச்சேர்த்துவைத்தார் பழனிச்செட்டி
நீவிமுண்டைகடாம் பழனிச்செட்டி நமன்
நெருங்கும்போதென்செய்வார் பனிச்செட்டி
கோலமஞ்ஞைவாகனனே பழனிச்செட்டி தனம்
கொடுவொல்லைநடனீ பழனிச்செட்டி. (கஎசு)

அன்பனல்லவோநான் பழனிச்செட்டி வாக்
கரையர்தொண்டரைப்போலப் பழனிச்செட்டி
என்பாற்குருநாமம் பழனிச்செட்டி யெண்ணி
ஏட்டின்மேலெழுதினேன் பழனிச்செட்டி
தன்போல்மனுவென்று பழனிச்செட்டி கொடிய
சண்டாளர்கிறுக்கிறாரே பழனிச்செட்டி
இன்பாயறம்புரியப் பழனிச்செட்டி நிதி
ஈவாயெனக்குமிகப் பழனிச்செட்டி. (சஎஎ)

பாணபத்திரனுக்காகப் பழனிச்செட்டி யுந்தை
பாடிவிறகெடுத்தாரோ பழனிச்செட்டி
நாணமுனக்கில்லையோ பழனிச்செட்டி நீ
நாளுஞ்சிரித்தனையே பழனிச்செட்டி
வேணுமோயின்னம் பழனிச்செட்டி யெனக்கு
மெத்தநிதிவிரைந்துதா பழனிச்செட்டி
காணலையோபத்தனென்றும் பழனிச்செட்டி தில்லைக்
கனகசபையோனருளும் பழனிச்செட்டி. (கஎஅ)

மதலையென்றெண்ணியே பழனிச்செட்டி யாரு
மடியிற்றூக்கிவைப்பாரென்றோ பழனிச்செட்டி
இதமாகத்தண்டத்தைப் பழனிச்செட்டி கையில்
இடுக்கின்றிக்கொண்டுநின்றாய் பழனிச்செட்டி
பதமலரெனக்குத்தா பழனிச்செட்டி பொற்
பாக்கியமுமிகத்தா பழனிச்செட்டி
சதமெனநம்பிவந்தேன் பழனிச்செட்டி தில்லைத்
தாண்டவன்மகனே பழனிச்செட்டி. (௧௭௯)

பஞ்சாமிருதமென்றே பழனிச்செட்டி விலைப்
பாவையரைபெண்ணினனே பழனிச்செட்டி
நஞ்சாக்கினையின்று பழனிச்செட்டி நீ
நன்றாயிருந்தாற்சரி பழனிச்செட்டி
நெஞ்சானதைவிடுக்கேன் பழனிச்செட்டி மின்னார்
நேசமாயழைத்தாலும் பழனிச்செட்டி
அஞ்சானனன்மதலாய் பழனிச்செட்டி நிதி
அருளொல்லைமிகவும் பழனிச்செட்டி. (௧௮0)

இறுமாப்புநீங்கலாகப் பழனிச்செட்டி யொல்லை
எல்லாச்செல்வமுந்தா பழனிச்செட்டி
வெறுமாக்களுக்கே பழனிச்செட்டி மதம்
மெத்தமெத்தக்கொடுநீ பழனிச்செட்டி
அறுபான்மூவர்களிற் பழனிச்செட்டி யொரு
ஆண்சிங்கநீயல்லோ பழனிச்செட்டி
நறுமாபதத்தாய் பழனிச்செட்டி தில்லை
நடேசன்மகனே பழனிச்செட்டி. (௧௮௧)

தீரமெங்கே பழனிச்செட்டி யதைத்
திருடர்கைக்கொண்டாரோ பழனிச்செட்டி
பாரேகடைக்கண்ணாற் பழனிச்செட்டி பொற்
பாக்கியமொல்லைதா பழனிச்செட்டி
ஆரெனக்குறவுண்டு பழனிச்செட்டி யுனை
அல்லாமல்வேறினிப் பழனிச்செட்டி
கோரமில்லாய் பழனிச்செட்டி தில்லைக்
கூத்தாடிமகனே பழனிச்செட்டி (௧௮௨)

சத்தியமெங்கே பழனிச்செட்டி யார்க்குந்
தானஞ்செய்தாயோ பழனிச்செட்டி
பத்தனானச்சே பழனிச்செட்டி யெண்ணிப்
பார்க்கலையோவின்னம் பழனிச்செட்டி

மெத்தவும்நிதிதா பழனிச்செட்டி யென்பால்
விரைந்துமயிலேறிவா பழனிச்செட்டி
சித்தர்கள் வணங்கும் பழனிச்செட்டி ஞானிச்
செட்டிதன்மகனே பழனிச்செட்டி (கஅங)

குடும்பமுனதாச்சே பழனிச்செட்டி யென்
கூட்டாளிநீயாச்சே பழனிச்செட்டி
இடும்பையெனக்குண்டோ பழனிச்செட்டி யொரு
எட்டுணையுங்காணேனே பழனிச்செட்டி
நெடும்பதியைக்கண்டவுடன் பழனிச்செட்டி யன்றே
நீங்கினவென்றுன்பமெல்லாம் பழனிச்செட்டி
ஆடும்படைக்கரத்தாய் பழனிச்செட்டி நிதி
அருளொல்லைநடனீ பழனிச்செட்டி. (கஅச)

பட்டமீனுயிர்த்திடப் பழனிச்செட்டி நீதான்
பண்ணுவதருமையல்ல பழனிச்செட்டி
துட்டனாகியவென்னைப் பழனிச்செட்டி மெய்த்
தொண்டனாக்கியதருமை பழனிச்செட்டி
கட்டமினியெய்தாமல் பழனிச்செட்டி மிகக்
களிப்புடனறஞ்செய்யப் பழனிச்செட்டி
அட்டியின்றிநிதிதா பழனிச்செட்டி தில்லை
அம்பலவன்றன்மைந்தா பழனிச்செட்டி (கஅரு)

சீனிகசக்குமே பழனிச்செட்டி யுன்
செந்தமிழினிக்குமே பழனிச்செட்டி
ஆனகனிகசக்குமே பழனிச்செட்டி நின்
அருந்தமிழினிக்குமே பழனிச்செட்டி
நானுமுணர்ந்தேனருத்தம் பழனிச்செட்டி யந்த
நல்லலங்காரக்கவிக்குப் பழனிச்செட்டி
வானளகைநிதிதா பழனிச்செட்டி தில்லை
மன்றுடிமகனே பழனிச்செட்டி. (கஅசா)

அஞ்சுகோவில்விசாரணையைப் பழனிச்செட்டி பொல்லா
ஆண்டிப்பயல்கட்கீந்தாய் பழனிச்செட்டி
பஞ்சையாய்ச்செய்தானே பழனிச்செட்டி யையோ
பாவமேபாவமே பழனிச்செட்டி
கெஞ்சினேனேயுனைப் பழனிச்செட்டி யதைக்
கெட்டிசெய்கெட்டிசெய் பழனிச்செட்டி
தஞ்சநீதஞ்சநீ பழனிச்செட்டி யொல்லை
தனந்தாநடனீ பழனிச்செட்டி. (கஅஎ)

வித்துவானாயிருந்தும் பழனிச்செட்டி காள
மேகமுதலானோர்கள் பழனிச்செட்டி
பத்தியுன்பாலின்றியே பழனிச்செட்டி விலைப்
பரத்தையர்க்காட்பட்டாரே பழனிச்செட்டி
அத்தையுங்கேட்டல்லவோ பழனிச்செட்டி யுன்பால்
அடைக்கலமாயோடிவந்தேன் பழனிச்செட்டி
பித்தன்மகனே பழனிச்செட்டி யந்தப்
பிணக்கறுத்துநிதிதா பழனிச்செட்டி. (௧௮௮)

கோபத்தைநீக்கினேன் பழனிச்செட்டி யுனைக்
கும்பிடவந்தவன்றே பழனிச்செட்டி
பாவத்தைநீக்கினேன் பழனிச்செட்டி யுன்
பத்தனாய்வந்தபின் பழனிச்செட்டி
ஆபத்துக்குதவிசெய் பழனிச்செட்டி யந்த
அருமையான்மறந்திடேன் பழனிச்செட்டி
நீபத்தாரணிபுயா பழனிச்செட்டி யொல்லை
நிதிதாகடனீ பழனிச்செட்டி. (௧௮௯)

பாலனென்றாலென்ன பழனிச்செட்டி யுன்றன்
பாதமேநம்பினேன் பழனிச்செட்டி
சீலஞானமுற்றார் பழனிச்செட்டி யிளஞ்
சேயென்றாலும்பெரியோர் பழனிச்செட்டி
கோலமிகவுடையாய் பழனிச்செட்டி ஞானக்
கும்பமுனிகுரவா பழனிச்செட்டி
சாலவும்பெரியோய் பழனிச்செட்டி நிதி
தாவொல்லைகடனீ பழனிச்செட்டி. (௧௯௦)

கொஞ்சநிதிகொடுத்தாய் பழனிச்செட்டி தமிழ்க்
கூறறியாத்தாதைக்குப் பழனிச்செட்டி
விஞ்சுமுன்கவிஞனான் பழனிச்செட்டி நிதி
மிகவொல்லைதாதா பழனிச்செட்டி
பஞ்சையருக்கீந்தென்ன பழனிச்செட்டி பொல்லா
பாமரருக்கீந்தென்ன பழனிச்செட்டி
தஞ்சமென்றேற்கீவதுதான் பழனிச்செட்டி நல்ல
தகைமையதுவாகுமே பழனிச்செட்டி. (௧௯௧)

போக்கிலிக்குப்பத்துலெட்சம் பழனிச்செட்டி நீ
பொன்னேன்கொடுத்தாய் பழனிச்செட்டி
பாக்கியவானேநீ பழனிச்செட்டி யவனைப்
பாடச்சொல்லேயுன்னைப் பழனிச்செட்டி

திக்கண்ணன் மகனே பழனிச்செட்டி யெற்குத்
திருவொல்லைமிகத்தா பழனிச்செட்டி
வாக்கியம் பொய்யிலாப் பழனிச்செட்டி யென்றன்
வண்டமிழ்ப்பிரபுவே பழனிச்செட்டி. (ககூஉ)

ஈயாவுலுத்தற்குப் பழனிச்செட்டி பணம்
என்னத்துக்கீந்தாய் பழனிச்செட்டி
வாயா லோதுக பழனிச்செட்டி யில்லையேல்
வைவேன்வைவேன் பழனிச்செட்டி
தாயாமுறவே பழனிச்செட்டி யென்
றமிழுக்குப்பிரபுவே பழனிச்செட்டி
ஓயாக்கொடையானே பழனிச்செட்டி நிதி
உதவொல்லைநடனீ பழனிச்செட்டி. (ககூ௩)

சம்பளத்துக்கென்பாற் பழனிச்செட்டி முன்
தானுற்றபயல்கட்குப் பழனிச்செட்டி
அம்பொன்மிக்கீந்தாயே பழனிச்செட்டி யெனக்
களைகைநிதியொல்லைதா பழனிச்செட்டி
உம்பர்தங் கோவே பழனிச்செட்டி சொல்வது
ஒழுங்குத்தப்போ சொல் பழனிச்செட்டி
அம்பலவன் மைந்தா பழனிச்செட்டி திரு
ஆவினன் குடியாய் பழனிச்செட்டி. (ககூ௪)

மானத்தை யினி விட்டேன் பழனிச்செட்டி பொல்லா
மனத்தையுன்பாலீந்தேன் பழனிச்செட்டி.
ஞானத்தை யெனக்குத்தா பழனிச்செட்டி யொல்லை
நன்னிதி மிகவுந்தா பழனிச்செட்டி
வானத்தவர்க்கின்பே பழனிச்செட்டி தில்லை
மன்றாடி மகனே பழனிச்செட்டி
கானக்குறத்தியைப் பழனிச்செட்டி முன்னங்
களவுசெய் சேவகா பழனிச்செட்டி. (ககூ௫)

மாதவரிவரென்றே பழனிச்செட்டி பொன்னுள்ள
மடையர்களுணரார் பழனிச்செட்டி
பாதகரீயினும் பழனிச்செட்டி யந்தப்
பரமர்கைத்தீண்டாரே பழனிச்செட்டி
ஆதலாலல்லவோ பழனிச்செட்டி யெனக்
கம்பொன்மிகத்தாவென்றே பழனிச்செட்டி
ஓதினேன் செந்தமிழ் பழனிச்செட்டி யொல்லை
உதவுவாய் நடனீ பழனிச்செட்டி. (ககூ௬)

அவதூத சாமிக்குப் பழனிச்செட்டி செவ்
வரம்பைக் கனிவேண்டும் பழனிச்செட்டி
சிவகிரியுடையானே பழனிச்செட்டி யென்
செந்தமிழ்ப்பிரபுவே பழனிச்செட்டி
தவரேவலனே பழனிச்செட்டி மிகவுந்
தானிதியொல்லைதா பழனிச்செட்டி
நவதனவடிவே பழனிச்செட்டி தில்லை
நடராசன் மகனே பழனிச்செட்டி. (கசுஎ)

திதிகர்த்தாமேற் பழனிச்செட்டி தமிழ்
செப்புவனோ நான் பழனிச்செட்டி
நிதிகர்த்தாவே பழனிச்செட்டி யெற்கு
நீதான்றிதிகர்த்தா பழனிச்செட்டி
விதியைச் சிறைவைத்த பழனிச்செட்டி யொல்லை
மிகவுநன்னிதிதா பழனிச்செட்டி
பதிபலவுடையாய் பழனிச்செட்டி தில்லைப்
பதிநடன் மகனே பழனிச்செட்டி. (கசுஅ)

தடிகையிலேதுக்குப் பழனிச்செட்டி யென்
தாய்மாமன் முறைமைக்கோ பழனிச்செட்டி
மிடியாதித்துன்பத்தைப் பழனிச்செட்டி தூர
வெருட்டியெனைக்காக்கவோ பழனிச் செட்டி
குடியடிமை நானல்லோ பழனிச்செட்டி யெங்கள்
குலதெய்வநீயல்லோ பழனிச்செட்டி
முடிமன்னர் வணங்கிடும் பழனிச்செட்டி யொல்லை
முதலீ நடனீ பழனிச்செட்டி. (கசுகூ)

குட்டித்தகர் வெட்டோம் பழனிச்செட்டி நாங்கள்
குசத்தெய்வங் கும்பிடோம் பழனிச்செட்டி
மட்டித்தெய்வங்களைப் பழனிச்செட்டி யென்சிறு
மதலையுமதிப்பானோ பழனிச்செட்டி
கட்டித்தேனிருக்கையிற் பழனிச்செட்டி பொல்லாக்
கடுவுண்டு சாவானேன் பழனிச்செட்டி
செட்டித் தெய்வமே பழனிச்செட்டி யொல்லை
திருத்தாநடனீ பழனிச்செட்டி. (உ00)

சல்லியுங்கொடுப்பேனோ பழனிச்செட்டி பொல்லாச்
சண்டாளப்பயல்கட்குப் பழனிச்செட்டி
இல்லையென்னுமலே பழனிச்செட்டி மென்ன
இதமாக வேய்ப்பனே பழனிச்செட்டி

நல்ல பிரபுவென்றாற் பழனிச்செட்டி தில்லை
நடேசன் மகவென்பேன் பழனிச்செட்டி
ஒல்லையில் நிதிதா பழனிச்செட்டி நல்லோர்க்
குதவிமகிழ்ந்திடப் பழனிச்செட்டி. (உ0க)

அந்தணர் குலக்கிளியைப் பழனிச்செட்டி தம
தன்னையெனுமல்ல பழனிச்செட்டி
சொந்த மனைவியைப்போற் பழனிச்செட்டி நிதந்
தோய்ந்த சண்டாளருக்குப் பழனிச்செட்டி
எந்த நினைவினாலே பழனிச்செட்டி தனம்
ஈந்தாய்நீயையோ பழனிச்செட்டி
சிந்திப்பேனுனைநான் பழனிச்செட்டி யொல்லை
நிதிதாநடனீ பழனிச்செட்டி. (உ0உ)

மன்னன்கு முனனுக்கும் பழனிச்செட்டி நன்றாய்
வழங்குங் கர்னனுக்கும் பழனிச்செட்டி
பன்னுசெய்தக் காதிக்கும் பழனிச்செட்டி பனை
பாலித்தநல்லோகீர்த்தி பழனிச்செட்டி
அன்னவர்கட் கீந்ததற்காப் பழனிச்செட்டி யுனக்
கநேகவந்தனஞ்செய்தேன் பழனிச்செட்டி
பொன்னெனக் கொல்லைதா பழனிச்செட்டி யறம்
புரிந்திடநடனீ பழனிச்செட்டி. (உ0௩)

தனமிகவிருந்தாற் பழனிச்செட்டி பயல்கள்
சாமிநீ யென்பார் பழனிச்செட்டி
கனமதுகுறைந்தாற்பழனிச்செட்டி பேசக்
காரியமேதென்பார் பழனிச்செட்டி
மூனநன்றி யெண்ணார் பழனிச்செட்டி யந்த
மூர்க்கருறவைவிட்டேன் பழனிச்செட்டி
இனநீதானினிப் பழனிச்செட்டி நிதி
ஈயொல்லைநடனீ பழனிச்செட்டி. (உ0௪)

ஆட்டு மாமிசம் பழனிச்செட்டி யெனக்
காகாதாகாது பழனிச்செட்டி
வீட்டிலுள்ளோர்களும் பழனிச்செட்டி யதை
விரும்பார்கள் விரும்பார்கள் பழனிச்செட்டி
கேட்டாலுங் கொடுக்காதே பழனிச்செட்டி யுன்னைக்
கேலிபண்ணிவைவேன் பழனிச்செட்டி
ஓட்டாண்டிமகனே பழனிச்செட்டி நிதி
உதவொல்லையுவந்தே பழனிச்செட்டி. (உ0௫)

கோழி மாமிசம் பழனிச்செட்டி யிங்குக்
 கூறுதே கூறுதே பழனிச்செட்டி
ஆழி மீனும் பழனிச்செட்டி நமக்
 காகாதாகாது பழனிச்செட்டி
வாழைக்கனியென்றாற் பழனிச்செட்டி தினம்
 வரட்டும் பூசைக்குப் பழனிச்செட்டி
ஏழையேன் முகம் பார்த்தே பழனிச்செட்டி நிதி
 ஈயொல்லே நடனீ பழனிச்செட்டி. (உ0சு)

பங்குக்கென் கடையிலே பழனிச்செட்டி முன்னம்
 பணம்வாங்கியபயல் பழனிச்செட்டி
வெங்கப்பயல் சொன்னாற் பழனிச்செட்டி நன்றி
 மிகவுங் கெட்டபயல் பழனிச்செட்டி
இங்கெனக்கொருநாள் பழனிச்செட்டி கைமாற்
 றில்லையென்றானே பழனிச்செட்டி
துங்கநடனீபழனிச்செட்டி யெனக்குத்
 தூயநிதியொல்லேதா பழனிச்செட்டி. (உ0எ)

அல்லமாப்பிரபுமைந்தா பழனிச்செட்டி திரு
 ஆவினன்குடியாய் பழனிச்செட்டி
நல்லவருறவே பழனிச்செட்டி யுனே
 நம்பினேன்மிகவும் பழனிச்செட்டி
ஒல்லேயில்நிதிதா பழனிச்செட்டி நான்
 ஊருக்குப்போய்வரப் பழனிச்செட்டி
தில்லேக்குப்போய்வரப் பழனிச்செட்டி யவதூதர்
 சேவையுஞ்செய்யப் பழனிச்செட்டி. (உ0அ)

மறக்காமியர்க்கெட்டார் பழனிச்செட்டி நல்ல
 மாதவர்பாற்காமிநான் பழனிச்செட்டி
அறக்காமியர்க்கெட்டாப் பழனிச்செட்டி நான்
 அறஞ்செயவறக்காமி பழனிச்செட்டி
நறைக்கடம்பணிபுயா பழனிச்செட்டி யெனக்கு
 நன்னிதிமிக்கொல்லேதா பழனிச்செட்டி
சிறக்குங் கீர்த்தியாய் பழனிசசெட்டி தில்லேச்
 சிதம்பரன்மகனே பழனிச்செட்டி. (உ0கூ)

பல்லாக்குக்குள்ளிருந்து பழனிச்செட்டி தூக்கும்
 பயல்கள்கத்தச் செல்லும்போது பழனிச்செட்டி
நல்லோரெதிருற்றாலும் பழனிச்செட்டி யுள்ளிருக்கு
 நாய்க்குசற்றுந்தெரியாதே பழனிச்செட்டி

பொல்லாப்புவந்ததல்லோ பழனிச்செட்டி செல்வம்
பொன்றிவிடுமாதலினுற் பழனிச்செட்டி
உல்லாசமெனக்குவேண்டாம் பழனிச்செட்டி நிதி
உதவொல்லைநடனே பழனிச்செட்டி. (௨௧௦)

எத்தனைநிதியுற்றாலும் பழனிச்செட்டி நான்
இறுமாப்புக்கொள்ளுவேனே பழனிச்செட்டி
புத்திரருங்கொள்ளாரே பழனிச்செட்டி கழனிப்
புண்ணியர்தங்நேசத்தாற் பழனிச்செட்டி
அத்தப்போக்கிலிப்பயல்கள் பழனிச்செட்டி தனங்கொஞ்சம்
அடைந்தாலிறுமாப்பார்கள் பழனிச்செட்டி
மெத்தநிதியொல்லைதா பழனிச்செட்டி தில்லை
மேவுநடன்மகனே பழனிச்செட்டி. (௨௧௧)

பாதகர்கடையிலே பழனிச்செட்டி யென்
பாலர்கைபழகச்செல்லார் பழனிச்செட்டி
ஆதலாற்கடைவைக்கப் பழனிச்செட்டி யொல்லையில்
அம்பொன்கோடிதாதா பழனிச்செட்டி
தாதைமுன்னோர் நாள்முதலாய்ப் பழனிச்செட்டி நாங்கள்
தனிக்கடைக்காரரல்லோ பழனிச்செட்டி
ஈதுனக்குத்தெரியாதோ பழனிச்செட்டி யென
திட்டனேநடனே பழனிச்செட்டி. (௨௧௨)

அற்பமாயளித்தாற் பழனிச்செட்டி யன்பால்
அதைவாங்குவனோநான் பழனிச்செட்டி
கற்பகக்காவே பழனிச்செட்டி யெனக்குக்
கனகமிக்கொல்லைதா பழனிச்செட்டி
நற்புண்ணியவானே பழனிச்செட்டி யுன்னை
நம்பிவந்தேனே பழனிச்செட்டி
சற்புருடர்க்கின்பே பழனிச்செட்டி தில்லைச்
சங்கரன்மகனே பழனிச்செட்டி. (௨௧௩)

மாதரிச்சைதருகிறேன் பழனிச்செட்டி யெனக்கு
வைராக்கியந்தா பழனிச்செட்டி
ஓதுசினந்தருகிறேன் பழனிச்செட்டி யெனக்
கொண்பொறை நீதா பழனிச்செட்டி
ஈதெலாம்வாங்கிப் பழனிச்செட்டி யுன்னை
இறைஞ்சார்க்களித்திடு பழனிச்செட்டி
மாதவருறவே பழனிச்செட்டி நிதி
வழங்கொல்லைநடனே பழனிச்செட்டி. (௨௧௪)

ஆயர்மனையிலே பழனிச்செட்டி யுன
தம்மான்செய்ததைப் பழனிச்செட்டி
வாயாற்சொல்லவோ பழனிச்செட்டி பொன்னை
வழங்குவிரைவிலே பழனிச்செட்டி
நேயர்க்கெல்லாமிதைப் பழனிச்செட்டி நான்
நித்தியஞ்சொல்லுவேன் பழனிச்செட்டி
தாயினுமினியாய் பழனிச்செட்டி தில்லைச்
சங்கரன்மகனே பழனிச்செட்டி; (உ௧ரு)

காமிநீயல்லவோ பழனிச்செட்டி குறத்திதன்
காலையும்பிடித்தாயே பழனிச்செட்டி
பூமியெலாமிதைப் பழனிச்செட்டி நான்
புகலுவனேயினிப் பழனிச்செட்டி
நேமியான்மருகனே பழனிச்செட்டி மெத்த
நிதியெனக்கொல்லைதா பழனிச்செட்டி
சாமியல்லவோநீ பழனிச்செட்டி தில்லைச்
சங்கரன்மகனே பழனிச்செட்டி. (உ௧௬)

பாண்டியனீயல்லோ பழனிச்செட்டி சவுந்தர
பாண்டியன்மகனல்லோ பழனிச்செட்டி
ஆண்டவனாகிய பழனிச்செட்டி யெனக்
காடகமொல்லைதா பழனிச்செட்டி
வேண்டியபேர்க்கெல்லாம் பழனிச்செட்டி நீ
மிகநிதியளித்தாயே பழனிச்செட்டி
ஈண்டெனக்கீயாததேன் பழனிச்செட்டி யுனக்
கிரக்க மில்லையோ பழனிச்செட்டி. (உ௧௭)

நிந்தாத்துதிக்கவி பழனிச்செட்டி யுன்மேல்
நிதநான்புகலுவேன் பழனிச்செட்டி
தந்தாற்குறையென்ன பழனிச்செட்டி கோடி
தனந்தாவொல்லைநீ பழனிச்செட்டி
வந்தாற்குறையென்ன பழனிச்செட்டி யென்பால்
வழக்குண்டோவாநீ பழனிச்செட்டி
கந்தாமுருகா பழனிச்செட்டி தில்லைக்
கானவன்மகனே பழனிச்செட்டி. (உ௧அ)

விதியுனக்கில்லையோ பழனிச்செட்டி யொரு
வேடிச்சிகணவா பழனிச்செட்டி
நதிபுத் திரனே பழனிச்செட்டி யுன்னை
நம்பிவந்தேனான் பழனிச்செட்டி

தநியிதுதநியிது பழனிச்செட்டி கோடி
தனந்தாவொல்லைநீ பழனிச்செட்டி.
கதிநீதானெனக்குப் பழனிச்செட்டி தில்லைக்
கானவன்மகனே பழனிச்செட்டி. (௨௧௯)

நட்டமுனக்கென்ன பழனிச்செட்டி யெனக்கு
நன்னிதியளித்தாற் பழனிச்செட்டி
திட்டத்திற்குறையுமோ பழனிச்செட்டி மனைவியர்
தேட்டினிற்குறையுமோ பழனிச்செட்டி
துட்டர்கட் கீந்தென்ன பழனிச்செட்டி யுன்னைத்
துதிக்குமெற்கொல்லதா பழனிச்செட்டி
கட்டம கற்றுவாய் பழனிச்செட்டி தில்லைக்
கானவன் மகனே பழனிச்செட்டி. (௨௨0)

வணக்கமாய்ச் சொல்லுகிறேன் பழனிச்செட்டி யொரு
வாசகங் கேட்பாய் பழனிச்செட்டி
பணக்காரருக்கெல்லாம் பழனிச்செட்டி நீ
பாலித்ததன்றோ பழனிச்செட்டி
இணக்கமதாயுன்மேற் பழனிச்செட்டி தமிழ்
இசைக்கிறேனிதிதா பழனிச்செட்டி
கணக்குண்டு விரைந்தீயப் பழனிச்செட்டி தில்லைக்
கானவன் மகனே பழனிச்செட்டி. (௨௨௧)

முனிவன் செவியிலே பழனிச்செட்டி முன்ன
மொழிந்தாயே மொழிந்தாயே பழனிச்செட்டி
தனிமந்திரமோ பழனிச்செட்டி யெற்குத்
தானதைச் சொல்லு நீ பழனிச்செட்டி
இனியாயினுந்தான் பழனிச்செட்டி யருள்செய்
திருநிதியொல்லைதா பழனிச்செட்டி
கனிவாயானே பழனிச்செட்டி தில்லைக்
கானவன் மகனே பழனிச்செட்டி. (௨௨௨)

பேசவாய் வலிக்குமோ பழனிச்செட்டி யுன்றன்
பெருமைதானேவிது பழனிச்செட்டி
ஆசாரங் குறையுமோ பழனிச்செட்டி யார்க்கும்
அச்சமுனக்குண்டோ பழனிச்செட்டி
தாசர்கண் முனிவாரோ பழனிச்செட்டி யென்றன்
சங்கையைத் தீரின்று பழனிச்செட்டி
காசெனக் கொல்லைதா பழனிச்செட்டி தில்லைக்
கானவன் மகனே பழனிச்செட்டி. (௨௨௩)

தாதாநிதி யொல்லை பழனிச்செட்டி மெத்தச்
சமர்த்தெல்லாம் பண்ணாதே பழனிச்செட்டி
நீதானன்றியே பழனிச்செட்டி யெற்கு
நிதியாரளிப்பார் பழனிச்செட்டி
வேதா வணங்கும் பழனிச்செட்டி யான்
விளம்புந்த தமிழெல்லாம் பழனிச்செட்டி
காதா கேட்கிலை பழனிச்செட்டி தில்லைக்
கானவன் மகனே பழனிச்செட்டி. (௨௨௪)

நம்பி வந்தேனுன் பழனிச்செட்டி யென்னை
நட்டாற்றில் விடலாமோ பழனிச்செட்டி
தும்பி துணைவனே பழனிச்செட்டி யுன்னைத்
தோத்திரஞ்செய்தேனே பழனிச்செட்டி
வம்பு செய்யாதே பழனிச்செட்டி யறம்
வழங்கிட நிதிதா பழனிச்செட்டி
கம்பலை தீர்த்தாள் பழனிச்செட்டி தில்லைக்
கானவன் மகனே பழனிச்செட்டி. (௨௨௫)

கொலை கார னீயல்லோ பழனிச்செட்டி சூரன்
குடியைக்கெடுத்தாயே பழனிச்செட்டி
மலையேறி வந்தார்க்குப் பழனிச்செட்டி மறு
மாதரிச்சை கெடுத்தாயே பழனிச்செட்டி
பலகாலுந்தொழுதோரைப் பழனிச்செட்டி யவர்
பவமெல்லாங் கெடுத்தாயே பழனிச்செட்டி
கலையீவேனிதிதா பழனிச்செட்டி தில்லைக்
கானவன் மகனே பழனிச்செட்டி. (௨௨௬)

பயமோவெனக்கினிப் பழனிச்செட்டி மெய்ப்
பத்தனாய் வந்தபின் பழனிச்செட்டி
நயமெனக் களியின்று பழனிச்செட்டி யிப்பி
நல்வாணிபத்தினிற் பழனிச்செட்டி
சுயவடிவான பழனிச்செட்டி யுன்னைத்
தோத்திரஞ்செய்தேனுன் பழனிச்செட்டி
கயவரைத் துதிப்பேனோ பழனிச்செட்டி தில்லைக்
கானவன் மகனே பழனிச்செட்டி. (௨௨௭)

பழிபோடுவேனுன் பழனிச்செட்டி யினிப்
பட்டினியிருப்பேன் பழனிச்செட்டி
வழியெனக்கோதொல்லை பழனிச்செட்டி யிப்பி
வாணிபஞ்செய்திடப் பழனிச்செட்டி

விழியீராறுடைப் பழனிச்செட்டி கும்ப
மீன மதனிற் பழனிச்செட்டி
குழிவரச் செய்திடு பழனிச்செட்டி தில்லைக்
கூத்தாடி மகனே பழனிச்செட்டி. (உஉஅ)

பத்தினிமகனென்றாற் பழனிச்செட்டி யெற்குப்
பணமிகவொல்லைதா பழனிச்செட்டி
சத்தியவானென்றாற் பழனிச்செட்டி யிந்தத்
தருணத்திலுதவிசெய் பழனிச்செட்டி
அத்தனீதானே பழனிச்செட்டி யெனக்
கன்னை நீதானே பழனிச்செட்டி
குத்திரர்க்கரியாய் பழனிச்செட்டி தில்லைக்
கூத்தாடி மகனே பழனிச்செட்டி. (உஉகூ)

அறத் தியாகனே பழனிச்செட்டி நம்பும்
அடியார்க்கெளியாய் பழனிச்செட்டி
பிறத்தியானோ நான் பழனிச்செட்டி சொந்தப்
பிள்ளையல்லோ நான் பழனிச்செட்டி
மறத்திறோர்க்கீந்தென்ன பழனிச்செட்டி யெற்கு
மாழைமிக்கொல்லைதா பழனிச்செட்டி
குறத்திதன் கணவா பழனிச்செட்டி தில்லைக்
கூத்தாடி மகனே பழனிச்செட்டி. (உகூ0)

படுத்தடி பண்ணாதே பழனிச்செட்டி மிகும்
பாக்கியவானே பழனிச்செட்டி
அடுத்தெனைக் கெடுக்காதே பழனிச்செட்டி யுனக்
கபய மபயம் பழனிச்செட்டி
தடுத்தாட்கொண்டாயே பழனிச்செட்டி நிதி
தா வொல்லையெளியேற்குப் பழனிச்செட்டி
கொடுத்தாற் குறைவுண்டோ பழனிச்செட்டி தில்லைக்
கூத்தாடி மகனே பழனிச்செட்டி (உகூக)

நாசமுனக்கில்லைப் பழனிச்செட்டி நீ
நல்லாயிருப்பாய் பழனிச்செட்டி
வாசிப்பாய் நிதி தா பழனிச்செட்டி படு
வழக்கினிப்பண்ணாதே பழனிச்செட்டி
பேசவாய் வலிக்குமோ பழனிச்செட்டி நிரம்பப்
பெருமை நீ பண்ணாதே பழனிச்செட்டி
கூசாமற் பேசுவாய் பழனிச்செட்டி தில்லைக்
கூத்தாடி மகனே பழனிச்செட்டி (உகூஉ)

பொய்யுரை தெரியாப் பழனிச்செட்டி மிகப்
புண்ணியவானே பழனிச்செட்டி
நையவுமுறையோ பழனிச்செட்டி யெற்கு
நன்னிதி மிகத்தா பழனிச்செட்டி
பைய வாகிலும் பழனிச்செட்டி பேசப்
பயமாயிருந்தாற் பழனிச்செட்டி
குய்யமாப்பேசுவா பழனிச்செட்டி தில்லைக்
கூத்தாடிமகனே பழனிச்செட்டி. (உ௬௩)

சற்றுமிரங்காததென் பழனிச்செட்டி யுனக்குச்
சரிதானோவிது பழனிச்செட்டி
பற்றெனவந்தேனே பழனிச்செட்டி யெற்குப்
பணமிக்கொல்லைதா பழனிச்செட்டி
சுற்றநீதானென்று பழனிச்செட்டி வாயால்
தோசதிரஞ்செய்தேனே பழனிச்செட்டி
கொற்றவரேறே பழனிச்செட்டி தில்லைக்
கூத்தாடிமகனே பழனிச்செட்டி. (உ௬௪)

ஆபத்துக்குதவிசெய் பழனிச்செட்டி பின்
பளித்தென்னபலனுக்கும் பழனிச்செட்டி
பாபத்துக்கீவேனோ பழனிச்செட்டி யறம்
பண்ணநிதியொல்லைதா பழனிச்செட்டி
நீபத்தார்மார்பனே பழனிச்செட்டி யுன்னை
நித்தமுந்துதிக்கிறேன் பழனிச்செட்டி
கோபத்தோர்க்கரியானே பழனிச்செட்டி தில்லைக்
கூத்தாடிமகனே பழனிச்செட்டி. (உ௬௫)

வஞ்சகம்பண்ணாதே பழனிச்செட்டி கோடி
மாழைதாவறஞ்செயப் பழனிச்செட்டி
பஞ்சமோவுனக்குத்தான் பழனிச்செட்டி மெத்தப்
பணக்காரன்றானே பழனிச்செட்டி
அஞ்சலெனச்சொன்னாற் பழனிச்செட்டி வாய்
அதுதானோகுமோ பழனிச்செட்டி
கொஞ்சமுந்தயையின்றே பழனிச்செட்டி தில்லைக்
கூத்தாடிமகனே பழனிச்செட்டி. (உ௬௬)

பாடினேனேமிகப் பழனிச்செட்டி யுன்னைப்
பணிந்தேனேமிகப் பழனிச்செட்டி
வாடினேனேமிகப் பழனிச்செட்டி யென்றன்
மனக்குறைதீரின்று பழனிச்செட்டி

தேடியலையாமலே பழனிச்செட்டி யிப்பிச்
சிலாபந்தன்னிலே பழனிச்செட்டி
கோடிநிதியொல்லதா பழனிச்செட்டி தில்லைக்
கூத்தாடிமகனே பழனிச்செட்டி. (உ௩௭)

யோசனீபண்ணாதே பழனிச்செட்டி யிது
முறையல்லசொன்னேனான் பழனிச்செட்டி
காசுமிக்கொல்லதா பழனிச்செட்டி மெத்தக்
கடுஞ்செட்டுப்பண்ணாதே பழனிச்செட்டி
வாசகம்பலசொன்னேன் பழனிச்செட்டி நீயொன்றும்
வதிற்சொல்லவில்லையே பழனிச்செட்டி
ஏசுவேனுன்னைநான் பழனிச்செட்டி தில்லை
ஈசன்மகனே பழனிச்செட்டி. (உ௩௮)

நல்லவனென்றே பழனிச்செட்டி யுன்னை
நம்பிவந்தேனான் பழனிச்செட்டி
அல்லல்செய்யாதே பழனிச்செட்டி யிது
அழகல்லசொன்னேன் பழனிச்செட்டி
சொல்லவாய்வலிக்குமோ பழனிச்செட்டி வதிற்
சொல்லிநிதியொல்லதா பழனிச்செட்டி
இல்லையென்றாதே பழனிச்செட்டி தில்லை
ஈசன்மகனே பழனிச்செட்டி. (உ௩௯)

கனிவாயோதப் பழனிச்செட்டி யென்பாற்
கருணையின்றேனும் பழனிச்செட்டி
முனிவாயேனும் பழனிச்செட்டி யொரு
மொழிதான்கூறே பழனிச்செட்டி
நனிவாடினேனே பழனிச்செட்டி யிது
ஞாயமோஞாயமோ பழனிச்செட்டி
இனியொல்லநிதிதா பழனிச்செட்டி தில்லை
ஈசன்மகனே பழனிச்செட்டி. (உ௪0)

சரணஞ்சரணம் பழனிச்செட்டி யெனக்குத்
தனமிகவொல்லதா பழனிச்செட்டி
மரணமுற்றாலும் பழனிச்செட்டி யுன்னை
மறக்கமாட்டேனே பழனிச்செட்டி
திரணமல்லோநிதி பழனிச்செட்டி யெனக்குச்
செய்புபகாரம் பழனிச்செட்டி
இரணந்தீர்த்திடு பழனிச்செட்டி தில்லை
ஈசன்மகனே பழனிச்செட்டி. (உ௪௧)

நன்றீவாயெனப் பழனிச்செட்டி யுன்னை
நம்பிவந்தேனே பழனிச்செட்டி
குன்றெனுங்குணத்தாய் பழனிச்செட்டி யெனக்குக்
கொடுத்தாற்குறையுமோ பழனிச்செட்டி
ஒன்றும்பேசாயேன் பழனிச்செட்டி நான்
உய்விதமெவ்விதம் பழனிச்செட்டி
இன்றைக்கேநிதிதா பழனிச்செட்டி தில்லை
ஈசன்மகனே பழனிச்செட்டி. (உசஉ)

உன்முகம்பார்த்தே பழனிச்செட்டி நான்
உரைத்தேனேதமிழ் பழனிச்செட்டி
நன்மணியென்றுனைப் பழனிச்செட்டி முற்றும்
நம்பினேன்வந்தேன் பழனிச்செட்டி
பொன்மிகவொல்லைதா பழனிச்செட்டி யறம்
புரிவாயெனக்குப் பழனிச்செட்டி
என்முகம்பார்நீ பழனிச்செட்டி தில்லை
ஈசன்மகனே பழனிச்செட்டி. (உசங)

சிட்டருக்களிப்பான் பழனிச்செட்டி யெற்குத்
திருமிகவொல்லைதா பழனிச்செட்டி
துட்டருக்கரியாய் பழனிச்செட்டி யுன்
தொண்டருக்கெளியாய் பழனிச்செட்டி
கட்டத்தைத்தீர்ஈன்று பழனிச்செட்டி சற்றே
கடைக்கண்பார்ப்பாய் பழனிச்செட்டி
இட்டநீதானே பழனிச்செட்டி தில்லை
ஈசன்மகனே பழனிச்செட்டி. (உசச)

கடன்காப்பதுனக்கென்றும் பழனிச்செட்டி யின்னங்
கருணைசெய்யாததென் பழனிச்செட்டி
அடஞ்செய்யாதேநீ பழனிச்செட்டி யீ
தழகல்லசொன்னேன் பழனிச்செட்டி
நடராசன்மகனே பழனிச்செட்டி முற்றும்
நம்பினேன்நம்பினேன் பழனிச்செட்டி
இடம்பொருளேவலும் பழனிச்செட்டி யொல்லை
ஈந்தருள்செயவேண்டும் பழனிச்செட்டி. (உசரு)

சேமமாநினையுற்றேன் பழனிச்செட்டி துன்பஞ்
சிறிதுமுனலாமோ பழனிச்செட்டி
பாமரர்க்கீந்தென்ன பழனிச்செட்டி நீ
பத்தருக்கெளியனன்றோ பழனிச்செட்டி

காமதேனுநிகரும் பழனிச்செட்டி யுன் பாற்
கைகட்டுஞ்சேவகர் பழனிச்செட்டி
ஏமத்துக்குப் பஞ்சமோ பழனிச்செட்டி நில்லை
ஈசன் மகனே பழனிச்செட்டி. (உசசு)

வாவாவென்பாற் பழனிச்செட்டி யுன்பால்
வழக்குண்டு வாவா பழனிச்செட்டி
ஆவாயீதென்ன பழனிச்செட்டி சும்மா
அஞ்சாதேவாவா பழனிச்செட்டி
பூவாம்பதத்தாய் பழனிச்செட்டி மிகப்
புண்ணியவானே பழனிச்செட்டி
ஈவாய் நிதியொல்லை பழனிச்செட்டி நில்லை
ஈசன் மகனே பழனிச்செட்டி. (உசஎ)

கலையுணர் மாதவரைப் பழனிச்செட்டி
யிங்குக் காணேன் காணேன் பழனிச்செட்டி
விலைமாதரென்றுற் பழனிச்செட்டி யையோ
மிகவு மலிவாம் பழனிச்செட்டி
நலமுறுந் தவத்தோர் பாற் பழனிச்செட்டி கழனி
நகர்க்கியானேக வேண்டும் பழனிச்செட்டி
தலைவள்ளலாகிய பழனிச்செட்டி நிதி
தாவொல்லை நடனீ பழனிச்செட்டி. (உசஅ)

ஆண்டினிலொருமுறை பழனிச்செட்டி யுன்பால்
அகத்தியம் வருகிறேன் பழனிச்செட்டி
காண்டகுந்தவர்களைப் பழனிச்செட்டி யிங்கே
கலந்திடக்காணேனே பழனிச்செட்டி
மாண்டிடாதவர்கள் பாற் பழனிச்செட்டி கழனி
மாநகர்க்கேகவேண்டும் பழனிச்செட்டி
தாண்டவன் மகனே பழனிச்செட்டி யொல்லை
தாதா நிதிமிகப் பழனிச்செட்டி. (உசகு)

சிதம்பரத்துக்கேகப் பழனிச்செட்டி மிகச்
சிரத்தை யெனக்குண்டு பழனிச்செட்டி
இதம் பெறுமாதவர் பழனிச்செட்டி யங்
கிருப்பாரனேகர் பழனிச்செட்டி
நிதமவரோடுற்றுற் பழனிச்செட்டி யையோ
நீக்கலாமே பவம் பழனிச்செட்டி
சதமென நம்பினேன் பழனிச்செட்டி யொல்லை
தனந்தா நானேன் செல்லப் பழனிச்செட்டி. (உருo)

கோயிலூருக்குச் செல்லப் பழனிச்செட்டி மனம்
கொள்ளுது பேராசை பழனிச்செட்டி
தூயவர் தம்மை விடப் பழனிச்செட்டி யெற்குச்
சொந்தம் வேறுண்டோ பழனிச்செட்டி
தாயினுமினியார் பழனிச்செட்டியவர்
தாமல்லோ நற்றமர் பழனிச்செட்டி
வாயுபகாரஞ்செய் பழனிச்செட்டி நிதி
வழங்கொல்லை நடனீ பழனிச்செட்டி. (௨௫௧)

கட்டளையொன்றுன் பாற் பழனிச்செட்டி வெகு
கனமாவைத்திடப் பழனிச்செட்டி
இட்ட மெனக்குண்டு பழனிச்செட்டி யொல்லை
யீவாய் நிதி மிகப் பழனிச்செட்டி
நட்டன் மகனே பழனிச்செட்டி யுன்னை
நம்பி வந்தேனுன் பழனிச்செட்டி
சிட்டர்களுறவே பழனிச்செட்டி முத்துச்
சிலாபத்திலுதவிசெய் பழனிச்செட்டி. (௨௫௨)

கதிவேறில்லையே பழனிச்செட்டி யென்மேற்
கடைக்கண் பார்பார் பழனிச்செட்டி
இதுவரையிலு மென்ன பழனிச்செட்டி சற்று
மிரக்கமில்லாதது பழனிச்செட்டி
திதி முட்டினைத்தான் பழனிச்செட்டி
யின்று தீர்த்திடு நீர்த்திடு பழனிச்செட்டி
நிதியொல்லை யீகுத்தா பழனிச்செட்டி தில்லை
நிருத்தன் மகனே பழனிச்செட்டி. (௨௫௩)

திருநெல்லை மகனே பழனிச்செட்டி தில்லைச்
சிதம்பரன் மகனே பழனிச்செட்டி
மருமலர் மார்பா பழனிச்செட்டி குற
வள்ளிமணாளா பழனிச்செட்டி
ஒருவர் துணை காணேன் பழனிச்செட்டி நா
னுனையலலாமலே பழனிச்செட்டி
தருவாய் நிதிபொல்லை பழனிச்செட்டி மிகச்
சரணஞ் சரணம் பழனிச்செட்டி. (௨௫௪)

வேதியன் மகனே பழனிச்செட்டி மதுரை
மீனாட்சி மகனே பழனிச்செட்டி
சாதிபலவாம் பழனிச்செட்டி யொரு
சச்சிதாநந்தமாம் பழனிச்செட்டி

நீதியுடையாய் பழனிச்செட்டி யெற்கு
நிதிமிகவொல்லைதா பழனிச்செட்டி
கோதிலாப் பிரபுவே பழனிச்செட்டி பொதியின்
குறுமுனி குரவா பழனிச்செட்டி. (உ௫௫)

பலவாஞ்சாதியோ பழனிச்செட்டி யுனைப்
பயந்தாளதானும் பழனிச்செட்டி
அலர்மேல் மங்கைதான் பழனிச்செட்டி யுனக்
கம்மான் மனையல்லோ பழனிச்செட்டி
மலர்வேதனுந்தான் பழனிச்செட்டி சொந்த
மைத்துனனல்லவோ பழனிச்செட்டி
சிலைவில்லான் மகனே பழனிச்செட்டி யெற்குத்
திருமிகவொல்லைதா பழனிச்செட்டி. (உ௫௬)

உன்மலைக்கென்றும் பழனிச்செட்டி நா
னோடிவருவேனே பழனிச்செட்டி
என் மனங்கோயிலாப் பழனிச்செட்டி யெங்
கிருந்தும்பூசிப்பேனே பழனிச்செட்டி
பொன்மிக வொல்லைதா பழனிச்செட்டி தில்லைப்
பொதுவோன் மகனே பழனிச்செட்டி
நன்மன முடையாய் பழனிச்செட்டி யுனை
நம்பினேன் நம்பினேன் பழனிச்செட்டி (உ௫௭)

சேதுவே முதலாகப் பழனிச்செட்டி நல்ல
திருக்காசி வரைக்கும் பழனிச்செட்டி
ஓதுவேனுன் மிகப் பழனிச்செட்டி தியாகத்
துதாரனென்றுனையே பழனிச்செட்டி
ஓதினர் போலவே பழனிச்செட்டி யெற்கு நீ
செய் நன்றி மறப்பேனோ பழனிச்செட்டி
மாதவ குறவே பழனிச்செட்டி பொன்மிக
வழங்கொல்லை நடனே பழனிச்செட்டி. (உ௫௮)

பதம் பல சொல்லுவேன் பழனிச்செட்டி யுன்
பன்னிரு செவியுறப் பழனிச்செட்டி
நிதங்கவி சொல்லுவேன் பழனிச்செட்டி யெற்கு
நிதிமிக வொல்லை தா பழனிச்செட்டி
சதமு நின்னடியன்றிப் பழனிச்செட்டி வேறு
தமியனென் காண்கிலேன் பழனிச்செட்டி
சிதம்பரன் மகனே பழனிச்செட்டி வீர
சிங்கக் குட்டி நீயல்லோ பழனிச்செட்டி. (உ௫௯)

சாளை நீயல்லவோ பழனிச்செட்டி தொண்டர்
கற்பகமல்லவோ பழனிச்செட்டி
சாளையல்லலறப் பழனிச்செட்டி யென்
றலைமிசை வைத்தாள்வாய் பழனிச்செட்டி
நாளையென்றுரைப்பது பழனிச்செட்டி கொடைக்கு
நண்பல்ல நண்பல்ல பழனிச்செட்டி
வேளையிதுதான் பழனிச்செட்டி நிதி
விரைந்துதா விரைந்துதா பழனிச்செட்டி (உசு0)

உனதிட்ட மருமையாம் பழனிச்செட்டி யஃ
துற்ற நற்றவருக்குப பழனிச்செட்டி
மனதிட்டப் படிக்குப பழனிச்செட்டி யெல்லா
வளங்களு முண்டாமே பழனிச்செட்டி
எனதிட்டபடிக்குப் பழனிச்செட்டி யொல்லை
இருநிதியளித்தாற் பழனிச்செட்டி
நினதிட்டப்படிக்குப் பழனிச்செட்டி கவி
நிகழ்த்திடுவேனுன் பழனிச்செட்டி. (உசுக)

காரிகை நன்னூல் பழனிச்செட்டி தொல்
காப்பிய முதலாப் பழனிச்செட்டி
சீருறு நூலெல்லாம் பழனிச்செட்டி நன்றாய்த்
தெரிந்தவருனதன்பர் பழனிச்செட்டி
ஏருறுந் தருமத்தைப் பழனிச்செட்டி மதியா
திகழ்ந்த சண்டாளரைப் பழனிச்செட்டி
பாரில் யான் பழித்திடப் பழனிச்செட்டி யொல்லை
பணந்தா நடனீ பழனிச்செட்டி (உசுஉ)

பஞ்சலட்சணமெல்லாம் பழனிச்செட்டி யுன்
பத்தருக்குரித்தல்லோ பழனிச்செட்டி
வஞ்சருக்கிருந்தென்ன பழனிச்செட்டி வேலா
மரம்பழுத்தாற்போற் பழனிச்செட்டி
தஞ்சமெனக்கு நீ பழனிச்செட்டி யொல்லையிற்
றனபதிதனந்தா பழனிச்செட்டி
அஞ்சுமாமுகனருள் பழனிச்செட்டி திவ்ய
ஆறுமுகவனே பழனிச்செட்டி. (உசுங)

அக்கமணியிலே பழனிச்செட்டி யெழி
லாடகங்கலந்தாற் பழனிச்செட்டி
மிக்க புண்ணியமென்று பழனிச்செட்டி சிலர்
விளங்கவுரைப்பரே பழனிச்செட்டி

துக்க மதிகந்தான் பழனிச்செட்டி பொல்லாச்
சோரர்களை திருற்றார் பழனிச்செட்டி
தக்கநிதியொல்லைதா பழனிச்செட்டி யறந்
தான்செய்ய நடனீ பழனிச்செட்டி (உகச)

என்குரு நாதரும் பழனிச்செட்டி முன
மெனக்கு நல்லுத்தரம் பழனிச்செட்டி
பொன்கலப்பின்றியே பழனிச்செட்டி யக்கமணி
பூணச்சொலித்தந்தாரே பழனிச்செட்டி
துன்ப கற்றுந் திருவாயாற் பழனிச்செட்டி என்குரு
சுவாமிசொல்லுக்கிரண்டோ பழனிச்செட்டி
மின் குலவு வேல் பிடித்தோய் பழனிச்செட்டி நிதி
விரைந்துதா நடனீ பழனிச்செட்டி. (உகரு)

புத்திமானே நீ பழனிச்செட்டி மிகப்
புண்ணியவானே பழனிச்செட்டி
சத்தியவானே பழனிச்செட்டி ஞான
சற்குணக்கடலே பழனிச்செட்டி
சித்தியுடையாய் பழனிச்செட்டி தில்லைச்
சிதம்பரன் மகனே பழனிச்செட்டி
அத்தமிக்கொலைதா பழனிச்செட்டி யெனக்
கறஞ்செய்ய வறஞ்செய்யப் பழனிச்செட்டி. (உகசு)

மரும்ம வேண்டாம் பழனிச்செட்டி யினி
வைவேன் சொன்றைற் பழனிச்செட்டி
ஒருமனை தன்னையும் பழனிச்செட்டி நீதா
னுபேக்ஷிக்க வைத்தாயே பழனிச்செட்டி
இருமின்பாகா பழனிச்செட்டி நல்ல
வென்குல தெய்வமே பழனிச்செட்டி
திருமிக வொல்லைதா பழனிச்செட்டி தில்லைச்
சிதம்பரன் மகனே பழனிச்செட்டி. (உகஎ)

உனக்குமாத்திரம் பழனிச்செட்டி நித
முபயமங்கையர் வேண்டும் பழனிச்செட்டி
எனக்கு மாத்திரம் பழனிச்செட்டியோ
ரில்லாளுமுபேட்சையோ பழனிச்செட்டி
நினக்கிதுமுறையென்றாற் பழனிச்செட்டி நான்
நிகழ்த்துவதெங்ஙனே பழனிச்செட்டி
கனக்க நிதியொல்லைதா பழனிச்செட்டி தில்லைக்
கானவன் மகனே பழனிச்செட்டி. (உகஅ)

வைப்பாட்டி யாசையைப் பழனிச்செட்டி யுனை
வாழ்த்தாதார்க்கீவாய் பழனிச்செட்டி
அப்பாவப்பா பழனிச்செட்டி யெனக்
கந்தச் சனியன் வேண்டாம் பழனிச்செட்டி

துப்புவார் காறியே பழனிச்செட்டி கழனித்
தூயவரெல்லோரும் பழனிச்செட்டி
ஒப்பிலாவறஞ்செய்யப் பழனிச்செட்டி நிதி
யுதவொல்லை நடனீ பழனிச்செட்டி. (௨௬௯)

அற்பச்செட்டிப் பயல்களைப பழனிச்செட்டி யுனக்
காகா வுலுத்தரைப் பழனிச்செட்டி
விற்பனமில்லாரைப் பழனிச்செட்டி பொல்லா
வீண்புழுக்கைப்பயல்களைப் பழனிச்செட்டி
கற்பகமாகிய பழனிச்செட்டி யுன்மேற்
கவிசொல்லும் வாயினாற் பழனிச்செட்டி
சொற்பனத்துஞ் சொல்வேனோ பழனிச்செட்டி யொல்லை
தூய்நிதிதா நடனீ பழனிச்செட்டி. (௨௭௦)

சிதம்பர வையாவைப் பழனிச்செட்டி மிகத்
தேடுகின்றதேகண் பழனிச்செட்டி
இதம்பெற நாம் செல்லப் பழனிச்செட்டி விரைந்
தீருவாய் நிதிமிகப் பழனிச்செட்டி
மதம்பொழி துணைவனே பழனிச்செட்டி வள்ளி
மாப்பிள்ளைத்துரையே பழனிச்செட்டி
பதம்பணிசெய்குவேன் பழனிச்செட்டி நடன்
பாலா சீலா பழனிச்செட்டி. (௨௭௧)

வேதாந்த நூலையும் பழனிச்செட்டி யன்பு
மேவுசைவ நூலையும் பழனிச்செட்டி
தீதின்றி நம்புவேன் பழனிச்செட்டி மற்றத்
திருட்டு நூலை நம்பேனே பழனிச்செட்டி
பாதகர்க்கெட்டாப் பழனிச்செட்டி யொல்லை
பாக்கியமெனக்குத்தா பழனிச்செட்டி
பூதியணிமெய்யனே பழனிச்செட்டி தில்லைப்
பொதுவோன் மகனே பழனிச்செட்டி. (௨௭௨)

வேதியரென்றாலும் பழனிச்செட்டி யுன்னை
விரும்பாதார் புலையரே பழனிச்செட்டி
சாதியிழிந்தோ ரெனினும் பழனிச்செட்டி யுனைச்
சார்ந்தவரே மேலோர் பழனிச்செட்டி
பூதியணி பிரபுவே பழனிச்செட்டி யொல்லை
பொருவிலா நிதிதா பழனிச்செட்டி
நீதிமிக வுடையாய் பழனிச்செட்டி தில்லை
நிருத்தன் மகனே பழனிச்செட்டி. (௨௭௩)

கல்லுளி மாலை முற்றிற்று.

ஆகச் செய்யுள் ௨௭௩.

சிவமயம்.

# பொன்மாரியந்தாதி.

## விநாயகர் காப்பு.

சீராரும் பொன்மாரிச் செல்வச் சிவனார்க்குப்
பேராரு மந்தாதி பேசவே - ஏராரும்
வேலவற்கு முன்பிறந்த வேழமுகத் தெம்பெருமான்
காலிணைப்பூந் தாமரையே காப்பு.

## நூல்.

சீர்வாழும் பொன்மாரிச் செலவனே செஞ்சடையில்
நீர்வாழு மெங்க ணிமலனே - பார்வாழ்வி
லாசையுறு வண்ண மடியேனை யாண்டுகொளத்
தேசுடையாய் நீகருணை செய். (௧)

செய்ய திருவடியென் சென்னிமிசை வைத்தாள
ஐய வருள்செய் தருளுவாய் - கையிலகு
சூலததாய் பொன்மாரிச் சொர்னேசா வானவர்க்கா
வாலத்தை யுண்டவரு ளால். (௨)

ஆல மிடற்றெம் மமுதே யடியவர்க்காக்
காலன் றனைக்காய்ந்த காலனே - பாலனே
னின்னம் பவப்பிணியா லேங்காமற் பொன்மாரி
யன்னையனை யாயின் பருள். (௩)

அருளே வடிவாய்வந் தாண்டவரு ணேசா
தெருளே வடிவாஞ் சிவமே - யிருளேயுற்
றேங்காமற் பொன்மாரி யீசனே நாயேற்குத்
தூங்காமற் றூங்குநெறி சொல். (௪)

சொல்லற் கரிய சுகக்கடலே நாயினே
னல்லற் பொருந்தி யலையாமற் - கல்லைவில்லாச்
செய்யும்பொன் மாரிச் சிவனேநின் சீரருளா
லையமிலா ஞான மருள். (௫)

அருட்கடலே யென்று ரமுதே யடியா
ரிருட்கடலுக் கோர்புணையா மின்பே - மருட்கடலுற்
றேங்காமற் பொன்மாரி யீசனே நாயேனுக்
கோங்காரத் துட்பொருளை யோது. (௬)

ஓதியுன்னி யன்பா லுனைவணங்கு மன்பர்பவப்
பீதி யறுக்கும் பெருமானே - யாதுமுனைப்
போற்று தவனேனும் பொன்மாரி யாயருளான்
மாற்றுவாய் மாதர் மயல். (௭)

மாதர்மயல் கொண்டலைந்து வாடாது நாயேனு
மாதியே பொன்மாரி யையனே - கோதிலின்ப
சாகரத்துண் மூழ்கிச் சலிப்பின்றி வாழ்வதற்கு
மாகருணை செய்வாய் மகிழ்ந்து. (௮)

மகிழ்ந்துநான் பேரின்ப வாரிதியின் மூழ்க
விகழ்ந்துமட வாராசை யெல்லாஞ் - சகந்தனிலோர்
பற்றின்றிப் பொன்மாரி வாழ்பரனே நின்பதத்தைப்
பற்றிடுநா ளெந்நாள் பகர். (௯)

பகரரிய வுன்றனிரு பாதாம் புயத்தைப்
பகலிரவெப் போதும் பணிந்திங் - கிகலான
வன்மலத்தைப் போக்கிப்பொன் மாரியா யுன்னடியை
யென்மனத்திற் கொள்ளுநா ளென்று. (௧0)

என்றுமுன தம்பொ னிணையடியைப் போற்றயான்
இன்றுவரைத் தீமடவா ரிச்சையாற் - கன்றியது
போதும்பொன் மாரிப் புனிதனே நின்னருளாற்
கோதிலின்ப வேலையினிற் கூட்டு. (௧௧)

கூட்டுவா யின்பக் குரவையினி லென்னையெற்குக்
காட்டுவாய் நன்றாக் களங்கமற - வீட்டுசெல்வ
மீதே யெனவுணர்த்தி யெம்மானே பொன்மாரி
மாதுபங்கா காத்தருளு வாய். (௧௨)

வாயுமுனை வாழ்த்த மனமு முனைநினைப்பக்
காயமு முன்றன் கழல்போற்ற - நாயேன்றன்
செய்கையெலா முன்றனக்காச் செய்தேனெற் காவெள்ளிச்
சையமன்பொன் மாரி நாதா. (௧௩)

நாதாபொன் மாரிவளர் நம்பா வடியேற்குத்
தாதாவுந் தாயுமாந் தற்பரா - மாதுமையாள்

பங்காளா முக்கட் பரமனே நாயேற்கு
மங்காத வின்பந்தா வந்து. (கச)

வந்தடியேற் குள்ள மயக்கமெலாம் வேரறுத்துச்
சந்ததமு மின்பந் தனையடைய - வெந்தையே
செய்விப்பாய் நீகருணை செம்பொன்மா ரிப்பதியா
யுய்விப்பா யென்னை யுகந்து. (கரு)

உகந்துனது தாளை யுலைமெழுக தொப்பாய்
மிகுந்துருகாப் பாவியேன் மெய்யாச் - சகந்தன்னில்
ஆசையுறத் தள்ளாம லம்பொன்மாரிப் பதியாய்
தேசமரு மின்பத்தே சேர். (கசு)

சேர்ந்துன் னடியார் திருக்கூட்டத் தெஞ்ஞான்றுங்
கூர்ந்துன் றனையுணரக் கூட்டியே - சார்ந்துனது
பொற்றா மரைத்தாளிற் பொன்மாரி யாயிருக்க
வுற்றா தரித்தே யுரை. (கஎ)

உரைப்பரிய பொன்மாரி யொப்பிலா தானே
பரப்பிரம மான பரனே - கரப்பாக
வேணியிலோர் பெண்ணை வைத்த மெய்யனே நாயேனுங்
காணுவனோ வுன்றன் கழல். (கஅ)

கழலிணையைக் கண்டடியேன் கண்களிக்க வென்றன்
பழவினையைத் தீர்க்கப் பரனே - யுளமிரங்கி
யெக்கால நீவருவா யெம்மானே பொன்மாரி
முக்க ணுடையாய் மொழி. (ககூ)

மொழிவரிய வுன்றன் முளரிமலர்த் தாட்கு
வழிபடுநல் லோரை வணங்கி - யிழிவான
ஆசைசினை மெல்லா மறும்படியாப் பொன்மாரி
மாசிலாய் நீகருணை வை. (உ0)

வைய மனைத்தும் வணங்கும்பொன் மாரியில்வாழ்
ஐயனே யென்னு ரமுதமே - செய்ய
குருவே யருவே குணக்குன்றே யென்னைக்
கருவே புகாதவண்ணங் கா. (உக)

காவிலார் பூவின்மதுக் கன்னலார் நல்வயலின்
மேவுறுபொன் மாரி விமலனே - சேவேறி
யன்பர்பவந் தீர்க்கவரு மாரமுதே நாயினேன்
றுன்பப் பவத்தைத் துணி. (உஉ)

துணியுங் கொடுத்தான சோம்பும் பவமாம்
பிணியு மறுப்பாய் பிரானே - யணியும்
பணியாய்பொன் மாரிப் பரனே நினது
தணியா வருளதிறைற் முன். (உ௩)

தானே யிணையல்லாற் றற்கிணையொன் றில்லா
ஞானக் கடலேயென் னல்லின்பே - மோன
குருவேபொன் மாரிவளர் கோவே யெனக்குத்
தருவா யுனதுதிருத் தாள். (உச)

தாழ்ந்துன் பதத்தைத் தமியேனும் பேரின்பில்
வாழ்ந்து சுகிக்க வரநல்காய் - சூழ்ந்தமரர்
போற்றிய பொன்மாரிப் புண்ணியா வுன்னடியை
யேற்றறியா நாயேற் கினி. (உ௫)

இனியேனு முன்ற னிணையடியைப் போற்றிப்
புனிதமா மின்பம் பொருந்த - அனையினிலும்
பேரருளார் பொன்மாரிப் பெம்மானே நாயேனை
யாரிருளை யெல்லா மறு. (உ௬)

அறுப்பாயென் றுன்ப மடியேன்செய் குற்றம்
பொறுப்பாய்பொன் மாரிப் புனிதா - மறுப்பாச
மோட்டுவாய் நாயேற் குனதுதிருப் பாதமலர்
காட்டுவா யீவாய் கதி. (உ௭)

கதிதந்து நாயேன் கலியாவுந் தீர்த்து
விதிமாலுந் தேடரிய மெய்யா - மதியிலகு
செஞ்சடையாய் பொன்மாரித் தேவேநீ யித்தருண
மஞ்சலென வேகாத் தருள். (உ௮)

அருட்கடலா நீயிவ் வடியேனை யந்தோ
மருட்கடலின் மூழ்கவைத்த வாறென் - றெருட்சுடர்தந்
தீசா பொன்மாரிவள ரெந்தா யருட்கண்ணாற்
பாசா டவிதொலையப் பார். (உ௯)

பாராம லுன்னைப் பரமனே ஞானநூ
லோராது வீணுயு முன்றேற்கு - பேரருளாற்
சந்ததமு மின்பந் தனையடையப் பொன்மாரி
யெந்தை யேகண்பா ரினி. (௩0)

இனிப்பிறந்து பூவுலகி லேந்திழையார் கொங்கை
தனைப்புணர்ந்து வாடித் தவியா - துனைப்புணர

யெண்ணுவாய் பொன்மாரி யீசனே நாயேனை
நண்ணுவா யீவாய் நலம். (௯௧)

நலமறியே னுன்னிருதா ளுடேன் கொடிய
குலமுந் தனமுமெய்யாக் கொள்வேன் - மலமகலாப்
பாவியேற்கெவ் வாறு பரமனே பொன்மாரி
மேவினோய்த்தீர்ப்பாய் வினை. (௯௨)

வினைவழியாய் வந்த வெறுமக்க டம்மை
மனைவிதாய் மக்களென்ன மன்னி - இனிமையின்றி
நைந்தேற்குப் பொன்மாரி நாதனே பேரின்பம்
வந்தீய வைப்பாய் மனம். (௯௩)

மனமிரங்கி நாயேன்முன் வாவாவென் றோத
இனமிரங்கா தேயிருப்ப தென்னே - முனமிரங்கி
மாதவருக் காக மறலியைக்கா லாலுதைத்த
நீதில்செம்பொன் மாரியாய் செப்பு. (௯௪)

செப்பரிய பேரின்பச் சிந்துவிடை நான்மூழ்க
வெப்பொழுது வந்தருள்வா யீசனே - அப்பணியும்
வேணியா பொன்மாரி மெய்யா வுழையிலகும்
பாணியா வேதா பகர். (௯௫)

பகருமொழி யாவும்பொய் பண்ணுதொழி றீமை
நிகரில்பிழை செய்யினும்யா னீயே - மிகவிரங்கி
ஆண்டுகொள்வாய் பொன்மாரி யாரமுதே நாயினேன்
மாண்டு பிறவா வகை. (௯௬)

பிறவா வகையருளும் பெம்மானை நெஞ்சே
மறவாமற் பேரின்பில் வாழ்வாய் - அறம்யாவும்
செய்குவாய் பொன்மாரித் தேவனடி யைப்போற்றி
யுய்குவாய் சேர்வா யுரம். (௯௭)

உரமீயுந் தேவே யொருவரிணை யில்லாப்
பரமேயென் றாரமுதே பாகே - கரமேலோர்
மானேந்தும் பொன்மாரி வாழ்வே மயக்குற்று
நானேங்கா தின்பமே நல்கு. (௯௮)

நல்குவா யின்பசுக நாரியர்க ளுற்றமுறு
மல்குன்மே லாசை யகற்றுவாய் - பல்வகையுந்
துன்பமுறு நாயேனைத் தூயசெம்பொன் மாரியா
யின்பமுறச் செய்வா யினி. (௯௯)

இனியேனு நாயேனல் லின்பமுற்று வாழ
நனியருள்செய் தாட்கொண்டு நம்பா - இனிமையிலாப்
பொய்யுடலு னன்றென்னும் போதமுறப் பொன்மாரி
யையனே கண்பார்த் தருள். (சo)

அருளே யமுதேய ரவணிந்த வேணிப்
பொருளே தெருளே புனிதா - யிருளேயுற்
றேங்காம லுய்ய வெளியேற்கு நன்னெறியைத்
தேங்கார்பொன் மாரியனே செப்பு. (சக)

செப்புவாய் நெஞ்சகமே தீமையறப் பொன்மாரி
யப்பன் றிருவுருவா மைந்தெழுத்தை - யொப்பில்லா
வீடுபெற வையன் விரைத்தாளி னன்மலரைச்
சூடுவாய் தீர்ப்பாய் துயர். (சஉ)

துயரறுக்கும் பொன்மாரிச் சொர்ணேசன் றாளை
யயர்வின்றி யெண்ணு மலையோ - துயருற்ற
மாதரிச்சை கொண்டதிலென் வாழ்வுபெற்றாய் நெஞ்சேநீ
பாதகமே யல்லாற் பகர். (சங)

பகருவா யையன் பதமலரை யென்று
மகலுவாய் தீமை யனைத்து - நிகரில்லாச்
செம்பொன்மா ரிப்பதிவாழ் தேவன் றிருவடியை
நம்பிநெஞ்சே யின்பமுற நாம். (சச)

நாமறிவென் றுன்னும ஊறுடலை நாமென்றே
யேமுற்று நெஞ்சே யிடையாதே - யேமந்
தருவானைப் பொன்மாரித் தற்பரனை நயமுன்
வருவானை யெண்ணி மகிழ். (சரு)

மகிழ்ந்துபே ரின்பத்தில் வாழ்வதற்கு நெஞ்சே
யிகழ்ந்துமுன மேலோ ரெறிந்த - சகந்தனில்வாழ்
பொய்வாழ்வி லாசை பொருந்தாது பொன்மாரி
மெய்வாழ்வை நாடி விரை. (சசா)

விரைக்கமலந் தன்னை விளம்புவாய் நெஞ்சே
உரைக்கரிய பேரின்புற் றுய்ய - முருக்கிதணோர்
வாயினாள் பொன்மாரி மங்கைபெரி யாள்பங்கன்
தூயதிருப் பாதத் துணை. (சஎ)

துணைநமக்கு நெஞ்சே சொர்ணேச னென்று
மிணையிலாப் பொன்மாரி யெந்தை - உணைவகல

எண்ணுவா ருள்ளத்து ளொன்றொன்றும் வீற்றிருக்கும்
கண்ணுதலோன் பொற்கமலக் கால். (௪௯)

காலனார் வெய்ய கயிறிழுத்துப் போட்டானம்
பாலனு ரத்தைப் பறிப்பரோ - காலன்
றனையுதைத்த பொன்மாரித் தற்பரனை யுன்னித்
தனையரிச்சை நெஞ்சே தவிர். (௪௯)

தவிர்ப்பாய் மடநெஞ்சே தையலா ராசை
தவிர்ப்பா யுடலாசை தன்னைத் - தவிர்த்தெல்லா
வாசையுமே நீத்தெம்மை யாளம்பொன் மாரியா
னேச மகலாது நினை. (௫௦)

நினைப்பரிய பொன்மாரி நின்மலனை நந்தம்
வினைப்பிறவி யைக்கொல் விடத்தை - யெனக்கினிய
பாலை யமுதைப் பசுந்தேனை நெஞ்சமே
சீலமுற வுன்னித் தெளி. (௫௧)

தெளிவளிக்கும் பொன்மாரிச் செல்வனடி போற்று
தெளிமையுறு மாதர்பா லேனோ - தெளிவதின்றிப்
புக்குழன்றாய் நெஞ்சே புகலுங்கா லன்னவர்பாற்
றுக்கமலா துண்டோ சுகம். (௫௨)

சுகமளிக்கும் பொன்மாரிச் சொர்னேசன் றாளை
யகமேநீ யுன்னு மலையோ - சகவாழ்வைப்
பற்றியலைந் தாய்கொடிய பாழ்நெஞ்சே தில்லைநகர்ச்
சிற்றம் பலவனடி தேடு. (௫௩)

தேடிமுனை மாலயனுஞ் சீரன்ன மேனமாய்
வாடியுங் காணு மலர்ப்பதத்தை - நாடியுல
காசைகள்யா வுந்துறந்தி யம்பொன்மா ரிப்பதியா
னேசமுற்று வாழ்நெஞ்சே நீ. (௫௪)

நீயே தயவுற்று நின்மலா நாயேனைத்
தீயபவந் தீர்த்தின்பிற் சேர்ப்பாயே - தாயனைய
நல்லருளாய் பொன்மாரி நாயகமே யென்மனமாங்
கல்லைக் கனியாக்கிக் காண். (௫௫)

காணும் பொருளெல்லாங் கண்ணுதலே நின்வடிவாக்
காணும் படிக்குண்மை காட்டுவாய் - பேணுதவத்
தன்பர்பவத் துக்கோ ரருமருந்தே பொன்மாரி
யென்பொன்னே தேனே யினி. (௫௬)

இனியேனு நின்னருளா லேழையே னுய்ய
முனிவாயென் றீயமல மூன்றும் - நனிவாடி
மாலயனுங் காணும்பொன் மாரியாய் நின்புகழை
ஞாலமெலாம் போற்றிடுவே னான். (ருஎ)

நாலு மறைமுடிவி னண்ணும் பொருளாமுன்
சீல மறிவேனோ செப்புங்கால் - ஆலந்
தனையுண்ட பொன்மாரித் தற்பரா வாசை
தனைவிண்டி டாநாயேன் றான். (ருஅ)

தானே யெலாமாய்த் தனக்கோ ரிணையில்லா
ஞானக் கரும்பேயென் னல்லின்பே - யீனத்
துயர்தீர்த்துப் பொன்மாரிச் சொர்னேசா நாயேற்
குயரின்ப மீயமனத் துன். (ருகூ)

உன்னேனுன் றாளை யுரையே னுரைத்தாலுந்
துன்னுமட வாரைமனஞ் சுட்டுமே - யென்னசெய்வே
னிம்மனத்தாற் பட்ட விடர்தீரப் பொன்மாரிப்
பெம்மானே நீயருளாற் பேசு. (கூ0)

பேசுவாய் நாயேன் பிறவிப் பகையனைத்து
நாசமுறப் பொன்மாரி நாதனே - ஆசை
யணுவுமிலா தற்றா ரகத்துளே யென்றும்
நணுகுமுனை நம்பினே னான். (கூக)

நாலு முகத்தவனு நாரணனுந் தேடரிய
சீலமுறும் பொன்மாரித் தேவனே - மூலப்
பொருளே யருளே புனிதா வடியேற்
கிருளே யறக்கண்பா ரின்று. (கூஉ)

இன்றேனு நாயே னிடரகல நற்றில்லை
மன்றுணட மாடும்பொன் மாரியாய் - நன்று
தருவாய்முன் வந்தாண்ட சற்குருவைப் போல
வருவாய் தவிர்ப்பாய் மயல். (கூங)

மயலற் றுனதருளால் வந்தடைந்தே னர்தோ
செயன்மற் றறியேன் சிவனே - சயல்விழியார்
மங்கைபங்கா பொன்மாரி மாதேவா நாயேனைப்
பங்கமற நீகடைக்கண் பார். (கூச)

பார்வாழ்வைச் சொற்பனம்போல் பார்த்தடியே னுன்னுடைய
சீர்வாழ்வில் வாழ்வதென்று செப்புவாய் - நீர்வாழுஞ்

செஞ்சடையாய் பொன்மாரித் தேவர்பணி தேவேயுன்
கஞ்சமலர்த் தாளிணையைக் கண்டு. (சுரு)

கண்டுன் சழலைக் கடையேன் மயக்கனைத்தும்
விண்டு சுகிப்பதெந்நாள் மெய்யனே - பண்டைநாள்
நாரணனும் பங்கயனும் நாடரிய பொன்மாரி
யாரணனே நாயேற் கறை. (சுசு)

அறைவரிய பொன்மாரி யாரமுதே தேனே
இறைவா வெனையுடைய வீசா - மறைமுடிவை
யாளும் பொருளேயுன் னுசிலாச் செங்கமலத்
தாளிணையைப் போற்றவரந் தா. (சுஎ)

தாதாவுந் தாயுந் தமருந் தமியேற்குன்
பாதார விந்தமன்றிப் பற்றில்லை - நீதாளு
நாயேற்குப் பொன்மாரி நாதாநீ நல்குவாய்
தூயபேரி ரின்பச் சுகம். (சுஅ)

சுகந்தந்து நாயேன் றுயரறுக்க வேண்டு
முகமைந் துடைய முதலே - சகந்தன்னி
லாசையின்றிப் பொன்மாரி யாரமுதே யுன்னடியில்
நேசமுற்று வாழ நிதம். (சுகூ)

நிதம்பிரியா வின்பத்துண் ணீநானு மொன்று
யிதம்பெற்று வாழுநாளெந்நாள் - மதமுற்ற
மூடருள நண்ணு முதலேபொன் மாரியில்வாழ்
தேரிடய பேரின்பே செப்பு. (எ0)

செப்பரிய பொன்மாரித் தேவனே செஞ்சடையி
லப்பறுகு கொன்றை யணிந்தோனே - ஒப்பொருவ
ரில்லானே யன்பர்க் கெளியானே நாயேனை
யல்லாளா வண்ணமுகந் தாள். (எக)

ஆள்வா யெனைநீ யரிவையர்கள் பாற்சென்று
தாள்வாய்ப் படிந்து தவியாமல் - மாள்வாழ்வை
மெய்யென்று நம்பி மெலியாமற் பொன்மாரி
யையனே சொர்ணநா தா. (எஉ)

நாதா கதியுன்ற னற்பதமே யல்லாது
பேதையேன் காணேன் பிறிதொன்று - நீதயவா
லின்பமுறச் செய்வையோ வின்றுசொம்பொன் மாரியாய்
துன்பமுறச் செய்வையோ சொல். (எங)

சொல்லேன் றிருநாமஞ் சூட்டேனின் றாளிணைக்கு
நல்ல நறைமலரா னன்மாலை - புல்லறித
மாதரையே நாடி மதியிலனை ப்பொன்மாரி
நாதவெவ்வா றுள்வாய் நவில். (எச)

நவிலரிய பொன்மாரி நாதனே நாயேன்
பவலயமுற் றேங்கப் படுமோ - கவலையற
வுன்னிருதா ளைப்போற்றி யொப்பிலாப் பேரின்பின்
மன்னியிருக் கத்தா வரம். (எரு)

வரந்தருமிப் பூவாழும் வாழ்வுதரு மேலா
முரந்தரும்பே ரின்ப முதவும் - விரைந்துளமே
மானேந்தும் பொன்மாரி வள்ளலடி யார்தலையிற்
றேனேந்துந் தாண்மலரைத் தாழ். (எசு)

தாழ்வாம்பொய் வாழ்வைச் சகத்தீர்க ளோநீர்தாம்
வாழ்வா மெனமதித்து வாடுகிறீர் - வாழ்வுறவே
யெம்பெருமான் பொன்மாரி யீசனிரு தாளிணையை
நம்புவீர் சேர்வீர் நலம். (எஎ)

நலமொன் றறியேனை நான்முகனு மாலு
மலமந்து காணரிதா மய்ய - வலம்வந்து
நண்ணுமடி யார்க்கருள்செய் நம்பனே பொன்மாரிக்
கண்ணுதலே நீமுழுதுங் கா. (எஅ)

கானலைநன் னீராக் கருதுமவன் போலய்யோ
நானிப் புவியை மெய்யா நம்பியே - யீனமுற்று
வாடுதல்போய்ப் பொன்மாரி வள்ளலே யென்றுன்றாட்
கூடுவேன் றீர்வேன் குறை. (எகூ)

குறைவில்பே ரின்பக் குரவையினின் மூழ்க
விறைவா வருள்புரிவ தென்றோ - மறைவரிய
தேனேபொன் மாரியில்வாழ் தேகேநற் றேவர்கடங்
கோனே யடியேற்குக் கூறு. (அ0)

கூறு மலக்குடிலைக் குக்கலுணு மோருனை
நாறு முடம்பினையோ நானென்பேன் - நீறணிதம்
பூசமடி யார்பிறவி போக்கும்பொன் மாரியில்வாழ்
தேசகிகழ் சொர்னேசா செப்பு. (அக)

செப்பாருன் னைந்தெழுத்தைச் சேவியா ருன்கழலை
யொப்பிலுனை யுன்னி யுருகிடா - ரிப்புவியில்
மக்களா யேன்பிறந்தார் மாசில்செம்பொன் மாரியில்வாழ்
முக்க ணுடையாய் மொழி. (அஉ)

மொழியாருன் பாத முளரியினை யென்றும்
வழிபடுநல் லோரை வணங்கார் - அழிபொருளை
மெய்யென்று நம்பி மெலிவார்பொன் மாரியில்வாழ்
செய்யனே யேன்பிறந்தார் செப்பு. (அ௩)

செப்பரிய மெய்யன்பு செய்வாத வூரர்முத
லொப்பிலன்பர் போலவுனை யுன்னிலேன் - எப்படியுன்
பேரின்ப முற்றுப் பிறப்பகல்வேன் பொன்மாரி
யோரின்ப முள்ளா யுரை. (அ௪)

உரையேனின் பாதமல ருன்னியுனை யுள்ளங்
கரையேனன் னீர்சொரியேன் கண்ணுற் - றரைவாழ்வை
மெய்யென்று நம்பியென்ன மேன்மைபெற்றேன் பொன்மாரி
நய்வொன்றி லாச்சுகமே நான். (அ௫)

நானேநீ நீயேநான் யாவு நமதுருவந்
தானேயென் றுன்னுசுகந் தந்தாள்வாய் - மோனக்
குருவேபொன் மாரிவளர் கோதறுபூங் கற்ப
தருவே யடியேற்குத் தான். (அ௬)

தானந் தவநோன்பு தான்செயினும் பொன்மாரிக்
கோனன்பி லாரின்பு கூடுவரோ - ஞானம்
பொருந்துவரோ வின்பப் பொருவிலாத் தேனை
யருந்துவரோ நெஞ்சே யவர். (அ௭)

அவரிவர்நல் லார்பொல்லா ரரமென் றுரைத்தல்
தவருக் கழகல்ல சாற்றி - லெவருக்கு
மங்கங்குச் சான்றாகி யாட்டுவிக்கும் பொன்மாரி
யெங்கோவின் செய்கைமறந் தே. (அஅ)

எதுக்கு நெஞ்சேநீ யேகி வெளிமுகத்திற்
றீதுக் குழன்று திரிகிறாய் - மாதுக்கோர்
பங்கினன்பொன் மாரிப் பரமனரு ளாந்தேனை
யிங்குண்ண வாவா வினி. (அ௯)

இனியடவா ராசைகொண் டேங்காதே நெஞ்சே
பனிமதியார் சென்னிப் பரமன் - நனியருளான்
மன்னிடலாம் பேரின்ப வாரிதியிற் பொன்மாரிக்
கன்னலனை யான்கழலைக் கண்டு. (௯௦)

கண்டு சனனங் கழிக்கலா மாதரிச்சை
விண்டுபே ரின்பத்துண் மேவலாம் - வண்டினங்கள்
பங்கயநற் றேனையுண்டு பாடும்பொன் மாரியுளான்
செங்கமலப் பாதமெனுந் தேன். (௯௧)

தேனோ கனியோ நற்றெள்ளமுதோ தீங்கரும்பு
தானோ வலதிணையி றங்கமோ - ஞானோ
தயமோபொன் மாரியில்வாழ் தற்பரன்முன் னாளிற்
கயமுரித்துப் போர்த்தான் கழல். (௯௨)

கழறந்து நம்மைக் கதிசேர்க்கு மெம்மா
னழலேந்தும் பாணியுடை யையன் - வழுவேனுட்
கோயிலாக் கொண்டு குறைதவிர்த்த பொன்மாரித்
தாயிலான் பாதநெஞ்சே சார். (௯௩)

சாராம லுன்றனிரு தாளிணையை யுன்னையென் னுட்
பாராம லய்யகோ பாவியேன் - குராருஞ்
சென்னியாய் பொன்மாரித் தேவேநான் றீதான
கன்னியராற் பட்டேன் கடை. (௯௪)

கடையேது மாதர்கடங் காமந்தா னேது
விடையேறும் பொன்மாரி மெய்யன் - சடையிலொரு
பெண்ணைவைத்தா னெஞ்சே பிறப்பகல நம்மையின்பம்
நண்ணவைத்தான் பேரருளி னால். (௯௫)

நாலிரண்டு சித்திபெற்று ராலு நம்மிறைவன்
காலிரண்டு மன்பாய்க் கருதாதார் - மாலடைந்து
வாடுவரே யல்லாற்பொன் மாரியான் பேரின்பங்
கூடுவரோ நெஞ்சமே கூறு. (௯௬)

கூறுவீர் பொன்மாரிக் கோவின்றிரு நாமம்
மாறுவீர் தீய மயலினின் றுந் - தேறுவீ
ரொன்றே பொருளென் றுணருவீர் மற்றவன்பொன்
மன் றுணடிக் குர்தாண் மலர். (௯௭)

மலர்கொண்டு பொன்மாரி வள்ளலிரு தாளா
மலருக் கருச்சனைசெய் வார்கள் - பலதுயருந்
தீர்வரர்சிற் றம்பலம்வாழ் தேவின் றிருவருளாற்
சேர்வார்பே ரின்பமெனுந் தேன். (கூஅ)

தேனாறு பாய்ந்துமிதஞ் செந்நெல்விளை பொன்மாரி
மானார் கரத்தானை வாழ்த்தியே - ஊனாரு
மாகநா மன்றென் றகற்றிமன மேயறிவா
மேகநா மென்றேயிரு. (கூகூ)

இருவினைதீர்த் தின்பநமக் கீந்தருளு நெஞ்சே
கருவினிற்சே ராதவண்ணங் காக்குந் - திருவின்மிகு
மங்கைபெரி யாள்பங்கன் மாசில்செம்பொன் மாரியான்
செங்கமலப் பாதமெனுஞ் சீர். (க00)

பொன்மாரியந்தாதி முற்றிற்று.

---

(அவையடக்கம்.)

தோகைநட மாடுதன்முன் றூய்மையிலா வான்கோழி
யேகிநட மாடு மியல்பேயாம் - மோகமிலா
நல்லோர் குழாமுரைத்த நற்கவிமு னன்கணுவு
மில்லாயான்சொ ல்லுமிது.

ஆகச்செய்யுள் ருகூரு.

சிவமயம்.

திருச்செந்தூரென்னும்

# சீரலைவாய்ப் பதிகம்.

## விருத்தம்.

அரியும் பங்கயத் தண்ணலு முனிவரு மடிதொழ நடமாடுங்
கரிய கண்டனீ பழனியாய் புன்மிஞர் கலவியி லுறுமின்பை
எரியும் பாம்புமென் றெந்தநா ரேத்துவா யிமையவர் பூமாரி
சொரியுஞ் சீரலை வாயினின்மேவிய தோகைவா கனத்தானே. (க)

அன்றுசூரன்ற னுக்கையைப்போழ்ந்திடு மயிலிலங்கியசெல்வ
வின்றுநானுனைப பூங்கழலிலைறஞ்சினே னென்னைநீயகற்றுதே
மன்றுளாடிய வள்ளலீவணிகனே மறையொடுபலநூலுந்
துன்றுசீரலை வாயினின்மேவிய தோகைவா கனத்தானே. (உ)

அன்னைநேருன னடியிணைக்காட்படா தையகோவடிநாயேன
மின்னினேரிடை யார்தனத்தாசையான் மெலிவதுமுறையாமோ
பொன்னின்மன்றனீ பழனியம்பொருப்பிஞய்புண்ணியத்தவத்தோரக
டுன்னுசீரலை வாயினின்மேவிய தோகைவா கனத்தானே. (௩)

இல்லையென்பவாக் கில்லையென்னுமலே யீவலியானெனக்கீவாய
கல்லைநேர்மனக் கயவருக்கிரங்கிடாக் கருணையங்கடல்வள்ளால்
தில்லைமேவிய சிவபிரானருளிய சிவகிரிப்பெருமானே
சொல்லுசீரலை வாயினின்மேவிய தோகைவா கனத்தானே. (௪)

நலங்கொளுன்பத நம்பியேநின்பதி நாடொறுநாடோறும்
வலங்கொள்காலினு லடியனேன்புன்மிஞர் வாயிலிற்செலலாமோ
தலங்களிற்றலை யாஞ்சிதம்பரத்தரன் றனையனே சதுர்வேதந்
துலங்குசீரலை வாயினின்மேவிய தோகைவா கனத்தானே (௫)

வங்கவாணிபத் தனமலிவாணிபர் வாழ்வரியாருக்குஞ்
சிங்கமாகிய நினைச்சரணடைந்தயான் சிறிது தாழ்ந்திடலாமோ
வெங்கட்பாம்பணி தில்லைப்பிரானருளிய வேழத்திற்கிளையோனே
துங்கச்சீரலை வாயினின்மேவிய தோகைவா கனத்தானே. (௬)

அன்பருக்கெளி யானெனுந்திருப்பெய ரசத்தியமாகாதோ
புன்புலால்கமழ் மங்கையர்மயக்கினைப் போக்கியே யெனைக்காப்பாய்
கொன்புனைந்தவேற்கையனே தில்லைப்பிரான்குமரவந்தடைந்தோர்க்குத
துன்பில்சீரலை வாயினின்மேவிய தோகைவா கனத்தானே. (௭)

தில்லைமன்றினிலிரு முனிவோர்தொழுஞ் சிவபிரானருள்சேயே
கல்லைநேர்மனக் கள்வனனபர்தங் கருத்தறிர்தவர்க்காக்கு

நல்லறம்புரி நாயினேன்வருந்திடல் ஞாயமோவையையோ
சொல்லுசீரலை வாயினின்மேவிய தோகைவா கனத்தானே. (அ)

தீயமங்கையர் திறமுலையாசையாற்சிறிய னேன்வருந்தாது
தாயையொக்குநீ புரந்திடமுகமன்யான் சாற்றவேண்டியதுண்டோ
மாயனுதியோர் தொழுந்திருப்பதத்திறைய் மன்றுடையான்மைந்தா
தூயசீரலை வாயினின்மேவிய தோகைவா கனத்தானே. (கூ)

விதிக்குமாலுக்கு மமரர்க்கும்பெரியநின் விரைமலர்த்தாணெஞ்சிற்
பதிக்குநாயினேன் பருவரலடைந்திடிற்பழிநினைப்படராதோ [லோர்
கதிக்கும்பொன்னுக்குங் கவிசொனோர்க்காருடிலைக் கானன்மைந்தாமே
துதிக்குஞ்சீரலை வாயினின்மேவிய தோகைவா கனத்தானே. (க0)

வெய்யமங்கைய ராசையாம்பரவையில் விழுந்துழலுவேற்குன்
செய்யதாளிணைப் புணையினையொல்லைதா திருவுளத்தருண்மேவிப்
பையராவணி பரனருள்பாலனே பழனியங்கிரியானே
துய்யசீரலை வாயினின்மேவிய தோகைவா கனத்தானே. (கக)

சீரலைவாய்ப்பதிகம் முற்றிற்று.

ஆ செய்யுள் கூ0கூ

---

உ

சிவமயம்.

# பழனிப் பதிகம்.

## விருத்தம்.

காவியங் கண்ணார் மோகக் கடலினிற் படிந்த பொல்லாப்
பாவியே னெனினு நின்னைப் பைந்தமிழ் பாடு நாயேன்
மேவிய துன்பை நீக்கி விரைந்தருள் செயவேண்டாவோ
கூவிள முடித்த தில்லைக் கூத்தனீ பழனிக்கோவே. (க)

அறமின்று ராசை வெள்ளத் தழுந்திய பாவி யேனு
நறைவிரி நின்று ணம்பி நற்றமிழ் பாடு நாயே
னுறமுறை யாமோ துன்ப மொழித்தருள் செயவேண் டாவோ
குறவள்ளி கணவா தில்லைக் கூத்தனீ பழனிக்கோவே. (உ)

நஞ்சினைப் புரையு மாதர் நாற்றமே நல்லின் பென்று
விஞ்சுநாள் வீணுப் போக்கும் வினையினே னெனினு முன்னைத்
தஞ்சமென் றேனுக் கின்பந் தந்துகாத் திடவேண் டாவோ
குஞ்சரி கணவா தில்லைக் கூத்தனீ பழனிக் கோவே. (௩)

ஊழ்வினை வலியி ஞலே யூனமங் கையரின் புற்றும்
பாழிலே வெகுநாட் போக்கும் பாவியே னெனினு நின்னைத்
தாழுறு சென்னி யேன்பாற் றயைமிகச் செயவேண் டாவோ
கோழியங் கொடியாய் தில்லைக் கூத்தனீ பழனிக் கோவே. (ச)

ஆலநேர் விழியார் மோகத் தற்பக லழுந்தி யன்னோர்
காலினில் வீழ்ந்த பொல்லாக் கடையனே னெனினுமந்தோ
சாலவே பாடு கின்றேன் றனக்கருள் செயவேண் டாவோ
கோலமா மயிலாய் தில்லைக் கூத்தனீ பழனிக் கோவே. (ரு)

நன்றிலாக் கொடிய மாதர் நகைமிகப் பொருந்தி யன்னோர்
முன்றிலி லுழலும் பொல்லா மூர்க்கனே னெனினு நின்பா
லின்றமிழ் பாடு நாயேற் கிரக்கமவைத் திடவேண் டாவோ
குன்றெனுங் குணத்தாய் தில்லைக் கூத்தனீ பழனிக் கோவே. (சு)

அறுபத முரலுங் கூந்த லரிவை யரல்கு லின்ப
முறுவதே தவமென் றுன்னி யழன்றதீப் பாவி யேனு
நறுமலர் நினக்குச் சாத்து நல்லருள் செயவேண் டாவோ
குறுமுனி குரவா தில்லைக் கூத்தனீ பழனிக் கோவே (எ)

சற்றுநன் கில்லா மாதர் தமதுற வுறவென் றுன்னி
யிற்றைநாள் வரையுங் கெட்ட வீனனே னெனினு முன்றாள்
முற்றுமே நம்பிச் செஞ்சொன் மொழிந்தயா னுயவேண் டாவோ
கொற்றவர் போற்றுந் தில்லைக் கூத்தனீ பழனிக் கோவே. (அ)

உன்னிய மாதரி ன்பை யனலெனு வுணரா தையோ
மன்னிய பாவி யேனும் மாசில்செந் தமிழ்நிற் கின்பாய்
பன்னிரு செவியுங் கேட்கப் பாடும்யா னுயவேண் டாவோ
கொன்னுறு தவர்வாழ் தில்லைக் கூத்தனீ பழனிக் கோவே. (கூ)

புல்லுமங் கையராற் கெட்ட புன்மையே னெனினு மந்தோ
வெல்லையில் கருணை யாய்நீ யிரக்கம்வைத் திடவேண் டாவோ
நல்லசே யில்லை யென்று நகையினுற் பெற்ற தாயர்
கொல்லுவ துலகி லுண்டோ கூத்தனீ பழனிக் கோவே. (க0)

புரையுறு மாதர் தம்மைப் புல்லிய பாவி யேனும்
விரைமலர்ப் பதத்தாயு ன்றன் வியன்புகழ் விருப்பினேடும்
உரைபுரி கின்ற நாயேற் குதவிசெய் திடவேண் டாவோ
குரைகழ லுடைய தில்லைக் கூத்தனீ பழனிக் கோவே. (கக)

மாதர்தீ யின்பே யின்பாய் மருவிய பாவி யேனுந்
தீதினற் றமிழ்நிற் கோதுஞ் சிறியனே னுயவேண் டாவோ
பூதியார் தமிழ்நற் கீரர் பொற்றமிழ் புனைந்த மார்பா
கோதினை யகற்றுந் தில்லைக் கூத்தனீ பழனிக் கோவே. (கஉ)

பழனிப் பதிகம் முற்றிற்று.

ஆ செய்யுள் சுகஅ

சிவமயம்.

# விடுதிக்கவிகள்.

## கோவிலூர்மடாலயம்.

### விருத்தம்.

மடமுண்டோ சிவாலயங்கள் மிகுதியுண்டோ வாசிட்டம்படிப்ப
துண்டோ மனத்துண்ஞானத், திடமுண்டோ நால்வர்தமிழ் படிப்பா
ருண்டோ திவ்வியமா முதாரமுதற் குணமுமுண்டோ, விடமுண்டோ
னடியர்குழா மிகுதியுண்டோ மெய்யறஞ்சத் திரம்விரிபூங் காவுமுண்
டோ, வடகைலைக் கிறைவனென்று முத்துராம வள்ளறிருக் கழனிநகர்
வாராமுனனே. (௧)

### வேறு.

திருவாய்க்கத் தவம்புரிந்தோ ரளகைநகர்க் கிறையவராந் திகழு
ங்கற்ப, தருவாய்க்கத் தவம்புரிந்தோர் வெள்ளத்தி யொருமுதுகிற்
றாங்கப்பெற்றோர், கருவாய்க்க மறம்புரியுங் கயவர்கண்ணுக் கினி
யாத கருணைவெள்ளக், குருவாய்க்கத் தவம்புரிந்தோர் கழனிநக ருற்
றதிருக் கூட்டாத்தாரே. (௨)

### வேறு.

செங்கமல மலர்போன்ற முகந்தானெங்கே சிறியனைவா வென்
றழைத்த திருவாயெங்கே, யங்கமெலா நீறணியு மழகதெங்கே யரிய
வெண்கோ வணங்கட்டு மரைதானெங்கே, சங்கையறப் பொருளோ
துஞ் சமர்த்துமெங்கே தாயினிலு மிகச்சிறந்த தயைதானெங்கே, மங்
கையரை மிகப்பழிக்குங் கவிதானெங்கே வளரருணாசலமுன் போல்
வந்தாள்வாயே. (௩)

### கலித்துறை.

கரும்பா யினிககின்ற மாணார்க ளின்பங் கடுவெனவே
விரும்பா திருக்கவு நாள்வருமோ விழை யாசையெல்லாந்
துரும்பாக நீத்து விடுத்தோ ருளக்கஞ்சத் துள்ளிருக்குஞ்
சுரும்பே கழனிப் பதியரு ணாசலத் தூயவனே. (௪)

புண்ணிய மேதிரண் டோருரு வாகப் புவியில் வந்த
வண்ணலை நற்றவர் மேவுங் கழனிக் கரசைநந்தங்
கண்ணுண் மணியை யருணா சலனெனுங் கற்பகத்தை
யெண்ணுநெஞ் சேபவ மேழையுந் தீர்த்தின்ப மெய்துதற்கே. (௫)

### விருத்தம்.

மதம்படு கடைமின் னார்தம் மையலுட் படாமலீசன்
பதம்பெற வெனக்கு மேன்மை பாலிக்கு மருணைகுன்றின்

இதம்பெறு துணைவனாகி யெனதுயிர்த் துணையுமான
சிதம்பரப் பெரியோன் செம்பொற் சேவடி சென்னி சேர்ப்பாம் (கூ)

வேறு.

கட்டுமாவின் கனியினிலுங் கனமாமதுரக் கழனிநகர்ச்
சிட்டர்பாலி னுயேனைச் சேர்க்குமுறையே யல்லாமல்
நட்டனருளும் பழனிமலை நாதாபொல்லா நாரியரா
மெட்டிக்கனியைப் புசித்திடுக வென்னே யென்னே யென்னேலே.

## குன்றக்குடி.

### கலித்துறை.

எத்தனை போதனை செய்தாலு மாத ரிருமுலையிற்
பித்துறு மென்மதி தேறலை யேயிப் பிழைக்கென்செய்வேன்
கொத்துறு கொன்றை யரவார் சடைமுடிக் கூத்தன்மைந்தா
சத்திய மாதவர் சூழ்மயின் மாமலைச் சண்முகனே. (அ)

வேயென்ற தோளியர் மோகக் கடலில் விழுந்துழன்ற
நாயென் னொருபெய ருன்னடி யேற்கு நவிலவிடேல்
தீயொன் றியசெங் கரத்தண்ண றந்த சிவகிரியாய்
தாயென் றுணைநமபி னேன்மயின் மாமலைச் சண்முகனே. (கூ)

விடத்திற் கொடிய மடவார்க ளூற்றம் விளையுமல்கு
லிடத்திற் பொருந்திய பேராசை நீத்துனை யென்றடைவே
னடத்திற் சிறந்த புலியூர னல்கிய நாயகமே
தடத்திற் கமல மலிமயின் மாமலைச் சண்முகனே (கo)

கீண்ட குழலியர் காமவி காரத்தை நீக்கியெனை
யாண்டுகொ ளாவிடி லென்செய்கு வேன்றுணை யாருமிலை
பாண்டவர் போற்று பதத்தாய் புலியொடு பாம்புந்தொழுந்
தாண்டவ த்தண்ண லருண்மயின் மாமலைச் சண்முகனே. (கக)

திருமுரு காற்றுப் படைநற் றிருப்புகழ் சீரிலங்கு
மொருவனு பூதி முதலாந் தமிழுற்ற வுன்செவியில்
மருவும தோமிக் கெளியேன்றன் புன்றமிழ் மன்றன்மைந்தா
தருநிக ராங்கொடை யாய்மயின் மாமலைச் சண்முகனே. (கஉ)

### விருத்தம்.

உன்னடி யாரு மாத ருறவுற்றே யுழன்றாலையோ
மன்னுல கத்தி லத்தை மாற்றவல் லவர்க ளாரே
என்னிரு கண்ணே யன்ப ரிருதயக் கோயி லானே
பன்னிரு கரத்தாய் தில்லைப் பரனருள் பழனி வேளே. (கங)

மாதர்செய் மயக்க மொன்றை மாற்றிலை யாயிருயேன்
கோதின்றி நினது பாதங் குறுகுதற் கைய முண்டோ
வேதனே முதலா யுள்ள விண்ணவ ரெல்லாம் போற்றும்
பாதபங் கயத்தாய் தில்லைப் பரனருள் பழனிவேளே. (கச)

மங்கைய ரின்பை யின்பா மதிக்கவோ மலர்கொண் டுன்னை
யங்கையால ருச்சித் தேனு னயகோ வரற்றி மாதர்
கொங்கையிற் றழுவி லேதுங் குணமுண்டோ கூருய் செம்பொற்
பங்கயப் பதத்தாய் தில்லைப் பரனருள் பழனிவேளே. (கரு)

மெத்தநான் வருத்த முற்றேன் வெய்யமங் கையர்மோ கத்தா
லத்தைவிட் டுனது செம்பொ னடியிணை யென்று சேர்வேன்
சித்தமா யுன்னை நம்புஞ் சிறியனேற் கிரங்கு கண்டாய்
பத்தருக் கெளியாய் தில்லைப் பரனருள் பழனிவேளே. (கசு)

பீடுடை நினக்கன் புற்ற பெருந்தகை யோருமின்னை
நாடுதே லென்ருற் பொல்லா நஞ்சென வெறுப்பார் யாரே
வாடுதே லளிக்கு மாதர் மயக்கினை மாற்றி யாள்வாய்
பாடுவொர்க் குரியாய் தில்லைப் பரனருள் பழனிவேளே. (கஎ)

வெண்பா.

வேதா வணங்கும் விடைக்கொடியோ னீபழனித்
தாதாவே நாயேற்குத் தாதாதா - யாதென்ரு
லற்ப மடவா ரருவருப்பா மல்குலினைச்
சொற்பனத்து முன்ருச் சுகம். (கஅ)

கலித்துறை.

குணக்காரச் செட்டி கொடைக்காரச் செட்டி குபேரன்மெச்சும்
பணக்காரச் செட்டி படைக்காரச் செட்டிநற் பத்தரெனுங்
கணக்காரச் செட்டி கனக்காரச் செட்டி கடப்பந்தொடை
மணக்காரச் செட்டி நடனீ பழனி மலைச்செட்டியே. (கக)

வெண்பா.

ஆயிரக்கான் மண்டபத்தி லாதிரைநா ளிற்சேவை
தாயனையா ளுயேற்குத் தந்தானே - தூயதவ
மோங்கும் புலியூரி னுத்தரவீ திக்குணபால்
தாங்குந் திருத்தேரிற் ருன். (உ0)

விருத்தம்.

அடியாரே தும் பிழைத்தனரோ வன்றிப்புவியை யாளுகின்ற [தோ
கொடியோர்செய்யுங் கொடுங்கோன்மை குறித்தோ மற்றைக்குறையா
வடிவே லிறையைத் தருமிமைய மாதுகணவா மாமருவு
நெடியோன் வணங்கு நடராஜா நின்றே ரூரா நீதியென்னே. (உக)

கலித்துறை.

கோணுகங் கொன்றை யணியுஞ் சடாடவிக் கூத்தன்மைந்தா
சேணுடர்க் குற்ற சிறைமீட்ட வாகஞ் சிகண்டிமலை
மாணூர் குறவள்ளி கேள்வா வுனது மலர்முகத்தைக்
காணாத நாள்பத்து மாண்டா யிருந்தவென் கண்களுக்கே. (௨௨)

வெண்பா.

கன்னியர்பா லுன்னூரி லியான்கலவி செய்ததுண்டோ
பன்னிருகண் ணுள்ளநீ பார்த்தனையோ - என்னைநிந்தை
பொய்யா யுரைத்தவற்குப் பொற்பொதுவோ னீமுருகா
மெய்யாத்துன் பீவாய் விரைந்து. (௨௩)

விருத்தம்.

காடுவெட்டித் திருநகரைக் காண்பதெந்நாள் களிமிகுசேசா மாக்கந்தன்கமலப்பாதஞ், சூடுவது மெந்தநாள் நாயேன் வாயால் துய்யநட ராசவெனச் சொல்லிச்சொல்லிப், பாடுவது மெந்தநாள் தீயமாதர் படுகுழியி லாசைவிட்டுப் பரமானந்தங், கூடுவது மெந்த நாள் தில்லைக்கானிற் குடியிருப்ப தெந்தநாள் கொடியனேனே. ()

வேறு.

ஆடுகின்ற பதத்துந்தை யன்பினுறை களஞ்சியமா மகத்தோ ஞன, காடுவெட்டி மாதவனற் காதலன்றன் கனந்தெரியாக் கடுஞ் செட்டுள்ள, நீடுகின்ற வுலுத்தர்கள்பா னிதிகேட்க விட்டகுற்ற நின் பால்வந்து, கூடுமல்லா லெனக்குண்டோ குபேரன்மெச்சுந் திருப்பழ னிக் குன்றத்தானே. (௨௫)

வேறு.

ஆகுவா கனனைப் பழனியங் கிரிவா ழுறுமுகக் கடவுளைப் பயந்த, வேகநா யகனுக் கினியபைங் கிளியே யெளியனேற் கிரங்குவைகண் டாய், மோகசா கரத்தைக் கடந்தமா தவத்தோர் முடிதொடு சரண பங் கயத்தாய், நாகநாட் டவர்கள் பணிவெளி முத்தி நகரில்வாழ் பெரியநா யகியே. (௨௬)

அல்லைநேர் குழலா ராசையாங் கடலி லனேகநா ளுளமருண் டலைந்த, கல்லைநேர் மனத்துக் கடையனேன் றன்னைக் காப்பதுன் திருவருட் கடனே, தில்லையம் பலத்துட் டிருநடம் புரியுந் தீக்கணர்க் கினியதீங் கனியே, நல்லமா தவத்தோ ருறைவெளி முத்தி நகரில் வாழ் பெரியநா யகியே. (௨௭)

வேறு.

ஆலமுண்டோ னருள்பழனி யண்ணலார்தம் பூசனைக்குப்
பாலன்பாலைக் கொண்டுவந்தான் பகர்ந்தமொழிக்கு வதில்மொழியச்

சீலமௌன காலமெனத் தெரிவாய்செம்புஞ் செம்பொன்னுங்
கோலமழிந்த முதுமடந்தை தன்பாளுளை வருங்கொடுத்தே. (௨௮)

வேறு.

தன்னைநேர் குருலிங்க சங்கமத்தை வணங்கலன்றித் தரணியா ளு, மன்னைவணங் காவிளசை வணிகமின்னூர் கச்சேரி வந்ததுண் டோ, அன்னதுனக் குத்தெரிந்தும் பயமுறுத்திக் கைக்கூலி யாசை யாலெம், பொன்னைவாங் கியபிழையும் பொறுக்குமோ திருப்பழனிப் பொருப்பார்வேந்தே. (௨௯)

வேறு.

கொள்ளைபோன பொருள்வாங்கிக் கொடுக்குமுறையே யல்லாமற்
கள்ளர்செய்த கொடுமையினுங் கனத்தகொடுமை செயலாமோ
பிள்ளைமதியைச் சடைக்கணிந்த பெருமானருளும் பழனிமலை
வள்ளற்கிதனை யுரைசெய்தாற் கேளாரேவிவ் வழக்கினையே. (௩0)

வேறு.

தப்புடையார் திருடுசொத்தைச் சாமபே தந்தானந் தண்டத்தாலே
எப்படியா யினும்வாங்கி யீயமுறை யதற்குமன மிலையேலாடுந்
துப்படியார் மருள்பழனித் துரைசெவியீ ராறினுக்குந் தூயபாடல்
செப்படியார்மனம்வருந்தச்செய்வதுனக்கழகன்றுதெரிந்துகொள்ளே.

துய்யவிரு முனிவர் தொழுந் திலைப்பெருமா னருள்பழனித் துரைக்கின்பான, செய்யதமிழ் மாலைதொடுத் திடுமடியா ரென்றெம்மைத் தெரியாவண்ண, மையையோ நீநரகுக் காளாவாய் இனிவிலக்க யாராலுண்டு, வெய்யவென திட்டமிசை யாதெனினுங் கொடுங் காலன் விடமாட்டானே. (௩௨)

வேண்பா.

வெய்யவினை தீர்க்குமடி மேலோர் வணங்குமடி
யையந் திரிபை யகற்றுமடி - மெய்யன்ப
ருய்யநெறி காட்டுமடி யொப்பில் பழனியில்வாழ்
ஐயன்முத்து ராம னடி. (௩௩)

விருத்தம்.

கண்ணுதலுஞ் செஞ்சடையுங் கறைமிடறுந் தான்கரந்து கயிலைநீங்கி
யெண்ணரிய முத்துரா மேநதிரய்ய னெனுநாம மெங்குமோங்க
மண்ணுலகி லடியார்க்கு முத்திநிலை பிரமமென வகுக்கவந்த
வண்ணமளிக்குங்கழனிநகரினில்வாழ் குருபரனைவணங்கி வாழ்வாம்.

வேண்பா.

இன்ப மளிக்குமடி யென்வினையை நீக்குமடி
துன்பங்க ளெல்லாந் தொலைக்குமடி - யன்பார்

கருணு கரனுங் கழனிநகர் வாழு
மருணு சலன்சே வடி. (ருடு)

விருத்தம்.

வாயை மூடிக்கொண் டென்னை வருத்துதல்
தாயைப் போன்ற தனக்கழ கல்லவே
தூய கூத்தன் சுததிசை மாமுகன்
மாயன் போற்று மயின்மலைவள்ளலே. (ருசு)

கலித்துறை.

மன்று ணடமிடுந் தேவை யரிமள மாநகர்வாழ்
குன்று நிகர்த்த தனத்தங் கயற்கண்ணி கொற்றவனே
யென்றுநின் பாதத்தை வந்தனை செய்ய வெமக்கிரங்கி
யொன்றலில் பேரின்பந் தாதாமற் றில்லை புகலெமக்கே. (ருஎ)

விருத்தம்.

சதமென வுன்னை நம்பித் தமியனேன் தைய லார்தம்
மதவினை யுற்று லென்னை வய்யகம் பழித்தி டாதோ
நிதமுனை வாழ்த்தி னேற்கு நிராசைமிக் களித்து நின்பொற்
பதமல ரளிப்பாய் தில்லைப் பரனருள் பழனிவேளே. (ருஅ)

கருவுறு மனத்து மாதர் கலவியே கனலே யென்ன
அரவெனப் புலியே யென்ன வகற்று நாளெந்த நாளோ
குரவனே யென்று கும்ப முனிபணி கோவே யன்பாய்ப்
பரவுவர்க் குரியாய் தில்லைப் பரனருள் பழனிவேளே. (ருகு)

ஓதுநின் பதமே யன்றி யொருதுணை யறியேன்வள்ளி
மாதுடன் றெய்வ யானை மகிழ்ந்திடு ங்கணவா மாதர்
நீதறு மாசை முற்றுந் தீர்த்தெனை யினிமே லேனும்
பாதுகாத் திடுவாய் தில்லைப் பரனருள் பழனிவேளே. (சுo)

வேறு.

கோவத்தை விலக்குவிற்றுப் பொறுமை கொண்டேன்
கோலமின்னு ராசைவிற்று விரத்தி கொண்டேன்
பாவத்தை விலக்குவிற்று த்தவமே கொண்டேன்
பவமுழுதும் விற்றுமுத்திப் பணங்கைக் கொள்வான்
லோவத்தை விலக்குவிற்றுத் தாரங் கொண்டேன்
ஒருகுமரன் செட்டியினு முதவுஞ் செட்டி
மேவுபுலி யூர்ப்பொதுவாங் கடையில் வந்து
மென்மேலு மாதாய மேவி னேனே. (சுக)

வேறு.

கண்டனூர் மடத்திலகுங் கண்ணுதலார் மெய்யடியார் காணவேண்டித, தெண்டனிட்டி யானெழுதுஞ் சீட்டுவா சகமிதனைச் செப்பக் கேளீர், அண்டர்பிரான் பொன்மாரி யைங்கரனுக் கபிடேக மான தாலே, வண்டுறையுஞ் செவ்வந்தி மலர்க்குடலை யொன்றெடுத்துவ ரச்சொல்வீரே. (சஉ)

வேறு.

மாதர்தீ மயக்க மொன்றை மாற்றினை யாகி ஞயேன்
கோதின்றி நினது பாதங் குறுகுதற் கைய முண்டோ
வேதனே முதலா யுள்ள விண்ணவ ரெல்லாம் போற்றும்
பாதபங் கயத்தாய் தில்லைப் பரனருள் பழனிவேளே. (சங)

வெண்பா.

சாரீரத் தோடு தமிழ்க்கவி பா டத்தேன்
மாரிநிற்குப் பெய்யவெற்கு வாஞ்சையே - நாரியொரு
பங்குடைய தில்லைப் பரமசிவ னீபழனித்
தங்கவணி காநிதியந் தா. (சச)

எண்ணப் படிநாயேற் கெல்லா மருண்முருகா
வண்ணமுன்மேற் பாடமுழு வாக்குத்தா - மண்ணதனை
யுண்டோன் றிருமருகா வொப்பில்புலி யூர்நீல
கண்டனரு ளுஞ்சண்மு கா. (சரு)

மாதுபங்கின் மேவுநடன் மைந்தாவென் றீமனமெய்
போதுமுன்றாட் போதிற் பொருந்தவே-தீதில்
தவக்குன்றாங் கும்பமுனி தாழ்ந்துபணிந் தேத்துஞ்
சிவன்குன்றாய் நீகருணை செய். (சசா)

விருத்தம்.

பொன்றுரும் புலியூரன் றரும்பழனிப் பொருப்பாவென் புனித வாச்கைக், கொன்றும் புகழ்பாட விரைந்தொப்புக் கொண்டனை யென் குரம்பைதன்னை, யெந்நேர மும்பணிசெய் திருக்கவைத்தா யுளத்தினையே னிழிவாந்நிய, மின்றுர்பாற் செலவிட்டா யவருனக்கு ஞாதியரோ விளம்புவாயே. (சஎ)

வெண்பா.

தேசிகனார் பத்தி சிறிதுமிலாச் சேயிழையே
ஆசையென்பால் வேண்டா மகற்றிவிடு - தோசிக்
கலிபிடிக்க மாட்டாது கைபனிரண் டுள்ள
புலிபிடித்துக் கொண்டதெனைப் போ. (சஅ)

### விருத்தம்.

வருடந்தோறுந் தைப்பூசம் வந்துன்றாளை வணங்குகின்றேன்
கருடனூர்தி தொழுங்கூத்தன் மைந்தாநினக்குங் கருத்திருந்தாற்
புருடனெனவே யிருமாதர் பொருந்துங்கோவே யாலயப்பொன்
திருடருறையூர் வாசமினிச் செய்யேன்பழனி த்தேசிகனே. (௪௯)

### வேறு.

ஆலயப்பொன் னெடுப்போரைக் கொல்லவலி யிலையென்று லவ ரிருப்பிற், சீலமுடை யோருறையா ரகலுவேன் சிதம்பரநற் றிருப்பு ராணஞ், சாலவுரைப் பதையுணர்ந்துந் தனியிங்கு வசிப்பேனோ தாண்டவஞ்செய், நீலகண்ட னருள்பழனி நிருபரே றேவிடைதா நிதியுந்தாவே. (௫௰)

### வெண்பா.

நல்லசெட்டி யார்மாலை நற்றமிழ்க்கு நன்மதுரக்
கல்லுளியார் மாலைக் கவிதனக்குந் - தில்லைச்
சபேசனரு ளும்பழனித தாதாவே யெற்குக்
குபேரநிகர் செல்வங் கொடு. (௫௧)

விடையுங் கொடையும் விரைந்துதா செவ்வேற்
படைதாங்குஞ் செங்கைப் பரனே - சடைமேலோா
கங்கைவைத்தோ னீபழனிக் காங்கேயா நின்கழலைச்
சங்கையின்றி நம்புமெற்குத் தான். (௫௨)

### விருத்தம்.

விஞ்சுநாள் காத்திருந்தோர்க் கினஞ்சின்னாள் செலவேண்டுமிகு தியான, மஞ்சுலவு வரைநிகர்த்த மாழைதரு தற்கென்றான் மன்று ளாடு, மஞ்சுமுக னருள்பழனி யாறுமுகப் பெருமானே யஞ்சே லென்றுன், றஞ்சமென வந்துமிகத் தமிழ்பாடுந் தமியேற்கோர் தவ லைகூறே. (௫௩)

### கலித்துறை.

ஆபத்தை நீக்கிக் கொடைதா விலையெனி னம்பொன்மலைச்
சாபத்த னல்குந் தனவணிகாநற் றமிழ்த்தொடையு
நீபத்தொடையு மணிமார்ப நின்னன்பர் நேசமுறக்
கோபத்தை நீக்கி விடைதா பழனிக் குருபரனே. (௫௪)

பூமாலை யோர்கையும் பாமாலை யோர்கையும் பொற்பொதுவார்
சீமான ருளும் பழனு புரியுறை தேவினுக்கு
நாமாது கஞ்சநற் பூமாது பேரின்ப நண்ணுகின்ற
மாமா கவருந் தொழுஞ்சந்நி திக்கொடு வந்தனனே. (௫௫)

ஏடா ரிதழிச் சடைமுடியான் றில்லை யேமமன்றில்
பீடார் நடம்புரி பெம்மா னருளிய பிள்ளையென
நாடார் புகழும் பழனியப் பாவுனை நம்பியயான்
கூடா வொழுக்கத்திற் கூடா வளத்தைக் கொடுத்தருளே. (௫௬)

கலிவிருத்தம்.

முண்ட கன்றொழு முக்கட் பிரானருள்
தண்ட பாணிக்குச் சாத்துநின் மாலிய
முண்டை கட்கு முடிக்கக் கொடுப்பது
விண்டு போச்சு விரத்திவந் தெய்தவே. (௫௭)

விருத்தம்.

கொன்றார் புலியூ ரிறைமீமயிற் குன்றின்மே மய
வென்று யகர்க்கோ றுகலித்துறை பன்னி ரண்டுந்
தன்னோர் சனிதா னத்திலின்புறச் சாற்ற றுனே
யுன்று லெனக்குச் செய்தக்க வுதவி யாமே, (௫௮)

விருத்தம்.

வெய்யபுலா னன்றென்றே நினக்கோதும்பதகர்மொழி வீய்ந்த வாறும், துய்யநட னிபழனித் துரையருளாற் குன்மவலி தொலைந்த வாறு, மையன்பாற்காற்பிணிதீர்ந் தருள்பெற்றோன் றமிழ்வலியு மண்ணல் கோயிற், செய்யவிழாப் பூசனையின் சிறப்புமெனக்கெழுதுனது திருக்கை யாலே, (௫௯)

வெண்பா.

தென்புலியூர் மேவுதில்லைச் சிற்றம் பலவனருள்
கொன்பழனி மேவுங் குணக்குன்றே-யன்பு
மெலியாம றாட்குநாண் மிக்கதமி ழுன்பாற்
சலியாம லோதவரந் தா. (௬௦)

கலித்துறை.

இம்மிய ளுனன்று தேங்காயிற் சின்னநிற் கீயநின்பொன்
விம்மிய கொங்கையர்க் கீயவுகே மிலேச்சனன்று
தம்மிணைக் கூத்தர் குமராநிற் பாடுந் தமிழ்மறுக்கக்
கம்மிய ளுனன்றுகாண் பழனுபுரிக் காங்கையனே. (௬௧)

விருத்தம்.

தான்கட்டி வைத்தவிதை பலன்படுநா ளெப்போது ந்தகுதி யான, தேன்கட்டும் பூஞ்சோலைத் திலைப்பெருமா னருள்பழனிச் செட்டியார்க்கு, நான்கட்டுந் தமிழ்மாலை நாடெங்கு மணக்குநாள் நல்ல வள்ளி, மான்கட்டுந் தோள்வள்ளல் புகழ்மலிநாள் சமீபத்தில்வந்த தன்றே. (௬௨)

வெண்பா.

செட்டறியேன் வேளாண்மை செய்தறியேன் சேவகத்துட்
பட்டறியேன் வேறும் பழகறியேன் நட்டன் மைந்தற்
கல்லும் பகலு மறுமுகவா வென்றுதமிழ்
சொல்லுவதே யெற்குத்தொழில். (சுங)

நாளுக்கு நாட்பழனி நாயகனார் நற்பதுமத்
தாளுக்குப் பேரன்பு தந்தானே-வேளுக்குச்
சத்துருவாங் கூத்தனார் தந்தமுரு கேசருக்கு
மித்துருவா னேனான் மிக. (சுச)

கலிநிலைத்துறை.

குற்றஞ் செய்வதே யென்றொழி லதைக்குண மாக
முற்றுங் காப்பதே நின்றொழி லாமெனின் முக்கண்
பெற்ற நாயக னருளிய பழனியம் பிறங்க
லுற்ற நாயக முகமறுக் கென்னுரைக் கேனே. (சுரு)

துரும்பா மதித்தவிவ் வாக்கையை நின்னை த்துதிக்குமொரு
பெரும்பாவி யாசைகொண் டேபல மாதி பெரும்பசிக்குத்
தரும்பான் மையரிங் கிலையா கினும்லுத்தர் தம்மடத்தும்
விரும்பானின் றேன்பல னிபழ னுபுரி வேலவனே. (சுசு)

விருத்தம்.

தகைமையர் புகழ்பெறு மைங்கர முதலே தற்பர சிற்பரனே
அகமிசை யடியார் நினைவின் படிவந் தன்பா யருள்வோனே
நகரினி லுயர்சொன நாதபு ரத்தினினுடிவ ளருவோனே
செகமுழு துந்துதி முத்திவி னயக தேவசி காமணியே (சுஎ)

வெண்பா.

கோவணத்தைத் தானிறுக்கிக் கொள்ளாமற் கூத்தியர்க்கு
மாவணத்தை யீந்த மடப்பயல்கள் தீவணத்தோன்
தந்திமெ யூரகிரிச் சண்முகநா தாகூத்தன்
வந்துதைக்கி லென்ன செய்குவான். (சுஅ)

விருத்தம்.

வெய்யமின்னா ரிருமுலையைத் தழுவென்றோ கரம்படைத்தான் வேத னெற்குப், பொய்யுரைத்துக் கெடுவென்றோ வாய்படைத்தா னெப்போதும் புணர்ச்சி வேண்டி, நையவென்றோ வுளம்படைத்தா னுனைநாடப் படைத்திலனோ நடஞ்செய் கின்ற, ஐயவையோ வென் செய்வேன் எனதுதீ வினையகற்றி யாட்கொள் வாயே. (சுகூ)

முற்பவத்தி லுன்றனைத் துதியாத தீவினையோ மோனமுற்ற
சிற்பரருக் கன்புசெய்யாத் தீமையோ வல்லது நற் றேசிகேச, னற்பத
த்தை வழிபடாப் பெரும்பிழையோ வறிகிலே னடேசாமாதர், அற்ப
வின்பம் வேண்டியே யலைக்கழிந்தேனினியேனு மருள்செய் வாயே.

வேறு.

செய்யதுன் மதிவருட மானியாந் திங்களிற் றிகழ்தேதியீரெட் டினிற், சீர்ச்சுக்ர வாரமதி லோதுபூ ரட்டாதி திதிசஷ்டி கடகலக்னம் ஐயமில் லாதடிய ருக்கெளிய ளுந்தில்லை யம்பலத் தாடுகின்ற, அங்க மலை பாதமதை எப்போது நெஞ்சைவிட் டகலாத பேரன்பினன், துய் யவா ரூரினில் விழுப்புலிய ரென்கின்ற தொண்டர்குல மதிலுதித் தோன், சொல்லுசோ மாக்கந்த னென்னுநாமத்தினன் றூயசற்குண நிறைந்தோன், தையலர்க ளாசையென் கின்றபெரு நோயைத் தணி த்திடும் பெருவயித்யன், சச்சிதா நந்தமாஞ் சிற்சபாபதியுடைய தாளி னையடைந்தநாளே. (எக)

வெண்பா.

நாரா யணன்மருக னற்கீர நற்றமிழைப்
பாரா யணஞ்செய் பவர்க்கினியன்—காரார்
மிடற்றன் றரும்பழனி வெற்புடைய வேந்த
னிடத்தன்புற் றேன்குறையெற் கில். (எஉ)

ஐயமிலை யையமிலை யையமிலை யாறிரண்டு
கையுடைய மைந்தன் கரிநாமத்—தையல்
புருடன் றினைப்புனத்தோர் பூவையைக் கொண்ட
திருடனெனக் கீவான் றிரு. (எங)

தில்லைமன்று ளாடுஞ் சிவனீ பழனிமலை
நல்லவணி காவுனக்கு நாடோறுஞ்—சொல்லுதமிழ்ப்
பண்ணறிவே னல்லாது பாதகர்போற் றுன்மார்க்கம்
பண்ணறியே னென்னைமுகம் பார். (எச)

ஐயந் திரிபை யகற்றிமறை யந்தத்தைக்
கையினெல்லி யங்கனிபோற் காட்டுமே—துய்யபொன்
மன்றிலுறை யும்பெரியோன் மைந்தனு கும்பழனிக்
குன்றிலுறை யுஞ்சற் குரு. (எரு)

உள்ளங்கை நெல்லியென வோர்மறையி னுச்சியினை
கள்ளமற நாயேற்குக் காட்டுமே—வெள்ளநீர்
ஒன்றுஞ் சடாமௌலி யுத்தமனீ யும்பழனிக்
குன்றிலுறை யுஞ்சற் குரு (எசு)

ஒன்றுங் குறையில்லை யுன்னையுற்ற நாண்முதலா
மன்றுடையா னீபழனி வள்ளலே—யென்றோதுந்
தீயமனஞ் செய்கொடுமை செப்பரிதத் தீமையெலா
மாயத் திருக்கருணை வை. (எஎ)

ஏழைக் கிரங்கினு லேற்றமுனக் கில்லையோ
மாழைமன்று னீபழனி வள்ளலே—கோழை
மனத்தைத் திருத்தியுன்றாண் மன்னிமகிழ் வெய்துங்
கனத்தைவிரைந் தேயளித்துக் கா. (எஅ)

பூதேவர் நாடோறும் பூசிக்கு நற்புலியூர்
மாதேவ னீபழனி வள்ளலே—சீதேவி
போற்றுந் திருவடியாய் பொல்லாத தீவினையை
மாற்றியெனை யாளமனம் வை. (எகூ)

கூத்தாடி யீபழனிக் கோவேயென் றீயமனங்
கூத்தாடு மென்ன கொடுமையோ—ஆத்தமாய்
நம்புமெனைக் கைவிடுதல் ஞாயமோ ஞானமொரு
கும்பமுனிக் கீமுருகா கூறு. (அ0)

எண்டோள னீமுருகா வென்றுரைப்ப தல்லாற்றீ
முண்டைகள்பா ல்யாது மொழியுமோ—அண்டம்
அதிரக் கூவுங்கோழி யங் கொடியோற் கின்பா
மதுரக் கவிசொலுமென் வாய். (அக)

முல்லைநகை மங்கையர்தம் முன்றிலினு மாமூடர்
புல்லருறை தேசத்தும் போகுமோ—நல்ல
அனகர்தொழுங் கூத்தன ருள்பழனி யண்ணல்
கனகிரியைங் சூழுமென்றன் கால். (அஉ)

கலிவிருத்தம்.

தலையி லாடுஞ் சிவனரு ளுஞ்சிவ
மலையி லார்முழு வள்ளற்கன் பாளர்பொற்
கலையிலாசை யலாலங் கனையர்பூண்
முலையி லாசை யெனக்கிலை முற்றுமே. (அங)

விருத்தம்.

ஆர்க்குஞ் சேவடி யானருள் பழனியெம் மண்ணல்
மேற்கு வாசனல் வீட்டினைச் சூழ்வதே யன்றி
மூர்க்கர் வைகிய விலங்களி லினிச் செலன் முறையோ
தீர்க்க மாகிய நெஞ்சமே செப்புதி யெனக்கே. (அச)

## வெண்பா, நால்வர் துதி.

மாலைமாற் றிப்பூ மலர்த்தா டருமிறைக்கு
மாலைமாற் ருதிதமிழ் மாலையினை—சீலமாய்ச்
சாத்துந் திருஞான சம்பந்தா நின்றிருத்தாள்
ஏத்தும்படி வரமெற் கீ. (அ௫)

நாவுக் கரசே நடமாடுந் தில்லைநகர்க்
கோவுக்கின் சொற்பொழிந்த கொண்டலே பாவிக்கும்
உன்போலச் சற்குருவு மோரன்பு மோரறிவு
மின்பால் விரத்தியுந்தா வே. (அ௬)

தன்னைநே ரும்பரவை சங்கிலியா ரென்னுமெம
தன்னையர்க்கு நாயகமா மண்ணலே - என்னைத்தீப்
பாதகமின் ஞர்க்காட் படுத்தாம லுன்பனுவற்
றூதனுக்கா ளாம்பரிசு சொல். (அ௭)

அம்பரிகொள் வான்கொடுத்த ஆடகத்தை யாடுகின்ற
சம்புபதத்தர்க் கீந்த தயாபர-வம்பிலே
காலம்போக் காது கரணமொரு மூன்றுமிறை
பாலன் புறக்கடைக்கண் பார். (அஅ)

## விருத்தம்.

சித்தரும் பரவனின்ற சீர்மிகுங் கழனி தன்னிற்
பித்தனு மெனையு மாளப் பேரரு ளுருவா யுற்ற
முத்தனும் முத்து ராம முதல்வனற் கமல பாத
நித்தமுந் தொழுது வாழ்த்தி நெஞ்சினு ளிருத்தல் செய்வாம் (அ௯)

## கலித்துறை.

பூவே கருணைக் கடலே நவநிதிப் பொக்கிஷமே
கோவே யிருபத் தொருவள்ள லேகொடைக் கேற்றகற்பக்
காவே சிவந்தி மறையோ னுதவிய கண்மணியே
தேவே புனல்வயற் சேறு பதிக்குரு தேசிகனே. (௯0)

## விருத்தம்.

கலியுக மௌனமூ டர்க்குக் கழறிடத் தெரியு மன்றி
மலிதயை நம்பாற் செவ்வேள் வைத்ததை யவர்தே ராரே
புலியொடு பாம்பும் போற்ற பொற்பொது தன்னி லாடு
மொலிபதன் மகவை நம்பி யுலகினிற் கெட்டார் யாரே. (௯௧)

வாசகநீ யெழுதியது வந்ததுகண் டேன்மகனே மன்று ளாடு
மீசனருள் பழனிமலைக் கிறையருளாற் குறையில்லை யினி நமக்கு
மாசிலாச் செந்தமிழுக் கன்பால்நான் விடைபெற்று வருநாள் காறும்
ஆசிலாப் பழயகணக் கைத்திருந்த வெழுதுபிறர்க் கஞ்ச லேகே. ()

## வெண்பா.

சீரார் துறவடிகள் சேவடிகள் வாழிபுலி
யூரிறைவன் ருள்வாழி யோர்மறையைப் - பாருய்ய
செந்தமிழாற் பாடுந் திருஞான சம்பந்த
வெந்தைமுத லோர்வாழி யே. (கூ௪)

## விருத்தம்.

சிறக்குஞ் சேவை நின்சேவை செழிக்குஞ் சீர்த்தி நின்சீர்த்தி
பிறக்குஞ் சேயு முனக்கடிமை பிடிப்பு மூன்றும் பிடித்தேன்யான்
சுரக்குங் கதிர்வேற் சூர்நடுங்கச் சுடர்வா யண்ட முகடுருவ
பறக்குஞ் சேவற் கொடியுடையாய் பழனிக்குமரப் பெருமானே. ()

ஆமா விகழ்ந்திட லாமா யினியுள வல்லவென்றுற்
போமா வுமைவிடப் போமா வுமக்கிந்தப் புத்திவர
லாமா பராமுக மாமா நளின மலர்க்கடப்பந்
தாமா கொடுமை யிதாமா தெண்டாயுத சண்முகனே. (கூ௫)

## வெண்பா.

மன்றுடையா னீபழனி வள்ளலினைப் பாடுமெனக்
கென்று நலமளிக்க வெண்ணுமே - நன்றுபெற
விண்மகவா னுக்களித்த மேதகுமா யூரகிரிச்
சண்முகனைச் சேர்ந்தவள்ளித் தாய். (கூ௬)

அப்பாரும் வேணி யரனு ரருள்பழனி
யப்பாவென் றேற்கின் பருளுமே - எப்போதுங்
கூர்ந்தமே லாங்கருணைக் குன்றைக் குடிக்குகனைச்
சார்ந்ததெய்வ வாரணத்துத் தாய். (கூ௭)

பரமாத ரென்னும்விடப் பாம்பு கடியாம
லரனீ பழனிமலை யப்பா - கரமேவுந்
தண்டப் படையாற் றடுத்தே யெனைக்காநின்
றண்டைச் சரணே சரண. (கூ௮)

## கலித்துறை.

மானைப் புரையும் விழியார்த மாசை மயக்கமெனும்
ஊனைக் கடந்துனை யென்றடை வேன்றவ ரொன்றுதில்லைக்
கானத் திறைவ னருள்பழ னுபுரிக் கந்தையனே
தானப் பிரபல மார்மயின் மாமலைச் சண்முகனே. (கூ௯)

மின்னைப் புரையு மிடையார்த மாசையின் மெத்தநொந்த
வென்னைப் புரந்திட நீதான் றிருவுளத் தெண்ணலென்றே

பொன்னைப் புரையும் பழனு புரியுறை புண்ணியனே
தன்னைப் புரைநட னீமயின் மாமலைச் சண்முகனே. (௧00)

ஈனமின் னூர்த மிருமூலை யாசைவிட் டென்றனது
ஞான மணங்கமழ் பாதார விந்தத்தை நானடைவேன்
வானவர் போற்று நடனீ பழனி வணிகபொல்லாத்
தானவ ருக்கிக லோய்மயின் மாமலைச் சண்முகனே. (௧0௧)

வண்டார் குழலியர் மாமூலை யாசை மயக்கந்தினை
விண்டுன் றிருவடித் தாமரை யேநினை மேவிடுவேன்
கண்டங் கரிய நடனீ பழனிக் கனகிரியாய்
தண்டமி ழோசை மவிமயின் மாமலைச் சண்முகனே. (௧0௨)

நற்குண மாதரிருமூலை யாசை துறந்துனது
நற்கம லப்பத மென்றடை வேன்றில்லை நாதன்மைந்தா
பொற்கல சக்கொங்கை யென்றுயர் மேவும் புலிதமுனி
சற்குரு வென்று புகழ்மயின் மாயலைச் சண்முகனே. (௧0௩)

## வெண்பா.

முன்னஞ் சருந்துதில்லை முக்கணன்மைந் தாவென்றே
நன்னெஞ்சாற் செந்தமிழ்சொ னூயேனைச் சன்னெஞ்சத்
தப்பு வணிகரினஞ் சாரவிடா னேபழனித்
துப்பு வணிகத் துரை. (௧0௪)

அம்பலத்தி லாடு மரன்மைந்தா வானோர்முசன்
தம்பியெனப் பாடுந் தமியேனை - வம்பரெனுந்
தீய வணிகரினஞ் சேரவிடா னேபழனித்
தூய வணிகத் துரை. (௧0௫)

கந்தா குறத்தி கணவா கனகமென்றேண்
மைந்தா வெனப்பாடும் வாயேனை - அந்தந்தோ
பங்க வணிகர்முகம் பார்க்கவிடா னேபழனித்
துங்கவணிகத் துரை. (௧0௬)

## கலிவிருத்தம்.

நாட்டி லாசை நரர்க்கு நறுந்திலைக்
காட்டி லாசைமுக் கண்ணனுடை யானுக்கு
வீட்டி லாசைமெஞ் ஞானிக்கு மெய்யன்பர்
பாட்டி லாசை பழனிப் பிரானுக்கே. (௧0௭)

### விருத்தம்.

பட்டிமின்னா ருறவகன்ற பழனிமலைப் பசுங்கிளியே பகரக்கேட்டி
மட்டில்லா நிதிபெறுவா னொருகவிஞன் கல்லுளிநின் மாலைபாடி
அட்டியின்றிப பெறநின்றா னுதவிலனலருளுகெனவம்பொனீயுஞ்
செட்டியின்பாற்சென் றுடன்சேய்சமயம்பார்த்துவந்துசெப்பவாயே.

உள்ளதெல்லாஞ் செந்தமிழாலு ரைசெய்த நாயினேற் கொல்லையேபொன், வள்ளலா நீநல்கா வழக்கென்ன வழக்கையா மன்றுளாடி, பிள்ளையா கியபழனிப் பெருமானே யுனைக்கவிதை பேசுநாவிற், கொள்ளியினைத் தூக்கிவைத்தாற் குற்றமென்னே குணக்கடலே கூறுவாயே. (௧௦௬)

குருகிரியி லிருந்துதிரு வையாறு வரும்வழியிற்சோதிலாத, திருவுருவங் கொண்டெம்மை யாளவந்த அவதூத சிவத்தையன்டா, பருகுகின்ற வாரமுதைச் செந்தேனைத் திருததில்லைப் பதியினமேய, மருமலர்ப்பூம் பதத்தானை வந்தித்துக் கரங்கூப்பி வணங்கினேனே.

விடுதிக்கவிகள் முற்றிற்று.

ஆக செய்யுள் ௭௨௮.